# முத்தமிட நேரமில்லை

அனுராதா ரமணன்

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை-600 017.

முதற்பதிப்பு : அக்டோபர், 2000
உரிமை : ஆசிரியருக்கு

MUTHAMIDA NERAMILLAI
By : ANURADHA RAMANAN
First Edition : October, 2000
Pages : 160
Paper used : 11.6 Cream wove

விலை : ரூ. 38-00

THIRUMAGAL NILAYAM
Old No : 55, New No : 16,
Venkatnarayana Road,
T. Nagar, Chennai-600 017.
Phone : 4342899, 4327696
Fax : 91—44—4341559

**திருமகள் நிலையம்**
பழைய எண் : 55, புதிய எண் : 16,
வெங்கட்நாராயணா சாலை
தி.நகர், சென்னை-600 017
போன் : **4342899, 4327696**
Fax : 91-44-4341559
3452
4818025
அச்சிட்டோர் :

ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5.

# பதிப்புரை

சரித்திர நாவல்கள், சமூக நாவல்கள், பொழுது போக்கு நாவல்கள் என நாவல்கள் பல வகைப்படும்.

இந்நாவல் பொழுது போக்கு நாவல் வகைப்பட்டது என்றாலும் கதைக்களம் திரைப்படக்கதை சம்பந்தப் பட்டிருப்பதால் திரைப்படத் துறையின் அவலங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. முக்கியமாக திரைப் படத்தில் நடிக்க ஆசைப்பட்டு குடும்பத்தை விட்டு, கணவனையும் குழந்தைகளையும் விட்டு ஓடிவரும் இளம் பெண்கள் பங்காரு அம்மாள் கையில் சிக்கி விலை மகளிராக்கப்படும் அவலம் படிப்பவர்களைக் கண் கலங்க வைக்கும்.

கண் நிறைந்த கணவன், தங்க விக்கிரகம் போன்ற குழந்தை இருந்தும் கிராமத்தில் நாடகம் பார்க்கச்சென்ற குடும்பப் பெண் அபிராமி பங்காரு அம்மாள் வலையில் சிக்கி திரைப்படக் கதாநாயகியாகலாம் என்ற கனவு கண்டு, கடைசியில் துணை நடிகையாகத்தான் முடிகிறது. பல ஆண்டுகளுக்குப்பின் தன் கணவன் இருக்கும் ஊருக்கே படப்பிடிப்பிற்காக வரும் அபிராமிக்கு தன் பழைய குடும்ப வாழ்வு நினைவுக்கு வருகிறது. இந்த மோசமான திரைப்பட வாழ்விற்கு முழுக்குப் போட்டு விட்டு, பழையபடி குடும்ப வாழ்வு கிட்டாதா என ஏங்குகிறாள்.

கணவனைச் சந்தித்து காலில் விழுந்து மன்றாடிக் கேட்கிறாள். கணவன் சத்தியமூர்த்தி அவளை, மன்னித்து தாய்க்காக ஏங்கும் குழந்தைக்காக அவளை ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறான். அன்று படப்பிடிப்பின் கடைசி நாள். டைரக்டரிடம் தன் விருப்பத்தைச் சொல்லி திரைப்படத்துறையை விட்டு விலகும் கனவில் அபிராமி மிதந்து கொண்டிருக்கிறாள்.

ஆனால் இதுவரை அபிராமி கனவு கண்டு கொண்டிருந்த கதாநாயகி வாய்ப்பு கிடைத்துள்ள செய்தியை டைரக்டர் சொல்ல, குடும்பக் கனவை மறந்து மறுபடியும் கதாநாயகிக் கனவுடன் கிராமத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்கிறாள் அபிராமி. அபிராமியின் கணவன் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகிறான். வீட்டில் ஒரு புதிய அதிர்ச்சி என கதை திரைப்படம் பார்ப்பது போல சம்பவங்களை சுவையாகத் தந்துள்ளார்.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் கிராமியப் பாடல் இடம் பெறுவது கதைக்கு வலுவூட்டுகிறது. குறைந்த கதாபாத்திரங்கள், என்றாலும் அதை சுவையுள்ளதாக எழுதிய திறமை அனுராதா ரமணனையே சேரும்.

பொழுது போக்கிற்காக மட்டுமின்றி, திரைப்படத் துறையில் ஈடுபடும் பெண்களின் அவலநிலையைப் படம் பிடித்துக் காட்டி, திரைப்பட மோகம்கொண்டு அலையும் பெண்களுக்கு ஒரு பாடமாக அமைந்த நாவல்.

**பதிப்பாளர்**

31452
481025

# முத்தமிட நேரமில்லை

## 1

**'முத்தா யுதித்த முழுமதி நிலவொளியே
நித்தம் உனை நினைத்து நெருப்பா எரியுதடி!'**

"பால் பொங்கற வாடை வீசுதே...தம்பி உங்க வீட்டுலயா...

அண்டை வீட்டு சுப்பாத்தாள் குரல் கொடுத்தாள். சத்யமூர்த்தி விழுந்தடித்துக்கொண்டு ஓடுகிறான். நிஜம் தான். அவன் வீட்டில்தான்-பால் பொங்கி அடுப்பு அணைந்திருந்தது.

"த்சொ த்சொ..."

அவன் அடுப்பிலிருந்த மீதப் பாலை இறக்கினான். கூடத்து மூலையில், பாயில் கவிழ்ந்து படுத்திருந்த மகன் முகுந்தனின் அருகில் வந்து அமருகிறான்.

குழந்தை அயர்ந்து உறங்குகிறான். ஏழு வயசு சிறுவனின் மூடிய இமைக்குள் என்னென்ன கனவோ... சிவந்த இதழ்கள் சிறிதே பிளந்திருக்க—ஒரு கை தலையணையை அணைத்திருக்க...

"முகுந்தா... எழுந்திரு...

''...ம்...அம்மா...''

தந்தையின் குரலுக்கு—மெல்லிசான முனகலுடன் திரும்பிப் படுக்கிறான் அவன்.

அம்மாவின் முகம் தெரியாவிட்டாலும் அப்படி ஒருத்தியைப் பற்றிக் கேள்வியே படாவிட்டாலும்—தூக்கத்தில் கூட சர்வ சாதாரணமாய் 'அம்மா' என்கிற புலம்பல்தானே வெளி வருகிறது...

வருத்தத்துடன் தனக்குள் சிரித்துக் கொள்கிறான் சத்யமூர்த்தி.

மனசுக்குள் ஒரு முகம்—ஒரு நாளில் ஓராயிரம் தடவைகளாவது எட்டிப் பார்க்கும் முகம்—மஞ்சள் பூசிய பட்டு கன்னங்களைத் தொட்டுப் பார்க்க வேண்டும் போல ஆவலைத் தூண்டும் முகம்—நீண்ட பெரிய கருவிழிகளால், பெருமையுடன் பூரித்திருக்கும் முகம்-சின்னஞ்சிறு சிவந்த இதழ்களால் சோபை மிகுந்த முகம்...

'காலங்கார்த்தால இவ நினைப்பு வந்திட்டா வேலையெல்லாம் ஆனாப்பலதான்...'

அவன் எழுந்திருந்து வாசலுக்கு வருகிறான். பக்கத்து வீட்டுப் பெண்மணி—இவனது வீட்டுக்கும் சேர்த்து சாணமிட்டு, கோலம் போட்டுக் கொண்டிருக்கிறாள்.

இது— அதுதான்— வாசல் தெளித்துக் கோலம் போடுவது...இது ஒன்றுதான் அவன் செய்யாதது... மற்றபடி அவனுக்கும், முகுந்தனுக்கும் தேவையான எல்லாவற்றையும் அவனேதான் செய்து கொள்கிறான். சமைப்பது, துணி துவைப்பது,வீடு பெருக்கி துடைப்பது எல்லாவற்றையும்.

முதன்முதலில் இந்த ஊர், இதன் மக்கள், இவர்களின் விடாப்பிடியான கேள்விகள். கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது சத்யமூர்த்திக்கு...



ஆனால் இந்த கிராமத்தின் இயற்கை அழகு...காவிரி பாயும் வளமான பூமி...இதன் மண் வாசனை...சட்டென ஒட்டிக் கொள்ளும் அப்பாவி மக்கள்... படிப்பறிவே இல்லாத தங்களின் நடுவில்—ஓரளவு படித்த, பள்ளி ஆசிரியரான சத்யமூர்த்தி இருப்பதையே பெரிய கௌரவமாக நினைப்பவர்கள்... மனசில் விகல்பமேயில்லாமல் குழந்தைத்தனமாய் பேசிச் சிரிக்கும் கிராமத்துப் பெண்கள்...

இதெல்லாம் நாளடைவில் மிகவும் பிடித்துப் போயிற்று அவனுக்கு.

அவன் முன்பிருந்ததும் கிராமம்தான். கொஞ்சம் முன்னேறிய கிராமம். அந்த கிராமத்தில்தான் அவனது திருமணம் நடந்தது. அவனுடைய இல்லறம் நடந்தது. குழந்தை முகுந்தன் பிறந்ததும் அங்கேதான்... இறுதியாக அந்த ஊர் மனிதர்களின் முகத்தில் விழிக்கவே அவமானப் பட்டு குழந்தையுடன் ஓடி வந்தான்...

அவனுக்கு அடைக்கலம் தந்தது—இந்தக் காவிரியும், அவளின் அன்புக் கரங்களும்தான்...

வந்த புதிதில்— முகுந்தன் ஒரு வயசுக் குழந்தை. அவனுக்கு—சங்கெடுத்துப் பால் புகட்டக்கூடத் தெரியாத நிலையில் சத்யமூர்த்தி குழந்தைக்கு இலேசாக உடம்பு சுட்டால் கூடப் பதறிப் போவான். தூக்கிக்கொண்டு அடுத்த வீட்டு சுப்பாத்தாளிடம் ஓடுவான்.

''ஏன் தம்பீ... பச்சைபுள்ளய வச்சுகிட்டு இப்படித் திண்டாடறயே. பேசாம இன்னொரு கல்யாணம் பண்ணிக்கோயேன். போறவ போயிட்டா, பூவோட பொட்டோட மவராசியா...''

இது மாதிரி— சுப்பாத்தாள் உபதேசிக்கும் போதெல்லாம் கல்மாதிரி நிற்பான்.

மனசுக்குள் அவள் வந்து நிற்பாள். சிரிப்பாள். சிணுங்குவாள்...

அவள்...

அபிராமி.

பெயரை உச்சரிக்கும்போதே அடி—நாவில் தித்திக்கும்.

'ச்சு. என்னமா இருப்பா...யாரு போட்ட கண்ணோ சேர்ந்து வாழ முடியலையே...'

திண்ணையில் வந்தமர்ந்த சத்யன், மனசுக்குள் நொந்து கொள்கிறான்...

''வாத்தியாரய்யா... இன்னிக்கு பகல் சாப்பாட்டுக்கு வருவீங்க இல்லே...''

அடுத்த வீட்டு அன்னம், அங்கிருந்தபடியே குரல் கொடுக்க—

'வழக்கம்போல ஒரு மணிக்கு வருவேன் அம்மா...'

—இவன் பதிலளிக்கிறான், இதற்குள், பள்ளிக் கூடத்தின் தலைமை ஆசிரியர், அவனைப் பார்க்க வர—அன்னம்மாள், கேட்க வந்ததைக் கேளாமல் நாணிக் கோணி உள்ளே மறைகிறாள்.

''அம்மால்...வெளில வாங்க, இவரு நம்ம ஸ்கூல் ஹெட்மாஸ்டர்...என்ன கேட்க வந்தீங்க...''

அன்னம், தட்டி மறைவில் உடம்பை மறைத்தபடி எட்டிப் பார்க்கிறாள்.

''நேத்து நம்ம ஊருல சினிமாக்காரங்க வந்து எறங்கியிருக்காங்களாம்..இன்னிலேருந்து 'ஜூட்டிங்' நடக்கப் போவுதாம்...''



''என்னது...ஜூட்டிங்கா...''

''ஆமாங்க. அப்படித்தான் சொன்னாங்க. சினிமா படம் புடிக்கிறார்களாம்..அது என்னமோ—ராவுத்த ரோட வெத்தலைக் கொடிக்கால் பக்கம் நடக்கப் போவுதுன்னாங்க. தேசிகாச்சாரியோட தென்னந்தோப்புலன்னு சொன்னாங்க. இப்ப நாம வேலுத்தம்பி வந்து அதெல்லாம் இல்லே—காவேரிக் கரையோரம் எல்லைக் காளியம்மன் கோவிலண்டை மத்தியானம் நடக்கப் போவுதுங்கறான்.. நீங்க வீட்டுக்கு சாப்பிட வர்றப்ப எங்கே நடக்குது எத்தினி மணிக்குன்னு கேட்டுட்டு வாங்களேன்...''

அவள், இதைச் சொல்லிவிட்டு மறைய தலைமை ஆசிரியர் சங்கரன், தலையில் அடித்துக் கொண்டார்...

''இங்கேயும் இதே பேச்சா..இப்பத்தான் நம்ம வீட்டுல இந்தப் பிடுங்கல் தாளாம வெளிலக் கிளம்பி வந்தேன்...இப்பத்தான் வயக்காட்டுப் பக்கமெல்லாம் படப்பிடிப்பு நடத்தறது சகஜமாயிடுச்சே..'சே, இந்த சினிமாக்காரங்க வந்து, கிராமத்தையே பாழாக்கிடறாங்க...நம்ம கிராமம் இத்தினி நாளு இவங்க கண்ணுல படாம இருந்ததே பெரிசு..''

அவரின் முணுமுணுப்பு நிஜம்தான். என்றுமே அமைதி தவழும் அந்த ஊர்—இன்று அலாதி சுறுசுறுப்பாய் இயங்கியது..அறிந்தவர், தெரிந்தவர் எதிர் பட்டால் என்னவோ கல்யாணம் விசாரிப்பது போன்ற தொரு உற்சாகம்...

''ஏலேய்...சினிமாக்காரங்க, பெரிய பண்ணை வீட்டுல எறங்கியிருக்காங்க. பார்த்தியா...''

''பார்த்தேனே...பார்த்தேனே.. அடடா..ஒவ்வொரு பொம்பிளையும் என்னா அளகு,..ஏண்டா டேய், அவங்க எல்லாம் வெண்ணைய தேய்ச்சுத்தான் குளிப்பாங்களாமே..''

"யாருடா சொன்னது?.."

"நம்ம மாதையன் இல்லே சொன்னான்.."

"அவங்க சீலையெல்லாம் கமகமன்னு மணக்குதாம். பண்ணை வீட்டுல வேலை செய்யற வீராயி சொன்னாடி..."

"ஒசத்தி சோப்பு போடுவாங்களா இருக்கும். பட்டணத்துல இருக்கானே என் தம்பி.. சோப்பு ஒண்ணே அஞ்சு ரூபான்னு சொல்லுவான். அதுமாதிரி விலை உசந்த சோப்பா இருக்கும்..."

"அம்மாடி...நானெல்லாம் அந்த மாதிரி சோப்பு வாங்கினா—உடம்புல தேச்சு குளிக்கவே மாட்டேன். சும்மா மோந்து பார்த்திட்டு பத்திரமா வச்சிடுவேன்..."

"ஒவ்வொருத்தி கண்ணு மையையும் பார்த்தியா அக்கா—நம்ம பார்வதி வீட்டுல செவத்த காளை கன்னு குட்டிமாதிரி..."

யாரைப் பார்த்தாலும் இதே பேச்சுக்கள். அன்றைய காரியங்களை போட்டது போட்டபடி போட்டுவிட்டு, படப்பிடிப்பு பார்க்க ஓடும் பாமரர்கள்...

'இத்தனை நேரம்—அபிராமி இருந்தா, அவதான் எல்லாருக்கும் முன்னாடி கிளம்பியிருப்பா..."

'அதான் கிளம்பிப் போயிட்டாளே. அப்புறமும் ஏன் அவளையே நினைக்கறே..."

இதயத்தில் இரு குரல்கள்...

சத்யமூர்த்தி—உள்ளே வந்து குழந்தை முகுந்தனை எழுப்பி உட்கார்த்தி வைக்கிறான்.

"பல்லை விளக்குடா கண்ணா...ஸ்கூலுக்கு நேர மாச்சு இல்லே..."



அதனைத் தாஜா செய்து எழுப்புவதற்குள் பெரும் பாடாகி விடுகிறது...

"அப்பாவ்..."

வாயில் வைத்த வேப்பங்குச்சியுடன் மகன் தந்தையைப் பார்த்துக் குரல் கொடுக்க...

"என்னப்பா..."

"இன்னிக்கு ஷூட்டிங் இருக்குதாம்...நம்ம தெரு பசங்க சொன்னாங்க...என்னையும் அழைச்சிட்டுப் போப்பா..."

"சீச்சி, அதெல்லாம் கூடாது. ஷூட்டிங் எடுத்தா எல்லாரும் பார்க்க ஓடணுமா. அவங்க தொழில் அவங்க செய்யறாங்க. நாம நம்ம தொழிலை செய்வோம். எனக்கு வாத்தியார் தொழில். உனக்கு படிக்கறது தொழில்...அதை விட்டுட்டு..."

சத்யமூர்த்தி முடிக்கும் முன்பே—முகுந்தனின் கண்களில் நீ தளும்புகிறது...

"அழைச்சிட்டுப் போகாட்டி நான் அழுவேன்..."

சத்யன் எதற்கு பணியாவிட்டாலும்—இந்த பயமுறுத்தலுக்கும் பணிந்து விடுவான்.

குழந்தையின் கட்சிதான் ஜெயிக்கிறது.

"வெண்ணிலவு முகம் பார்த்து
வெகு நாளும் ஆச்சுது!
உண்ணுகிற சோறு என்ட
உடலில் ஒட்டுதில்லை!
மண் எதிரி மரம் எதிரி
மாந்தரெல்லாம் தான் எதிரி
புல்லும் எதிரியல்லோ
பூலோகத்தில் ஏன் பிறந்தேன்!"

பாட்டுக்கு ஏற்ப—அபிநயம் பிடித்துக் காட்டுகிறார் நடன ஆசிரியர். ஒரு பக்கம் குடையின் கீழ் நாற்காலி நிறைய உட்கார்ந்திருக்கிறார் டைரக்டர். இரண்டு பெண்கள்—வேகாத வெய்யிலில் சிரமப்பட்டு ஆட—சுற்றி வர காமிராக்களும் மற்ற உபகரணங்களும், சக நடிக, நடிகைகளும், உதவியாளர்களும் அமர்க்களப்பட—

சத்யன்—வைத்த விழிகளை எடுக்காமல், ஆடிக் கொண்டிருக்கும் இரு பெண்களில் ஒருத்தியையே பார்த்துக்கொண்டு நிற்கிறான்...

அவனின் ஆறடி வஜ்ர தேகம், ஒருமுறை குலுங்குகிறது...கருத்த மேனியில் எண்ணை பளபளப்பாய் வியர்வை கசிவு...அம்மிக் கல்லைப் பொளிந்தாற் போன்ற—அம்மைத் தழும்பேறிய முகத்தில் ஏகப்பட்ட பதட்டம்...உதட்டின் ஒரு பக்க பின்னத்தை மறைக்க அடர்த்தியாய் அவன் வளர்த்திருந்த மீசையின் துடிப்பு...

'அவள்...அவள்தானா...'

'அபிராமியா...'

'என் அபிராமியா?'

## 2

**'கத்துறயே காகம் என்**
**கண்மணியைக் கண்டாயோ?**
**சந்தித்துக் கேட்டால் என்**
**சரித்திரத்தைச் சொல்வாயோ?'**

அதிர்ந்து நிற்கிறான் சத்யமூர்த்தி.

ஒரு கணம்—சுற்றியிருந்த மக்கள் வெள்ளம் தெரியவில்லை. படப்பிடிப்பு நடப்பது மூளையில் உறைக்கவில்லை.



''அபிராமி...''

கூச்சலிடத் திறந்த வாயைச் சட்டென மூடிக் கொண்டான் மீண்டும் மனசுக்குள் சந்தேகம்... அவள் தானா என்கிற சந்தேகம். 'காமாலைக்காரனுக்கு காண்பதெல்லாம் மஞ்சள்' என்பது போல ஒவ்வொரு விநாடியும் அவளை நினைத்துக் கொண்டேயிருப்பதால் ஏற்பட்ட சித்தபிரமையோ...?

கண்களை இடுக்கி, புறங்கையால் வெய்யிலை மறைத்தபடி உற்றுப் பார்க்கப் பார்க்க...

விழிகளைக் கரித்துக் கொண்டு அருவியாய் இறங்கிய கண்ணீர் உதட்டில் பட்டு உப்பாய் கரிக்க...

'அவதான். அவளேதான்'

அவனுடைய அபிராமியை, அவனுக்குத் தெரியாதா... ஒருநாள் இரண்டு நாள் பழக்கமா...

நாலுவருடப் பழக்கமாயிற்றே...

ஒவ்வொரு நொடியும்— அவளைத் தொட்டு, அவள் நினைவில் மயங்கி, அவளுடன் வாழ்ந்த காலங்கள் இன்னமும் அவன் நெஞ்சில் பசுமையாய் இருக்கிறதே...

இடையில் ஆறுவருடப் பிரிவு... அதிகம்தான், இருந்தும் அவள் அதிகமாய் மாறவில்லை.

அன்று கண்ட மேனி அழியாமல் அப்படியே இருந்தாள்.

பச்சைநிற சுங்குடிப் புடவை. சிவப்பு ரவிக்கை. கூந்தலை அள்ளி முடிந்து ஒரு பக்கமாய் செருகி—ஒற்றை செம்பருத்தியை வைத்திருக்கிறாள்...

அவனுடன் இருந்த போது—நீளமாய் ஜடை பின்னிக் கொள்வாள். தலைநிறைய மல்லிகையைச் சூடிக்கொண்

டால்தான் அவனுக்குத் திருப்தி. எப்பொழுதும் அழகாய், நறுவிசாய், பார்த்தவர் ஒருகணம் தடுமாறிப் போகும்படி அலங்கரித்துக் கொள்வதில் மோகம் அதிகம். இன்று உதட்டுச் சாயத்தால் சிவந்திருக்கும் இதழ்கள்— அன்று தாம்பூலச் சிவப்பேறி— சத்யமூர்த்தியை பித்தாக்கியிருந்தன...

''ஆத்தோரம் கொடிக்காலாம்
அரும்பரும்பா வெத்திலையாம்
போட்டா சிவக்குதில்லை
பொன்மயிலே உன் மயக்கம்!''

இப்பொழுது கதாநாயக நடிகன் அபிராமியுடன் கூட இருந்த நடிகையைக் கட்டிப்பிடித்து ஆட—

அவள் -அபிராமி ஒரு ஓரமாய் வண்ணக் குடையின் கீழ் உட்கார்ந்தாள். அவள் பக்கத்தில் சப்பரம் மாதிரி ஒரு அம்மாள். அகன்ற முகத்தில் வட்ட வடிவப் பொட்டும், பெரிய பிச்சோடாவில் வளைத்த கதம்பச் சரமுமாய்...இவர்களைச் சுற்றி இன்னும் நாலைந்து பெண்கள்.

சத்யன் கண் இமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளை மணமுடித்த நாள்...ஊராரின் கேலிக்கிடையில் அவளுடன் நலுங்கு வைத்த நாள்...பக்கத்தில் குனிந்த தலை நிமிராமல் அவள் வர—அவளது மருதோன்றி பூச்சேறிய விரலை 'வலிக்குமோ' என்கிற பயத்துடன் பிடித்து ஊர்வலம் போன அந்த நாள்...ஓலைக் குடிசையிலே ஒற்றை விளக்கெரிய பட்டுப்பாய் விரிப்பில் முதன்முறையாய் அவளைத் தனிமையில் சந்தித்த நாள்...

சத்தியமூர்த்தியின் நெஞ்சில் அலையலையாய் எழும்ப...பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டும் என்கிற



நினைப்பே இல்லாமல் ஆணி வைத்து அடித்தாற்போல அங்கேயே நிற்கிறான்.

''நம்ம புள்ளாண்டான் சத்யமூர்த்திக்கு கிளி மாதிரி பொண்ணு...''

''அடியே...நம்ம சாதியில இல்லாம, சனத்துல இல்லாம இத்தினி செகப்பு எப்படிடி இவளுக்கு...சும்மா தளதளன்னு தக்காளிப் பழமாட்டம் இருக்கா...''

''சத்யமூர்த்தி பக்கத்துல அந்தப் பொண்ணு வந்தா-மதயானைப் பக்கத்துல மாடப்புறா வர்ற மாதிரி இருக்குது...''

ஊராரின் விமரிசனங்கள்...

சத்யமூர்த்தி அழகனில்லை. ஆனால் கம்பீரமான புருஷன், வாட்டசாட்டமாய் வளர்ந்த தேகம். அந்த முகத்தில் அழுத்தமாய் பதிந்துள்ள அம்மை வடுக்களும், உதட்டின் பின்னத்தை மறைக்க அடர்த்தியாய் அவன் வளர்த்திருந்த மீசையும்—ஒரு வித முரட்டுத் தோற்றத்தை அளிக்க—

வந்த புதிதில் அபிராமி பயந்தபடி கேட்டது இன்னமும் நினைவிலிருக்கிறதே..

''ஏங்க...உங்களுக்கு நிறைய கோபம் வருமா...''

''யாரு சொன்னாங்க...''

''என் சினேகிதங்க அம்புட்டுபேரும் சொல்றாங்க...மாப்பிள்ளையப் பார்த்தா முன் கோபக்காரர் மாதிரி இருக்குதுன்னு...''

இதைக் கேட்டவுடன் சத்யமூர்த்தி,விழுந்து விழுந்து சிரித்தான்.

''இன்னும் என்னவெல்லாம் சொன்னாங்க...?''

''சொன்னா நீங்க கோவிச்சுப்பீங்க...''

''இதப்பாரு...எனக்கு கோவமே வராது...சும்மா சொல்லு...''

''கிளி மாதிரி பொண்ணை வளர்த்து கடுவன் பூனைக்குக் கட்டிக் கொடுத்திட்டியேடின்னு எங்க அம்மா வைக் கட்டிபிடிச்சுட்டு எங்க அயித்தை அழுதாங்க...''

அவன்—அவளையே அள்ளி விழுங்குகிறாற் போலப் பார்த்தான். மீசையின் மறைவில் புன்னகை பிறையாக எட்டிப் பார்த்தது..''

''அபிராமி..''

''உம்...''

''வெளிப்பார்வைக்கு வேணா நான் கடுவன்..., பூனையாட்டம் இருக்கேனேத் தவிர—பழகறதுக்கு ரொம்ப சாது..ஒரு வம்பு தும்புக்குப் போக மாட்டேன். நான் வாத்தியாரா இருக்கற பள்ளிக்கூடத்து பிள்ளைங்க எல்லோருக்கும் சத்யமூர்த்தி சாருன்னாக்க உசிரு...நீ பழகிப்பாரு...புரியும்.,.''

அவன் தன் இரு கைகளிலும் அந்தப் பூ முகத்தை ஏந்தி உச்சி முகர்ந்தான்...

''அதுவும்...நான் உன் மேல உசிரையே வச்சிருக்கேன் அபிராமி. உன்னை ஈ எறும்பு கடிச்சாக்கூடப் பொறுக்க மாட்டேன். எனக்கு அம்மா அப்பா கிடையாது. அநாதை. இனிமே நீதான் எனக்கு எல்லாம், நான் உன் அன்புல அடங்கற குழந்தை. நல்லதோ-கெட்டதோ நீ பார்த்து செய்யறதெல்லாம் சரிதான் கண்ணம்மா...''

அப்பொழுது—அந்த நேரத்தில்—இந்த வார்த்தைகளின் அர்த்தம் புரிந்தோ, புரியாமலோ வெட்கத்துடன் சிரித்தாள் அபிராமி.



அன்று முதல் அவள்தான் அவனுடைய உலகம். வீட்டிலிருந்து புறப்பட்டால் பள்ளிக்கூடம். பள்ளி விட்டதும் நேராய் வீடு,..இவனது சைக்கிள் மணியோசை கேட்டதுமே துள்ளிவந்து கதவைத் திறப்பாள் அபிராமி.. அவன் வந்ததும் வராதுமாய் அவனிடம் கொட்ட ஆயிரம் சேதிகள், மடி நிறைய வைத்திருப்பாள்.

''என்னங்க...வாசல்லே வளையல்காரி வந்தா...நான் பச்சைக் கண்ணாடி வளையல் வாங்கினேனா...அவ என் கையில மாட்டி விட்டுட்டே—'வீட்டுல பெரியவங்க இருந்தா திருஷ்டி சுத்திப் போடச் சொல்லுமா'ன்னு சொன்னா..ஏங்க, அத்தினி அழகா இருக்குதா எனக்கு..''

''நான் வேணா திருஷ்டி சுத்திப் போடட்டுமா?''

அவன் வளையலணிந்த கைகளை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்வான்...ஒவ்வொரு வளையலையும் இதழால் வருடி முத்தமிடுவான்..

எத்தனை சந்தோஷமான காலங்கள் அவை...

அந்த ஆனந்தங்களை உதறிவிட்டு ஏன் ஓடினாள் இவள்...

''நான் இவளுக்கு என்ன குறை வச்சேன்,..''

எத்தனை நாள்—எத்தனை முறை இக்கேள்வியை நெஞ்சுக்குள் கேட்டு, விடை தெரியாமல் விழித்திருக் கிறான்.

இதோ, அந்த அபிராமி—அவனிடம் பச்சைக் குழ தையாய் ஒட்டி உறவாடும் அபிராமி— கூப்பி தொலைவில் அமர்ந்து உதட்டுச் சாயத்தை சரிசெய் கொண்டிருக்கிறாள்.

''நான் இந்த ஊருல இருக்கறது இவளுக்கு தெரிஞ்சிருக்குமோ...''

''இத்தனை வருஷத்துல என்னிக்காவது தான் பெத்த பிள்ளையையும் என்னையும் நினைச்சுப் பார்த்திருப்பாளா இவ...''

'படிப்பு வாசனையே இல்லாத இவளுக்கு எழுதப் படிக்கக் கத்துக் கொடுத்தேனே...ஒரு வரி...ஒரே ஒரு வரி. நான் இங்கேதான் சுகமா இருக்கேன்னு எழுதிப் போடக் கூடாதா...'

'இப்படி கடுதாசி எழுதினா—எங்கே பிள்ளைய தூக்கிட்டு இவ விட்டு வாசல்லே வந்து நின்னுடுவேனோன்னு பயமா,,.'

''அப்பாவ்..ஸ்கூலுக்கு நேரமாச்சு. மணி அடிச்சிருப்பாங்க. போக வேணாமா?''

முகுந்தன்—தந்தையின் தோள்மீது அமர்ந்தபடியே நினைவூட்டுகிறான்.

''எல்லாம் போலாம். இருடா...''

சத்யமூர்த்திக்கு அந்த இடத்தை விட்டு நகர, காலெழும்பவில்லை.

மனசுக்குள் சபலம்; தன் மனைவி ஒருமுறையாவது தன்னையும் குழந்தையையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டாளா என்கிற சபலம், அப்படி அவள் பார்க்க நேரிட்டால் இந்த சந்திப்பை அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்கிற சபலம். தான் பெற்ற மகன்—சாயலில் தன்னைப் போலவே அழகனாய் வளர்ந்திருப்பதை ஒருமுறை கண்ணால் பார்க்க மாட்டாளா என்கிற சபலம்...

''டேய்...அந்தப் பச்சை சுங்குடிதான் கதாநாயகியா...''

எவனோ ஒருவன் அருகிலிருந்தவனைக் கேட்கிறான்.



''ச்சீ, அது யாரோ எக்ஸ்டிரா ஹீரோயின் அதோ ஆடிட்டிருக்காளே அவதான்...''

கொஞ்சம் படித்த, விஷயம் தெரிந்தவனின் பதில் இது.

''ப்பூ, அவளா... அவள விட எக்ஸ்டிராவே அளகா இருக்கா...''

சத்யமூர்த்தி— கும்பலினூடே நகர்ந்து நகர்ந்து—அபிராமியின் கண்ணில் படுகிற இடத்தில் வந்து நிற்கிறான்.

இதயம் ஒரு முறை துள்ளிக் குதிக்கிறது.

'அபிராமி... நீயா... நீயேதானா... கடைசியில உன்னை மறுபடியும் பார்க்கற சந்தர்ப்பம் கிடைத்ததா...'

நெஞ்சம் ஊமையாய் புலம்புகிறது.

'முகுந்தா— அம்மா எங்கேயின்னு கேட்பியே...இதோ பாரு உங்கம்மா...''

குழந்தையின் காதில் ரகசியமாய் கிசுகிசுக்க வேண்டும் போல நெஞ்சு பரபரக்கிறது...

அவன் தவித்தபடி நிற்க—

''உங்க பேரு என்னாங்க...''

சத்யமூர்த்தியின் அருகிலிருந்த ஆள் ஒருவன் அபிராமியைப் பார்த்து இரைய...

அவனருகில் நின்ற இன்னொருவன் 'உய்'யென விசிலடிக்க...

புன்னகை மாறாமல் குரல் வந்த திசையில் திரும்பிப் பார்க்கிறாள். அவள்...

நீண்ட, மையிட்ட, தோகை போன்ற விழிகளில் 'சிக்'கெனச் சிறைபடுகிறார்கள் சத்யனும், முகுந்தனும்...

ஆச்சரியத்தில் மலர்ந்த கண்கள், அதிர்ச்சியில் ஸ்தம்பித்து, ஒருகணம் பயத்தில் தடுமாறி, மண்நோக்கித் தாழ...

அவன் ஆடாமல், அசையாமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

அபிராமி... என்னை மறந்திட்டியா...'

''உன்னைப் பொண்ணு பார்க்க வந்த நாளுல நீ கட்டியிருந்த சேலையும், தலையில வச்சிட்டிருந்த செவந்திப்பூவும் மூக்கு மேல திட்டா விழுந்திருந்த குங்குமமும், காலு கொலுசுல மாட்டியிருந்த சேலை சரிகையும் கூட என் மனசுல நிக்குதே... உனக்கு மறந்துப் போச்சா...''

அவள்— அபிராமி— மெள்ள எழுந்து அவனை நோக்கி அரைப் புன்னகையை சிந்த...

''ஷாட் ரெடி, வாம்மா...''

உதவி டைரக்டரின் குரல் கேட்டு அவசரமாய் ஓடுகிறாள் அவள்... அவனை திரும்பித் திருப்பிப் பார்த்தபடி...

அந்த விழிகள் அவனிடம் என்ன சொல்கின்றன.

'எனக்காக கொஞ்சம் காத்திரு'— என்றா...

இல்லை—

''என்னைத் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளாதே' என்றா...

அவள் என்ன சொல்ல விரும்புகிறாள்...?



# 3

**மானத்திலே மீனிருக்க**
**மதுரையிலே நீயிருக்க**
**சேலத்திலே நான் இருக்கச்**
**சேருவது எக்காலம்?**

அபிராமியினால், தனது கண்களை நம்ப முடிய வில்லை.

எதிர்த்தாற் போல— சற்றுத் தொலைவில் நிற்பது தன் கணவன் சத்யமூர்த்தியா...அவனது தோளில்—ஏற்றி வைத்த கிருஷ்ண விக்ரகம் மாதிரி அமர்ந்திருப்பது தன் மகனா...

மையிட்ட கண்களில் 'களக்'கெனக் கண்ணீர். மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்க்க நினைக்கிறாள் அவள்.

''இந்தாம்மா, அபீதா—டான்ஸ் மாஸ்டர் எப்படி உடம்பை வளைக்கிறாருன்னு பார்ப்பியா... அதை விட்டுட்டு எங்கேயோ பராக்குப் பார்த்துகிட்டிருந்தா எப்படி...வெய்யில் போவுது, ஜல்தி...''

டைரக்டர் கத்த—அவளது சிந்தனைகள் வலுக்கட்டாயமாய் திசை திருப்பப் படுகின்றன...

இந்த ஆறு வருடங்களில்—விழிகளை மூடினால் புருஷனின் முகம், மூடிய இமைக்குள் வந்து நிற்கும். குழந்தை முகுந்தனின் பட்டு உடலின் ஸ்பரிசத்தை நினைத்தாலே மேனி சிலிர்க்கும்...

குழந்தையையும், கணவனையும் மறக்க முடியாமல்—

பாழாய்ப் போன சினிமா சபலமும் விடாமல், எத்தனை அவதியுற்றிருக்கிறாள் அவள்...

அவளை— குடும்பத்திலிருந்து பிரித்ததே இந்த சினிமா மோகம் தானே...

ஐயோ— இந்த ஆசைப்பயிர் எத்தனை சீக்கிரத்தில் ஆளையே அழிக்கும் வண்ணம் முட்புதராய் படர்ந்து விட்டது!

அவள்—சத்யனுடன் வாழ்ந்த காலங்கள்...பொன் னேட்டில் பொறிக்கப்பட வேண்டியவை. கடவுளிடம் கெஞ்சி கெஞ்சிக் கேட்டாலும் திரும்பப் பெற முடியாதவை. எத்தனை அருமையாய் வைத்திருந்தான் அவளை, ஒரு பெண்ணுக்கு இதை விடவும் என்ன பெருமை வேண்டும்?

சத்யமூர்த்தி— வெளிப்பார்வைக்கு முரடனாய் தோற்றமளித்தாலும் சுபாவத்தில் ரொம்பவும் மென்மையானவன். அதுவும் அபிராமியின் விஷயத்தில்...

சில சமயங்களில் அவள் அவனுக்கு ஒரு குழந்தை. எதைச் சொல்லக் கூடாது என்று அறியாத குழந்தை.

சில சமயங்களில் அவள் அவனுக்கு ஆத்மார்த்தமான சினேகிதி. சத்யமூர்த்திக்கு அவளைத் தவிர—நட்பாய் பேசிப் பழகக்கூடிய நண்பர்கள் கிடையாது...

சில சமயங்களில் அவள் அவனின் உபாசனை தேவதை. அவளின் சௌந்தர்யத்தை ஒவ்வொரு வினாடியும் பூஜித்து ஆராதிப்பவன் அவன். தனக்கு— இத்தனை அழகுடைய மனைவி வாய்த்ததில் ஏகப்பட்ட பெருமை அவனுக்கு.

சில சமயங்களில் மட்டுமே மனைவி.

சத்யமூர்த்தி செய்த மாபெரும் தவறு இதுதான்.



பெண்டாட்டியின் மீதிருந்த அதீதக் காதல், அவன் கண்களை இறுக்கமாய் மறைத்திருந்தது.

ஆரம்ப காலங்களில், தன் அழகைப்பற்றி சுயமான அபிப்பிராயம் ஏதுமின்றி சாதாரணக் குடும்பப் பெண்ணாய் அவன் வீட்டில் அடியெடுத்து வைத்தவளுக்கு அவளின் அற்புதமான அழகை அவளுக்குப் புலப்படுத்தியவனே அவன்தான்.

''அபிராமி... இது என்ன அழகு? சாமி, உனக்கே எல்லா லட்சணங்களையும் வச்சுட்டு மத்தவங்களுக்கு ஒண்ணுமில்லாம கையஉதறிட்டு எழுந்திட்டாப்பல...''

''நான் மட்டும் ஒரு கவிஞனாகவோ, ஓவியனாகவோ இருந்தா— உன்னை என் பாட்டுலேயும், படத்துலேயும் சிறைப் பிடிப்பேன்...''

''உனக்கு எது கட்டினாலும்— ராணி மாதிரி இருக்குது. உண்மையிலேயே நீ என் ராஜகுமாரிதான்...''

இவனது வார்த்தைகள் போதாதென்று ஊர்ப் பெண்கள், தெரு ஜனங்களின் ஆச்சரியம் கலந்த விமரிசனங்கள் வேறு...

பிறந்த வீட்டில்— கையகலக் கண்ணாடியில், முகத்தைப் பார்த்துப் பழகியவளுக்கு, முன் நெற்றி மயிர் சுருள் பறக்காமல் வேப்பெண்ணையைத் தடவி —அழுந்த சீவிப் பழகியவளுக்கு, அம்மன் கோவில் குங்குமத்தை காசளவு இட்டுப் பழகியவளுக்கு, மாரியம்மன் திருவிழா வரும் சமயத்தில் மட்டும் புதுச்சேலையும், கண்ணாடி வளையல்களும் கருகமணிச்சரமும் வாங்கிப் பழகியவளுக்கு...

சத்யன்தான் முதன்முதலாய் வாசனை சோப்பும், பவுடரும் வாங்கித் தந்தான். கண்ணுக்கு ஒழுங்காய் மை தீட்டுவது எப்படியென்று சொல்லித் தந்தான். கிராமத்து

முறைப்படி சேலை கட்டியிருந்தவளுக்கு நாகரீக முறைப் படி உடுத்தக் கற்றுத் தந்தான்... வேப்பெண்ணை தடவி, அள்ளி முடிந்த கூந்தலுக்கு வாசனைத் தைலம் தடவி பின்னலிட்டு பூ வைக்க அனுமதி தந்தான்...

''என்னங்க, பக்கத்து வீட்டுக்காரங்க சினிமா பார்க்கப் போறாங்க. என்னையும் கூப்பிடறாங்க... போயிட்டு வரட்டுமா...''

இப்படிக் கேட்டபடி அவனது கழுத்தைச் சுற்றிக் கரங்களை மாலையாகப் போட்டுக் கொஞ்சியவளை இறுக அணைத்து. கன்னத்தில் இதழ்களைப் பதித்து அனுமதி அளித்தவனும் அவன்தானே...

''படம் ரொம்ப நல்லாயிருந்ததுங்க. ஒவ்வொருத்தி யும் என்ன அழகா இருக்கா தெரியுமா...''

''உன்னை விடவா...''

''ச்சீ போங்க...''—அவள் செல்லமாய் கோபித்து அவனது மார்பில் கை பதித்து நெட்டித் தள்ள—அவன் விழுவது போல பாசாங்கு செய்து, அவளையும் சேர்த்தணைத்தபடி தரையில் உருள...

''ஐயே விடுங்க... விடுங்க சொல்றேன்...''—அவள் திமிறிக் கொண்டு புரண்டு படுத்தாள்...

''ஒவ்வொரு பொம்பளையும் நிறைய நகை போட்டுட்டு—பளப்பளன்னு சரிகை வச்ச பாவாடை கட்டிக்கிட்டு சுத்திச் சுத்தி ஆடினாங்க. அப்புறம், இந்த கதாநாயகி இல்லே, அவளுக்குத் துளிகூட வெட்க மில்லீங்க. புருஷனோட அவ ஆடறதும், பாடறதும், கொஞ்சி குலாவறதும் இதையெல்லாம் எப்படிங்க படம் பிடிப்பாங்க...''

''எல்லாம் போட்டோ புடிக்கறாப்பலதான் அபிராமி...அதெல்லாம் சொன்னா உனக்குப் புரியாது. சினிமா நல்லா இருந்திச்சு இல்லே...பாட்டெல்லாம் எப்படி...''



''பாடிக் காட்டவா...''

அவள், அவனது மடிமீது தலை வைத்துப் படுத்தாள். படக் கதாநாயகி—பாட்டுக்கேற்றபடி உடலை அசைத்ததை ஒருகணம் ஞாபகப்படுத்தி அதுபோலவே செய்து காட்டினாள்...

அரும்பு மீசை துள்ளிவர...

அழகுப் புன்னகை அள்ளிவர...

குறும்புப் பார்வை பார்ப்பவரே—எனை

தானத்தனன தனனனனா...

கடைசி வரி மறந்து போச்சுங்க...'

அவளது சிரிப்பில், அவனும் சேர்ந்து கொண்டான். இன்று அவன் வாழ்க்கையையே சிரிப்பாய் சிரிக்க வைத்து விட்டு வந்து விட்டதை நினைத்து நெஞ்செல்லாம் புண்ணாகி தினம்தினம் சித்ரவதைப் படுகிறானே...

கிராமத்துப் பெண்கள் சினிமாவே பார்ப்பதில்லையா என்ன...எல்லாருக்குமா சினிமாவில் நடிக்க வேண்டு மென்கிற ஆசை தோன்றுகிறது! இல்லை, அப்படி ஆசைப்பட்டவர்களெல்லாம் நினைத்தபடி திரை உலகில் காலெடுத்து வைத்துவிட முடியுமா...

எல்லாம் விதிதான். சத்யமூர்த்தியின் போதாத காலம்தான்

'நான் பள்ளிக்கூடத்துக்குப் போறேன்; கடைத்தெரு வுக்குப் போறேன்; நாலு பேரோட பேசிப் பழகறேன், பாவம்...இவ வீட்டோட முடங்கித்தானே கிடக்கா. என்னமோ அண்டை அசல்வீட்டுப் பொண்ணுங்களோட

சினிமாவுக்குப் போயிட்டு வர்றதுனாக்க போயிட்டுத் வரட்டுமே...'

சத்தியமூர்த்தியின் தாராள மனசு இப்படித்தான் நினைத்தது .,

'அவருதான் எனக்கு எப்படியெல்லாம் இடம் கொடுத்தார்... அப்பேர்ப்பட்ட நல்ல மனுசனுக்கு நான் செஞ்ச கைம்மாறு இதுதானா...'

அபிராமி...நடன ஆசிரியர் சொல்லிக் கொடுத்த அபிநயத்தை செய்தபடி சத்யமூர்த்தி நின்ற இடத்தை— மீண்டும் பார்க்க, அந்த இடம் வெறிச்சோடிக் கிடக் கிறது...

'அவர்... அவர்...எங்கே?'

''அடடே. அப்படியில்லேம்மா,. இங்கே பாரு. நம்ம சரோஜினி ஆடுது பாரு...''

''மதுரைக் கோவிலிலே
மாசித்தெருக் கோடியிலே
மங்கை நான் இருக்க
மகாராஜா எங்கே போனார்...''

அவளது விழிகள் சத்யமூர்த்தியை, அவளது மகாராஜாவைத் தேடுகிறது. முகத்தில் சோகம் கப்ப— கண்ணிரண்டும் ஏக்கத்தில் தவிதவிக்க,

''கட்!''

''பிரமாதம் போ...அபீதா கொன்னுட்டே... இத்தனை வருஷ ஃபீல்ட் எக்ஸ்பீரியன்ஸுல இப்பத்தான் உனக்கு நடிப்புன்னா என்னன்னு தெரிஞ்சிருக்கு...''

டைரக்டர் வாயாரப் பாராட்ட, கதாநாயகி நடிகை இலேசான பொறாமையுடன் அபீதாவைப்



பார்க்க.,.அவள் தனது வேலை முடிந்தவுடன் ஒரு ஓரமாய் போய் உட்காருகிறாள்.

''ஆம்மா...எங்குரூப்பு பொம்பளைங்களிலே எவ சோடை போனா...இவ இன்னிக்குத்தான் சர்டிபிகேட் கொடுக்கறாரு...நான் இந்த சினிமா உலகத்துல எத்தினி டைரக்டருங்களைப் பார்த்திருக்கேன்..கோயம்புத்தூர்லே 'பட்சிராஜா பிலிம்ஸ்'னு ஒண்ணு இருந்ததில்லே... மொதமொதல்லே அதுலதான் ஆடவந்தேன்...அப்பல லாம் என்னா செட்டு, என்னா கவனிப்பு...நடிகைங் களுக்கு எல்லாம் பெரிய ஸ்டோரு எடுத்து அவங்கவங்க தகுதிக்கு ஏத்தாப்பல தங்க வச்சிருந்தாங்க. அப்பல்லாம் நீ பொறந்து கூட இருக்கமாட்டே. டி.ஆர். மகாலிங்கம் தம்மாத்துண்டு பையன்...

பங்காரும்மா—தனக்குப் பக்கத்திலிருந்த பெண் களிடம் அட்டகாசமாய் சொல்லிக் கொண்டிருக்கிறாள். சுற்றிவர நிற்கும் கும்பலை தன்பக்கம் கவரவேண்டும் என்பதற்காகவே இரைந்து, தனது பிரதாபத்தை அளந்து கொண்டிருக்கிறாள்.

''இந்தா அபீதா, இப்படி நிழல்லே வந்து உட்காரு. வெய்யில் பட்டு அரிதாரமெல்லாம் உருகி வழியுது பாரு...''

அபிராமி—மௌனமாய் எழுந்து வந்து அவளருகில் அமருகிறாள். கண்கள் மட்டும் சத்யனைத் தேடி அலை பாய்கிறது.

அபிராமியை அபீதாவாக மாற்றியவள் இந்த பங்காரும்மாதான். தமிழ், தெலுங்கு சினிமா உலகுக்கு ஒரு நடன நடிகையாக அறிமுகமாகி இடையில் சிலகாலம் நாடக நடிகை பிழைப்பை நடத்தி—இன்று உபநடிகை களை சப்ளை செய்யும் ஏஜண்ட்டாக இருக்கிறாள்.

கோடம்பாக்கத்தில்—டெயிலர் எஸ்டேட்டுக்குப் பின்புறத்தில் பழைய வீடொன்று பங்காரும்மாவுக்கு சொந்தமாக உண்டு. இந்தப் பெண்களுடன் அவள் அங்குதான் தங்கியிருக்கிறாள்.

"ஆங்...பெரிய ஸ்டாரு. இவளப்பத்தி எனக்கு தெரியாதா? நாலாம் வருஷம் ஓட்டல் ரெய்டுலே பிடிபட்டு—ஜாமீன் கொடுக்க வக்கில்லாம நின்னவளை, நான்தான் மீட்டு இட்டாந்தேன். ரெண்டு வருசம் என் குரூப்புல இருந்தா. போன வருசம்தான் கொஞ்சம் சுக்ரதெசை அடிக்க ஆரம்பிச்சது...நான் தனியா போறேங்க்கான்னு பத்தாயிரம் ரூபாயைக் கொடுத்து காலுல விழுந்து கும்பிட்டுட்டுப் போனா...இன்னிக்கு நான் 'குட் ஷெப்பர்டுல படிச்சவ'ன்னு பேட்டி கொடுக்கறா. பேட்டி...தா பாரு...இந்த ஃபீல்டுலே இருந்து குப்பை கொட்டினவ—இப்ப ஓகோன்னு இருக்கறவ—இன்னிக்கு புதுசா முளைச்சிருக்கவ...அத்தினி பேரோட சரித்திரமும் இந்த பங்காரும்மாவுக்குத் தெரியும்...சினிமா உலகத்துல நுழைய நம்ம வீடு தானே வாசப்படி..."

—இதுமாதிரி கித்தாய்ப்பாகப் பேசிக் கொள்வதில் பங்காரும்மாவுக்கு ஈடு இணை யாருமில்லை வீட்டை விட்டு ஓடிவரும் பெண்களுக்கு அடைக்கலம் கொடுத்து, சர்க்கரையாகப் பேசி, அவர்களின் அழகை ஓகோவெனப் பாராட்டி தனது குழுவில் சேர்த்து விட்டால்தான் நிம்மதி அவளுக்கு...

இத்தனை பெண்களையும் கட்டி மேய்ப்பது கஷ்டம்தான் என்றாலும்—இவர்கள் சம்பாதித்துத் தரும் பணத்தின் முன் எதுவுமே பெரிசில்லைதான்.

எவளுமே—படத்துக்காக வாங்கும் பணத்தை முழுசாகத் தானே வைத்துக் கொள்ளக்கூடாது. ஐம்பது சதவிகிதத்தை பங்காரும்மாவின் காலடியில் சமர்ப்பித்து



விடவேண்டும்...மீதியிருக்கும் ஐம்பது சதவிகிதத்தில்தான் தனது சொந்த செலவுகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த பெண்களும் இதற்கு சம்மதித்து இருப்பதற்குக் காரணம் இங்கே இருக்கும்வரையில் சோற்றுக்கவலையும், தங்கும் இடக்கவலையும் கிடையாது...மார்க்கெட் இல்லாத சமயங்களில் காசு வாங்காமல் சோறு போட மாட்டாள் பங்காரு. தேகத்தை அடமானம் வைத்தாவது பணத்தை சம்பாதித்து இவள் கையில் கொடுத்தால்தான் சோறு...

அபிராமி—

இதுமாதிரி எத்தனையோ முறை தேகத்தை அடமானம் வைத்திருக்கிறாள்!

'அதெல்லாம் எதுக்காக...இப்படி வெறும் எக்ஸ்டிராவா வெய்யில்ல நின்னு ஆட்டம் போடவா. ச்சீ இது என்ன பிழைப்பு...நாய்படாத பிழைப்பு...

அபிராமி, மெள்ள பங்காரும்மாவைத் திரும்பிப் பார்க்கிறாள்...வாய் நிறைய வெற்றிலையையும் புகையிலையும் திணித்துக்கொண்டு யாரிடமோ சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டிருக்கிறாள் அவள்.

அபிராமி—முதன்முதலாய் இந்த பங்காரும்மாவை சந்தித்த நாள்...

இதோ—இன்னமும் அவள் கண்ணெதிரே திரைப் படமாய் ஓடுகிறதே!

# 4

**கூடுனமே கூடுனமே—நாம்**
**கூண்டு வண்டிக் காளை போல!**
**ஆகாத காலம் வந்து—நாம்**
**ஆளுக்கொரு சீமையானோம்!**

திருமணமான ஒரு சில மாதங்களிலே எத்தனை சினிமா பார்த்து விட்டாள் அபிராமி...பொழுது போகாமல் படம் பார்க்கப் போனவள்—ஒரு வெறியாகவே அந்த ஆசையை வளர்த்துக் கொண்டு விட்டாள்.

அந்தச் சிறிய கிராமத்தில் இரண்டே இரண்டு டெண்ட் கொட்டகைகள்தாம். தியேட்டர் கிடையாது. ஒரு படம் வந்தால் நாலு நாட்களுக்கு மேல் இருக்காது. வருவதும் அநேகமாக பழசாய்தான் இருக்கும்.

அபிராமிக்குப் புதுசு, பழசு என்கிற பேதம் கிடையாது. எந்தப் படமானாலும் பெண்கள் வரிசையில் இவளைக் காணலாம். துணைக்கு யாருமில்லாவிட்டால், எதிர்வீட்டு கணக்கப்பிள்ளையின் மகள் பத்து வயசு மீனாளுடனாவது கிளம்பி விடுவாள்.

சினிமாவுக்குப் புறப்படும் நாட்களில்—வீட்டு வேலைகளைப் பரக்கப் பரக்க செய்துவிட்டு—ஓட்டமும் நடையுமாய் அவள் கிளம்புவதைப் பார்க்க வேண்டுமே! டிக்கட் வாங்க காசுக்காக — சத்யமூர்த்தியிடம் குழைவதைப் பார்க்க வேண்டுமே...!

பின்னலிட்ட தலையில் பிச்சிப் பூவும், பூப்போட்ட வாயில் புடவையுமாய் அவள், அவனை எதிர்கொண்டு அழைக்கும் போதே புரிந்துவிடும்.

''என்னம்மா மகராணி...சினிமாவா?''

''உக்கும்.''



''யாரு துணைக்கு...?''

''கணக்கப்பிள்ளை மக மீனாதான்...''

''என்னை ஒருநாளு அழைச்சிட்டுப் போயேன்...''

''நெசம்மாவா, வறீங்களா? நீங்கதான் எப்பப் பார்த்தாலும் பள்ளிக்கூடம், பிள்ளைங்களுக்குப் பாடம் சொல்லித் தரணும்னு ஏதாவது சாக்கு சொல்லிடறீங்களே...இன்னிக்கு வறீங்களா?''

''வேணாம் கண்ணம்மா. நான் சும்மாவாவது கேட்டேன். பசங்களுக்கு டியூஷன் எடுத்தாத்தானே உன்னை நல்லா வச்சிக்கப் பணம் கிடைக்கும்? நீ போயிட்டு வா. நீ பார்த்தா நான் பார்த்தாப்பல...''

கலீரெனக் கொலுசு சத்தமிட வாசலுக்கு ஓடுபவளை வைத்த விழி வாங்காமல் பார்த்திருப்பான் அவன்.

அபிராமியின் வயிற்றில் முகுந்தன் வளரத் தொடங்கியபோது சத்யமூர்த்தி அவளை இதுபோல சினிமாவுக்கு எதிர்வீட்டுச் சிறுமியின் துணையில் அனுப்ப சற்றுக் கவலைப்பட்டான். தன்னால் முடிந்த போதெல்லாம் அவளுக்காக அவளுடன் போய்வந்தான். முடியாதபோது இரவில் சினிமா முடியும் நேரத்துக்கு சைக்கிளில் அவளை அழைத்துவரப் போய் விடுவான்...

பிள்ளைப் பேற்றுக்காக பிறந்தகம் சென்றவள்—அங்கு இதுபோல சுதந்திரமாய் படம் பார்க்கப் போக இயலவில்லை என்கிற காரணத்துக்காகவே—கைக் குழந்தையுடன் பிரசவித்த இரண்டாம் மாதமே கணவனிடம் திரும்பி விட்டாள்.

''அடியே, ஒருபுள்ள பெத்தா குமரியும் கிழவியாயிடுவாம்பாங்க. நம்ம அபிராமியப் பார்த்தியா... என் கண்ணே பட்டுடும் போல...''

''கண்ணை வைக்காதேடி பாவி. பச்சை உடம்புக்காரி படுத்துடப் போறா...''

இங்கு வந்து—ஓரிரு மாதங்கள் வரையில் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள் அபிராமி.

கணக்கப்பிள்ளை வீட்டு மீனாளுக்கு அபிராமி வந்ததிலிருந்து இருப்பே கொடுக்கவில்லை. அபிராமி அக்கா இல்லாமல் அவள் படம் பார்ப்பதே அரிதாகிவிட்டதே... தனக்குத் துணை வேண்டுமென்பதால் — அபிராமி மீனாளுக்கும் சேர்த்தே டிக்கட் வாங்குவாள்.

'என்ன...மிஞ்சிப் போனா எழுபது காசு... போனாப் போவுது...'

இப்படி, சத்யமூர்த்தி தனக்குத்தானே சமாதானப் படுத்திக் கொள்வான்.

''அக்காவ், அபிராமி அக்காவ்... கொட்டாயிலே 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' வந்திருக்கு...நேத்துராவு எங்க ஆத்தா கூட போனேன். அதுல ஒரு டான்சு வருது பாரு... பத்மினியும், வைசயந்தியும்... 'சாதுரியம் பேசாதேடி...என் சலங்கைக்கு பதில் சொல்லடி'—

மீனாள், கணுக்காலுக்கு மேலேறிய பாவாடையை கனலாவகமாக சுழற்றி ஆடியபோது மார்பில், முகத்தை முட்டியபடி பால் குடிக்கும் முகுந்தனைக் கூட மறந்து 'ஆ'வென வாய் பிளந்தாள் அபிராமி...

''கலரு படம் அக்கா...''

''நிசமாவா?...''

''பின்ன பொய்யா சொல்றேன்? இன்னியோட கடைசி. நீ வர்றதா இருந்தா சொல்லு. போனாப் போவுதுன்னு உங்கூட ரெண்டாந்தடவையா பார்க்க வர்றேன்...''



அந்த சின்னப்பெண் அத்தோடு நிற்கமாட்டாள்...

''அந்த பத்மினி, வைசயந்தியெல்லாம் உங் கால் தூசு கூட பெறமாட்டாங்க...''

—இப்படி ஏற்றியும் விட்டாள்.

அன்று மாலை, பள்ளியிலிருந்து வீடு திரும்பிய சத்யமூர்த்தியை எப்படியோ கொஞ்சி கொஞ்சி, சமாளித்து—ஆறுமாசக் குழந்தை, முகுந்தனை, அவனது பராமரிப்பில் விட்டுவிட்டு கிளம்பிவிட்டாள் அபிராமி.

''நடுவுல குழந்தை பாலுக்காக அழுதா என்ன செய்வேன் அபிராமி?''

''உங்களுக்கு ஒரு சிரமம் கூட இல்லீங்க. சொம்புல பசும்பால் காய்ச்சி ஊத்தி வச்சிருக்கேன். சங்குல ஊத்திக் கொடுங்க. பய சமர்த்தா குடிச்சிட்டு விளையாடிட்டிருப்பான். அதேபோல ராவு எட்டுமணி சுமாருக்கு ரெண்டு சங்கு பாலு...மடியில போட்டு ஜோஜோன்னு தட்டிகிட்டே புகட்டினா-குடிச்சபடி தூங்கிடுவான்...இன்னிக்கு ஒருநாளு வச்சுக்கிட்டுப் பாருங்களேன். அழுதான்னா—அப்புறம் இவனுக்கு ஒரு வயசாவற வரைக்கும் படம் பார்க்கப் போகவே மாட்டேன்...''

அருமை மனைவியின் கெஞ்சல்—அவனை மெழுகாய் கரைய வைக்க—குழந்தையைப் பார்த்துக் கொள்ள அரைமனசாய் ஒப்புக்கொண்டான்.

இது இவன் செய்த இரண்டாவது தவறு!

சத்யமூர்த்தியிடம் குழந்தை சமர்த்தாக இருந்ததைக் கண்டவள்—அடிக்கடி, மீனாவைக் கூட்டு சேர்த்துக் கொண்டு சினிமாவுக்குக் கிளம்ப ஆரம்பித்தாள்.

குழந்தைக்குப் பால் புகட்டி, ஈரத்துணிகளை மாற்றி, அவனுடன் சலிக்காமல் விளையாடி...கரகரத்த குரலில் அபஸ்வரமாய் தாலாட்டுப் பாடி...

இரவு வீடு திரும்பும் அபிராமியின் கண்கள் முழுக்கக் கனவுகள்.

''உனக்கென்னடி, ராசாத்தி...வாத்தியாருக்கு எந்த யோகம் இருக்குதோ இல்லையோ—பெண்சாதி யோகம் நிறைய...''

இப்படிப் பெண்கள் பேசுவதை அப்படியே வந்து கணவனிடம் சொல்வாள் அபிராமி.

''என்னங்க, நான் அத்தனை அழகா?...''

''நிஜமாவே நீ கொள்ளை அழகுதான் அபிராமி...''

''என்னைப்பார்த்தா எந்த சினிமாக்காரி சாயலாவது இருக்கா...?''

''உம்...உன்னைப் பார்த்தா மகாலட்சுமி மாதிரி தான் எனக்குத் தோணுது...''

''மகாலட்சுமியா, அப்படி யாரும் நடிகை இல்லையே...லட்சுமிங்கற பேருல ரெண்டு மூணு பேரு..' இப்பக்கூட—ஜீவனாம்சம் படத்துல ஒரு லட்சுமி வரா... நல்லாயிருக்கா...மூக்கும் முழியுமா...''

''நான் ஏழுமலையானோட மார்புல வாசம் பண்ற மகாலட்சுமிய சொல்றேன் அபிராமி...

அவன் புன்னகைப்பான். அவள் பெருமையுடன் அவனது மடியில் முகம் பதித்து சிரிப்புப் பூக்களை வாரி இறைப்பாள்.

அபிராமியின் சிரிப்பில் குதூகலமான பேச்சில், தன்னை மறந்து—இத்தனை நேரம் வரையில் குழந்தை யுடன் பட்ட சிரமம் மறந்து—எத்தனை நிம்மதியாக இருந்தான் அவன்...

அவனது நிம்மதியில் மண்ணை அள்ளிப் போடும்



படியாக—எப்படி அவள் இத்தனை சூரமாய் செயல் பட்டாள்...

அன்று மாலை வீடு திரும்பிய கணவனிடம்—மாரி யம்மன் திருவிழாவுக்காக நாடகக்குழு ஒன்று எதிர் வீட்டில் வந்திறங்கியிருப்பதை எத்தனை உற்சாகமாய் சொன்னாள் அபிராமி.

''என்னங்க, நம்ம மாரியம்மன் கோவில் திருவிழாக் காக மூணுநாள் நாடகம் போடப் போறாங்களாம். பட்டணத்துலருந்து பெரிய நாடகக் கம்பெனி ஒண்ணு வந்து இறங்கியிருக்குங்க...''

''அப்படியா? எங்கே இறங்கியிருக்காங்க...?''

''அதாங்க...எதிர்த்தாப்பல மிராசு பொன்னுரங்கம் வீடு ஒண்ணு காலியா இருக்குதில்லே...அதிலே வந்து தங்கியிருக்காங்க, இருபது இருபத்தஞ்சு பேரு..நாலஞ்சு பொம்பளைங்க கூட இருக்காங்க...என்னமா சிவி சிங்காரிச்சுகிட்டிருக்காளுங்க...கொஞ்சம் என்வோட வாங்களேன்...காமிக்கறேன்...அம்புட்டுப்பேரும் இத்தினி நேரம் வீட்டுக்கு வெளியில, திண்ணையிலதான் உட் கார்ந்திருந்தாங்க. உள்ளே இருக்கற காத்தாடி சரியா சுத்தலையாம்...ரிப்பேரு செய்யற மட்டும் வெளில உட்கார்ந்திருந்தாங்க...நான், மீனாள் எல்லாரும் போய் பார்த்திட்டு வந்தோம்...''

''உம்...எப்படியிருக்காங்க? ஒவ்வொருத்தனுக்கும் தலையில ரெண்டு கொம்பு மொளைச்சிருக்கா...''

''ம்...போங்க...உங்களுக்கு எப்பவும் கேலிதான்...''

அவள் சிணுங்க—அவன் உடனே சமாதானக் கொடியை வீசி வீசி ஆட்ட...

''சரி தப்பு, தப்பு...இனிமே அப்படி சொல்லலை, நீ சொல்ல வந்ததைச் சொல்லு...''

"அந்தப் பொம்பளைங்க எல்லாம் என்னமா இருக்காங்க தெரியுமா? ஒவ்வொருத்தியும் ஷோக்கா அலங்காரம் பண்ணிட்டிருக்கா. உதட்டுல செக்கச் சிவக்க சாயம் பூசி — கன்னத்துல ரோஜா நிறத்துல என்னத்தையோ குழைச்சுப் பூசிக்கிட்டு... அவங்க நடையே தாளலயத்தோட என்னம்மா இருக்குது..."

அன்று முழுக்க—அவள் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள். அண்டை அயல் பெண்களுடன் கூடி அமர்ந்து எதிர் வீட்டையே வெறிக்க வெறிக்கப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

"ஏண்டி, அவங்க போட்டிட்டிருக்காங்களே அத்தனை நகையும் தங்கமா?"

"அடி போ, அத்தினியும் பித்தளையா இருக்கும்டி..."

"சித்த முன்னால ஓடிசலா ஒரு பொண்ணு போனாளே... அவ ரவிக்கைய கவனிச்சயா...ச்சீ, தூ வெட்கமாயிருக்காது?"

"என்னாடி வெட்கம்; நல்லாத்தானே இருக்குது... அதெல்லாம் அவங்களுக்குத்தான் கச்சிதமா, பொருத்தமா இருக்கும். நமக்கெல்லாம் சரிப்பட்டு வராது..."

"ஏன், நம்ம அபிராமிக்கு எடுப்பாக இருக்கும். இதெல்லாம் என்னா...தரித்திரங்க...நம்ம அபிராமிக்கு எது செஞ்சாலும் நல்லா இருக்கும். நேத்திக்கு நாடகத்துல ஒருத்தி சீதையா நடிச்சாளே...அவ பல்லும் பவிஷும்...அபிராமி சீதைவேஷம் போட்டா, இன்னிக்கு முழுக்க பார்த்துக்கிட்டே இருக்கலாம்.."

அபிராமி அத்தனையையும் கேட்டுக் குளிர்ந்துபோய் உட்கார்ந்திருந்தாள்.



மனக்கண் முன் தான் சீதையாய் அலங்காரப் பதுமையாய் கையில் மாலையுடன் நிற்பதுபோலவும், ராம வேடதாரி வில்லை ஒடித்ததும் துள்ளி வந்து மாலையை அவள் கழுத்தில் போடுவது போலவும், கரகோஷம் விண்ணைப் பிளப்பது போலவும்...

இந்தக் கற்பனைகள் வெகு சுகமாயிருக்கின்றன. மனசுக்குள் வெகு நாட்களாய் இன்னதென்று தெரியாமல் மறைந்திருந்த ஏக்கம் இலேசாய் தலைகாட்டத் துவங்கியது...

'நானும் இதுமாதிரி வேசம் கட்டிட்டு ஆடணும்; நாடகத்துல, சினிமாவுல எல்லாம்...'

'ஐயோ, மச்சானுக்கு என் ஆசை தெரிஞ்சா கோவிச்சுக்க மாட்டாரா...'

அன்றுதான் அவள் முதன் முதலாய் சத்யமூர்த்தியை மணந்தது மடத்தனம் என நினைக்க ஆரம்பித்தாள்.

தன்னுடைய அழகனைத்தும் காட்டில் காயும் நிலவைப்போல வீணாவதாய் நினைத்து மருகத் தொடங்கினாள்.

அன்று காலையில்—

எதிர்வீட்டிலிருந்து நடுத்தர மாது ஒருத்தி, சிரித்தபடி இவளது வீட்டிற்கு வந்தாள்.

அவளை முதல் நாடகத்தில், கைகேயியாகப் பார்த்த நினைவு வருகிறது அபிராமிக்கு...

"வாங்க, வாங்க..."

முகம் மலர சிரித்தபடி வரவேற்றாள் அவள். சந்தோஷத்தில் தலைகால் புரியவில்லை.

"அம்மாடி...ஒரு கிண்ணி தேங்காயெண்ணை இருந்தாக் கொடேன் அந்தப் புள்ள பார்த்திபனுக்கு உடம்புல தேய்ச்சு மஸாஜ் பண்ணிக்க. பொட்டு எண்ணை இல்லே.

மிராக வீட்டுக்கு ஆளனுப்பி ரெண்டு மணி கூறாவுது...''

அபிராமி அவசரமாய் உள்ளே ஓடி, பெரிய கிண்ணத்தில் தாராளமாகவே எண்ணையை ஊற்றிக் கொடுத்தாள்

''என் ராசாத்தி...நீ நல்லாயிரு...வரட்டுமா...''

அவள் கிளம்ப—

''உங்க பேரு என்னங்க...''

ஆவலை அடக்மாட்டாமல் அபிராமி விசாரிக்க—

''பங்காரு...பங்காரும்மாம்பாங்க..,பழைய சினிமாவுல எல்லாம் என் டான்ஸ் இல்லாம இருக்காது...''

''அப்படியா...!''

''உம்...நம்ம பார்த்திபன் கூட சொல்லுவான்..உங்க அளவுக்கு தொழில் தெரிஞ்சவங்க இப்ப யாரு இருக்காங்கன்னு...''

''பார்த்திபன் யாரு?''

''நீ நேத்து டிராமா பார்க்கலையா,..ராமரு வேஷம் போட்டானே...''

அவள் பிரமித்து நின்றாள். முதல்நாள் நாடகத்தில் ராமனாக வந்தவனின் வேஷப் பொருத்தமும் நடிப்பும் நெஞ்சில் மின்ன...

''இப்ப அவங்களைப் பார்க்க முடியுமா...சும்மாத் தான். வேசம் கட்டாதப்ப எப்பிடியிருக்கார்னு பார்க்க...''

''பேஷா வாயேன், நா அழைச்சகிட்டுப் போறேன் வா ..''



பங்காரு தாராளமாய் அழைத்தாள். அபிராமி நாய்க்குட்டி போல அவளைப் பின்தொடர்ந்தாள்.

## 5

**கன்னி வருவாளென்று—குட்டி**
**கட்டி வச்சேன் கூடாரம்**
**கூடாரம் ரெண்டாச்சு—குட்டி**
**குறுக்கே ஒரு மதிலாச்சு!**

அலையலையாய் பின்னோக்கி வாரப்பட்ட பாகவதர் கிராப்பு. செக்கச் சிவந்த மேனி. அசப்பில் பார்த்தால் பெண்பிள்ளை போன்றதொரு தோற்றம். அதிக உயரமும் இல்லாமல் அதிகப் பருமனுமில்லாமல் நிதானமான தேகம். அந்தத் தேகத்துக்குப் பார்த்துப் பார்த்து அவன் செய்திருந்த அலங்காரம்.

கழுத்தில் கிடந்த மைனர் செயின் நாபி வரையில் தொங்க—அதில் உள்ளங்கை அகலத்துக்கு தங்க மெடல் வெய்யில் பட்டு பிரகாசிக்க—கட்டை விரலைத் தவிர மற்ற விரல்களிலெல்லாம் ரங்கூன் வைரம் கிலுகிலுக்க—மணிக்கட்டில் தங்கத் தோடா. காதில் வைரக் கடுக்கன், நெற்றியில் சவ்வாதுப் பொட்டு... உடம்பு முழுக்க எண்ணையைத் தடவிக் கொண்டு திண்ணையில் உட்கார்ந்திருக்கிறான் அவன்...

அவன்தான் பார்த்திபன்.

இரண்டு பக்கமும் இரண்டுபேர் அவனது உடம்பைப் பிடித்து அமுக்கிக் கொண்டிருக்க, தெரு கொள்ளாத கும்பல், முதல்நாள் நாடகத்தில் நடித்த ராமனை எத்தனை பயபக்தியுடன் பார்த்தார்களோ...அதே அளவு பக்தியுடன், மரியாதையுடன் 'ஆ'வென வாய் பிளக்கும் அப்பாவி ஜனங்கள்.

பங்காருவின் பின்னால் உடம்பைக் குறுக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் அபிராமி. திண்ணையில் அமர்ந்திருந்தவனை தலையை நிமிர்த்திப் பார்க்கக் கூட வெட்கம்...வாசலில் அத்தனைபேர் காத்திருக்க—தான் மட்டும் உள்ளே சகஜமாய் வெகுநாள் பழகியவள்போல நுழைவதில் தலை கொள்ளாத பெருமை...அப்பேர்ப் பட்ட பார்த்திபனின் எதிரில் நாட்டுப்புறவாடை நீங்காத தான் நிற்பதினால் ஏற்பட்ட வெட்கம்...

''உள்ளாரப் போயிடுவம்...இங்கே நிக்க கூச்சமா இருக்கு..''

அபிராமி தவிக்க—பங்காரு மிதப்பான புன்னகை யுடன் அவளை உள்ளே அழைத்துச் சென்று பாய்விரித்து உட்காரச் சொன்னாள்.

''இரு..,தம்பியக் கூட்டியாரேன்...''

''இருக்கட்டுங்க. அவரு குளிக்கறதுக்கு கிளம்பிகிட்டி ருக்காப்பல இருக்குது...''

''அட, நீ ஒண்ணு. இப்போதைக்கு தம்பி குளிக்கப் போகாது. எண்ணைய வச்சுகிட்டு நல்லா ஊறின பிற்பாடுதான் குளியல்...''

அவள் வாசலுக்கு விரைய, அபிராமி விழிகளை மலர்த்தி சுற்றுமுற்றும் பார்க்கிறாள்.

முதல்நாள் சீதையாக நடித்த பெண்ணை உட்கார்த்தி வைத்து—சூர்ப்பனகையாய் நடித்தவள் தலை சீவி பேன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தசரதனாய் நடித்தவன்—லட்சுமண நடிகருக்கு கால் பிடித்து விட்டுக் கொண்டிருந்தான்.

மண்டோதரி ஒரு மூலையில் அமர்ந்து, ரவிக்கையில் விட்டுப்போன தையலை தைத்துக் கொண்டிருந்தாள்.



இராவணன்—கையகலக் கண்ணாடியில் முகம் பார்த்து சவரம் செய்து கொண்டிருந்தான்..

ஒரு மூலையில் முதல்நாள் உபயோகித்த கிரீடங் களுக்கும் நகைகளுக்கும் பாலீஷ் போடப்பட்டுக் கொண் டிருக்க...

ஆஞ்சநேய வேடதாரி, ஒரு தம்ளர் டீயை வைத்துக் கொண்டு...சீதையாக நடித்தவளிடம் ஆயிரம் சேஷ்டை களுடன் கொஞ்சிக் கொண்டிருந்தான்.

''தே...குமாரி...இன்னி ராவு நாடகம் முடிஞ்ச பொறவு டூரிங் டாக்கிசுக்குப் போலாம் வர்றியா... அலிபாபாவும் நாப்பது திருடர்களும் ஓடுதாம்...''

சீதையாய் நடித்த குமாரி—முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''என்னா கண்ணு கோவம்...ஐயே, மூஞ்சை இப்பிடி திருப்புலியா...''

''தா பாரு, இதெல்லாம் இங்க வேணாம். நேத்து என்ன சொன்னே...பக்கத்து டவுனுக்குப் போயி, எனக்காக ரவிக்கைத் துணி வாங்கி வரப் போறேன்னு சொன்னே இல்லே, இன்னும்தான் தரப்போறே...நேத்தி அத்தனை பேச்சு பேசிட்டு அந்த சைதாப்பேட்டை பொம்பளை—அதான் தா உட்கார்ந்திருக்காளே...அவ பின்னாடி ஓடினே...அடத் தூ. நீயெல்லாம் ஒரு ஆம்பிளையாங்காட்டியும்...''

குமாரி—தோள்பட்டை வரையிலும் .பம்மென்று படர்ந்திருந்த தலைமயிரை ஒருமுறை குலுக்கிவிட்டு நிமிர-அவள் சுட்டிக் காண்பித்த இடத்தில் அமர்ந்திருந்த மண்டோதரி சீறிப் பாய்ந்தாள்.

''இந்தாம்மே, எங்கிட்ட வம்புக்கு வந்தா சும்மா விட மாட்டேன். ஆமாம்...உனக்கு தில் இருந்தா அந்த ஆளை என் பின்னால சுத்த விடாமப் பார்த்துக் கோயேன். அதை விட்டுட்டு ஆடுறா ஆட்டம் தாதையின்னு...''

அபிராமி ஆச்சரியத்துடன் இவர்களின் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தாள். புதியவள் ஒருத்தியின் முன்பு அடித்துக் கொள்கிறோமே என்கிற ஸ்மரணையே இல்லாமல் அவர்கள் இரைந்து கொண்டுதானிருந்தார்கள்.

''என்ன அங்கே கலாட்டா...இந்தாம்மா குமாரி... வரவர உன் வாயி ரொம்ப நீளுது. கம்பெனி ஆம்பிளைங்கள கெடுக்கறதே நீதான். இப்படியே போனே... ஹீரோயின் வேசத்தை மூட்டை கட்டி வச்சிட்டு தட்டு தூக்கற தோழிப் பொண்ணுல ஒருத்தியா நிக்க வேண்டியிருக்கும். ஜாக்கிரதை!''

பார்த்திபன் உள்ளே வந்து, இடுப்பில் கை வைத்தபடி கத்த—'சட்'டென அமளி ஓய்ந்தது.

சாய வேட்டியை மடித்துக் கட்டியபடி, உடம்பெல்லாம் எண்ணை மினுமினுக்க அவன் வந்து நின்றவுடன், வாரிச் சுருட்டியபடி எழுந்தாள் அபிராமி. அப்பொழுதுதான் அவளை கவனித்தது போல போலிப் பணிவுடன் இடுப்பை லேசாய் வளைத்து கரங் கூப்புகிறான் பார்த்திபன்.

''அடடா...உட்காருங்க. நா இவங்களை மிரட்டின மிரட்டலுலே நீங்க பயந்துட்டீங்க போல இருக்கு...''

அபிராமி வெட்கத்தில் முகம் சிவந்தாள். அவனிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் தடுமாறிப்போனாள். சமயத்தில் பங்காரு கை கொடுக்காவிட்டால் திண்டாடிப் போயிருப்பாள்.



''இந்தப் பொண்ணு எதிர் வீட்டுல இருக்குது... இவங்க வீட்டுல போயிதான் தேங்காயெண்ணை வாங்கி வந்தேன். தம்பி பேரை சொன்னதுமே எண்ணைக் குப்பிய தலைகுப்புற கிண்ணத்துல கவிழ்த்துக் கொடுத்திடுச்சு. அதுக்கென்னா வாயேன்... பார்த்திபன் தங்கமான புள்ளை. நல்லா பேசுமின்னு தகிரியம் சொல்லி இட்டாந்தேன்...''

பங்காரும்மா காவிப் பற்கள் தெரிய சிரிக்க, பார்த்திபன் அபிராமியைப் பார்த்து மெல்லிசாய் புன்னகைத்தான்.

''உங்களை மாதிரி ரசிகர்களோட அபிமானம்தான் எங்களுக்கு சொத்து. இந்தக் கையால ஆயிரக்கணக்கா பணத்தை அள்ளறேன். பணம் இன்னிக்கு வரும். நாளைக்கே போகும். அன்புதான் நிலைச்சு நிக்கும்... என்ன பங்காரும்மா, நா சொல்றது சரிதானே?...''

''கரெக்டு தம்பி. நூத்துக்கு நூறு கரெக்டு...''

பங்காரு. புகையிலையைக் கிள்ளி வாயில் அடக்கிக் கொண்டு தலையைப் பெரிசாய் ஆட்டினாள்.

''உங்க பேரு என்னங்க?''

பார்த்திபன், கண்களால் அவளை அளந்தபடி கேட்க, அவள் நாணித் தலை கவிழ்ந்தாள்.

''அபிராமிங்க...''

''அடடே நல்ல பேரு...நான் கும்பிடற அம்பிகை பேரு. அபிராமிதான் என் கண்கண்ட தெய்வம்...''

பங்காரு, 'இது என்ன, நமக்குத் தெரியாத புதுக் கதையாக இருக்கிறதே' என்பது போல பார்த்திபனைப் பார்க்க—

அவன், அவளுடைய பார்வையை லட்சியம் செய்யாமல் அபிராமியையே பார்த்தபடி சொன்னான்.

''இன்னிக்கு ராவு சத்தியவான் சாவித்திரி நாடகம் இருக்குதுங்க...நீங்க உங்க குடும்பத்தோட கொஞ்சம் சுருக்கா வந்திடுங்க. முன் வரிசையில உட்கார்த்தி வைக்கிறேன். மிராசு பொன்னுரங்கம் வீட்டுப் பொம்பளைங்க உட்கார்ந்திருப்பாங்களே... முதவரிசையில ஜமக்காளம் விரிச்சு...அவங்க பக்கத்துல உக்கார வைக்கறேன்... அங்கேயிருந்து நல்லாத் தெரியும் நான்தான் சத்தியவான்... நம்ம லீலாராணிதான் சாவித்திரி... லீலா ராணி தெரியுமில்லே...பங்காரு, லீலாவைக் கூப்பிடு...''

அவனது குரல் கேட்டு, உள்ளிருந்து இருபத்தைந்து வயது மதிக்கத் தகுந்த—கட்டுமஸ்தான பெண் ஒருத்தி வெளியே வர...

''இவங்க எதிர் வீட்டுல இருக்காங்க. பேரு அபிராமி இவதாம்மா லீலாராணி. யமன் கூட மட்டுமில்லே, எல்லார் கூடவும் நல்லா சண்டை பிடிப்பா...''

அவனை வெட்டி விடுவது போலப் பார்த்துவிட்டுத் தலை குனிந்தாள் லீலா. அபிராமியை அவள் பார்த்த பார்வையில் சினேகம் இல்லை. விழி முனையில் தீச்சுடராய் பொறாமை ஜொலித்தது.

'நீ எங்கேயிருந்து வந்தே, என் குடியைக் கெடுக்க...' என்பது போன்ற எரிச்சல் மண்டியது.

அன்றிரவு நாடகத்துக்கு—அபிராமிக்கு மட்டுமல்லாது அவளுடன் சென்ற அக்கம்பக்கத்து வீட்டுப் பெண்களுக்கும் சேர்த்து முதல் வரிசையில் இடம் கிடைக்கிறது...



சோபா, நாற்காலி இல்லை, வெறும் மண் தரை தான். இருந்தாலும் ஜமக்காளம் விரித்து, பக்கத்திலேயே மிராசு வீட்டுப் பெண்கள் உட்கார்ந்திருக்க, நாடகம் பார்ப்பதில் ஏகப்பட்ட பெருமை அபிராமிக்கு...போதாக் குறைக்கு இடைவேளையின் போது—ஒரு ஆள் அவளருகில் வந்து கோலி சோடாவை உடைத்து நீட்டிய போது—சந்தோஷம் தாளாமல் திணறி விட்டாள் அவள்.

''குடிங்கம்மா... பார்த்திப அண்ணாச்சிதான் கொடுத்திட்டு வரச் சொன்னாரு...''

''எனக்கா...இருக்காதுங்க...''

''அட பாட்டிலைப் பிடிங்கம்மா... அவருதான் அதோ முன் வரிசையில மஞ்ச சின்னாளம்பட்டுப் புடவை கட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்காங்களே...அவங்களுக்கும், அவங்க சினேகிதிங்களுக்கும் சோடா உடைச்சுக் கொடுத்திட்டு வாடன்னாரு...''

அவன், மளமளவென்று சோடா பாட்டில்களை உடைத்து அபிராமியின் கூட வந்த பெண்களுக்கும் கொடுக்க...

இறக்கை கட்டிக் கொண்டு, வானத்தில் பறக்காத குறைதான் அபிராமிக்கு.

பார்த்திபனின் பாட்டும், ஆட்டமும், விழிவெட்டும் சபையையே அதிரச் செய்ய,..

'இத்தனை பிரபலமான நடிகனுக்கு மிகவும் வேண்டப்பட்டவள் நான்' என்கிற மதர்ப்புடன் அமர்ந்து நாடகம் பார்ப்பதில் அபிராமி அலாதி சுகம் கண்டாள்.

சத்யன்...

குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு ஓர் ஓரமாய் ஒதுங்கி நின்றிருந்தான்.

எங்கே, கும்பலின்—நடுவில் சிக்கினால், குழந்தை பெருங்குரலெடுத்து அழுவானோ என்கிற பயம்... பெண்கள் பகுதியில், முன் வரிசையில் தன் மனைவி அமர்ந்திருப்பதும், அவளுக்கு சோடா கலர் உபசாரம் நடப்பதும் அவனுக்கு சிரிப்பை உண்டு பண்ண...

'பார்க்கட்டும் பாவம். அவளுக்குத்தான் இதுலே யெல்லாம் எத்தனை ஆசை...'

கள்ளமில்லாத நினைப்புகள் மனைவியின் சந்தோஷத்துக்காக எந்தக் கஷ்டத்தையும் சகித்துக் கொள்ளும் தாராள நெஞ்சம்...தோளில் பிள்ளையோடு குறுக்கும் நெடுக்குமாய் நடை போட்டது...

நாடகக் காட்சியில் சத்தியவான் இறந்து கிடக்க, சாவித்திரி அடித்துக்கொண்டு அழுகிறாள்.

''கட்டிய சேலை யின்னும்
கசங்கி மடியவில்லை
வச்ச பூ இன்னும்
வாசங் குறைய வில்லை
மஞ்சள் கலைய வில்லை
மடிப்புக் குலையவில்லை...
பிஞ்சு வயதென்றேன்
பேராசைக் காரியென்றேன்
பெருமாளைப் பறி கொடுத்துப்
பிரிந்திருக்க மாட்டேனென்றேன்!
பிரிந்திருக்க மாட்டேனென்றேன்
பிடிக்க வந்தான் கேட்கலையே...
மட்ட வயதென்றே!
மனசாசைக் காரியென்றேன்
மன்னர் தனைப் பிரிந்து
வாழ்ந்திருக்க மாட்டேனென்றேன்
வாழ்ந்திருக்க மாட்டேனென்றேன்
மாய்க்க வந்தான் கேட்கலையே!''



கண்களிலிருந்து அருவியாய் கண்ணீர் வழிய வைத்த விழி வாங்காமல் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள் அபிராமி...

அவளுடைய சத்தியவான்—அவள் கழுத்தில் தாலி கட்டிய சத்யமூர்த்தி—கால் கடுக்க நடந்து கொண்டிருந்தான்!

அன்றிரவு முழுவதும் பார்த்திபனின் பரிதாபம்தான் அபிராமிக்கு...

''இன்னும் கூட மூணு நாளு இங்கே தங்கப் போறாருங்க...இன்னும் மூணு நாடகம்...ஏங்க, ஒரு நாளு நம்ம வீட்டுல அவுங்களை சாப்பிடக் கூப்பிடணுங்க...''

''அதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வருமா அபிராமி?

''ஐயோ, அவரு ரொம்ப நல்லவருங்க, கூப்புட்டா வருவாரு...கூப்பிட்டுத்தான் டார்ப்போமே...''

அபிராமி வேதனையை, சோதனையை வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கக் கிளம்பிவிட்டாள்!

# 6

**வண்டி மாடு இங்கிருக்கு**
**வயற்காடு உழுதிருக்கு**
**எருமைத் தயிரிருக்கு**
**ஏண்டி போறே சிங்கப்பூரு?**

பார்த்திபனின் நாடகக்குழுவில் மொத்தம் இருபத்தைந்து பேர். அத்தனை பேருக்கும் அன்று—சத்யமூர்த்தியின் வீட்டில் விருந்து நடந்தது. அபிராமி தன் கைப்பட அற்புதமாகச் சமைத்திருந்தாள். வஞ்சிரம் போட்டு அவள் வைத்திருந்த குழம்பு தெரு முழுக்க

மணத்தது. கோழி வருவலின் எண்ணெய் கமறலில் ஊர் முழுவதும் புரையேறித் தவித்தது...

சத்தியமூர்த்தியேகூட இதுவரையில் இவளது கையால் இத்தனை ருசியாய் சமைத்துச் சாப்பிட்டதில்லை.

''நீ இவ்வளவு நல்லா சமைக்கறதானா—தெனம் அவங்களை இங்கேயே சாப்பிடக் கூப்பிட்டேன்...''

இப்படி மனைவியைப் பரிகசித்தான்.

''போங்க...உங்களுக்கு எப்பவுமே என் வாயப் புடுங்கறதுதான் வேலை...''

அபிராமி சிணுங்கிச் சிரித்தபடியே ஒடி ஒடிப் பரிமாறினாள்.

''நீங்க எல்லாரும் இருந்து நிதானமா சாப்பிடுங்க. எனக்கு ஸ்கூலுக்கு நேரமாச்சு. டயத்துக்குப் போவணும். வாத்தியாரே லேட்டாப் போனா—பசங்களுக்குத் துளிர் விட்டுக்கும்...நான் வரேன், சாயந்தரமா பார்க்கலாம். எதிர்வீடு தானே...''

சத்யன் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பிவிட்டான். கர்மயோகி போல.

''ஆமாங்க...நீங்க கௌம்புங்க தம்பி. எங்களுக்கு என்னா. ராவுதான் நாடகம். இப்ப சாப்பிட்டு முடிச்சதும் கட்டைய கீழே கிடத்தினா—நாலுமணி வரைக்கும் நல்லா தூங்குவம். உங்க பொழப்பு அப்படியில்லையே..''

பங்காரு, வாய் நிறைய வறுவலை அடைத்துக் கொண்டு சத்யனுக்கு விடை கொடுத்தாள். பார்த்திபன் நாசூக்காய், நுனி விரலால் சோற்றை அளைந்தபடியே சத்யமூர்த்தியைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''உங்களைப் பார்த்தா எனக்குப் பொறாமையா இருக்குது. ஒழுங்கான வேலை; கொஞ்சமா இருந்தாலும்



நியாயமான சம்பளம்; நிம்மதியான வாழ்க்கை..எங்களை மாதிரி உடம்பு முழுக்கப் பித்தளை நகைங்களை சுமந்துக்கிட்டு ராவு முழுசும் கண் முழிச்சுப் பக்கம் பக்கமா வசனம் பேச வேண்டியதில்லே...இன்னிக்கு ஒரு ஊரு, நாளைக்கு ஒரு இடம்னு ஊர் ஊரா அலைய வேண்டியதில்லே...பேசாம, இந்தமாதிரி ஒரு கிராமத்தோட செட்டில் ஆயிடலாமோன்னு தோணுது...''

பார்த்திபன் மனசார சொன்னானோ—இல்லை ஒப்புக்குச் சொன்னானோ...அந்த வார்த்தைகளைக் கேட்டதுமே பதறிவிட்டாள் அபிராமி.

''இது நல்லாயிருக்கே...உங்க நடிப்பைப் பார்க்க ராவு என்னா கூட்டம் வருதுன்னு பார்த்தீங்க இல்லே... வெளியூர்ல இருந்தெல்லாம் வண்டி கட்டிட்டு வராங்க... நீங்க என்னடான்னா இப்படி சொல்றீங்க...இதெல்லாம் பொறவிக் கலைங்க... நாலு எழுத்துப் படிச்சா வாத்தியார் தொழில் யாருக்கு வேணா கிடைச்சிட்டுப் போவுது. இது அப்படியா...போன ஜென்மத்துல செஞ்ச புண்ணியம்னான் இப்படியொரு கலை உங்களுக்குக் கைவந்திருக்கு என்னங்க. நான் சொல்லிகிட்டே இருக்கேன். பேசாம நிக்கறீங்களே எடுத்துச் சொல்லுங்க இவருக்கு...''

சொல்வதையும் சொல்லிவிட்டு, கணவனைப் பார்த்து ஒரு அதட்டல் போட—அவன் சிரித்தான்.

''அதான் எனக்குப் பதிலா நீயே சொல்லிட்டியே அபிராமி...நா சொல்ல என்ன இருக்கு...அப்ப நா வரட்டுமா...''

அவன் பள்ளிக்கூடத்துக்குச் சென்ற பிறகு—சக நடிகர்களையும் அவரவர்கள் வேலையைக் கவனிக்க அனுப்பிவிட்டு, விச்ராந்தியாய் காலை நீட்டி உட்கார்ந்தாள் பங்காரு. பார்த்திபன் வெள்ளி வெற்றிலைச் செல

லத்துடன் வாசல் திண்ணையில் உட்கார்ந்தான். அண்டை அயல் வீட்டுப் பெண்கள், தங்களது வீட்டு வாசற் கதவுகளை ஒருக்களித்துத் திறந்து வைத்துக் கொண்டு, ஒளிந்திருந்து பார்ப்பதைக் கண்டு, தனக்குள் விஷமமாய் சிரித்துக் கொண்டான். காற்றுக்காகத் தவிப்பவன்போல பட்டு ஜிப்பாவின் மேலிரண்டு பொத்தான்களைக் கழற்றி—மெடல் கோர்த்த சங்கிலியைப் பார்வையாக வெளியே எடுத்து விட்டுக் கொண்டான்... அலை பாய்ந்த கிராப்பை—ஒரு கையால் அழுத்தி விட்டபடி, எங்கெல்லாம் தலைகள் மறைந்திருக்கின்றன என்பதை ஓர விழிகளால் ஆராய்ந்தான்.

''பங்காரும்மா...நம்ம எடத்துக்குப் பேலாமா... இங்கே உட்கார்ந்து—அத்தினி பெண்டுகளும் மறைஞ்சு நின்று பார்க்கறாங்களே...''

ஒப்புக்காக, பங்காருவை பேச்சுக்கு இழுத்தான்.

''இருக்கட்டுமே...அவங்களுக்கெல்லாம் பொறாமை இத்தனை பெரிய நடிகரு, இந்த அபிராமிய மதிச்சு அவ வீட்டுக்கு வந்திருக்காரேன்னு...நீங்க பேசாம உட்காருங்க. பார்க்கறவ பார்த்துட்டுப் போவட்டும்...''

அபிராமி, குறுக்கே விழுந்து தடுக்காத குறையாய் தடுத்தாள். இதைத்தானே பார்த்திபனும் எதிர் பார்த்தான். அடுத்தபடியாய் தனது அஸ்திரத்தை வீசத் தொடங்கினான்.

''பங்காரும்மா... தூங்கிட்டீங்களா...சோத்தைப் போட்டாலே கண்ணு சொக்குமே உங்களுக்கு...''

''இல்லே தம்பீ... முழிச்சுகிட்டுத்தான் இருக்கேன். சொல்லு...''

''நம்ம அபிராமிக்கு இருக்கற அழகுக்கு...'' ஏதோ சொல்ல வந்தவன் 'சட்'டென நாக்கைக் கடித்துக் கொண்டான், அபிராமியைப் பார்த்து—



''என்னை மன்னிச்சுடுங்ககம்மா...''

—இப்படிப் பதட்டத்துடன் சொன்னான். அவள் புரியாமல் விழித்தாள்.

''எங்கிட்ட இருக்கற கெட்ட சுபாவம் இதுதான். யாராவது கொஞ்சம் பழகினாலும் போதும். அட்டையா ஒட்டிக்குவேன். அப்புறமா அவங்க வேற—நாம வேறங்கற நினைப்பே வராது...எங்குரூப்புல இருக்கறவங்களைக்கூட நம்ம ராணி, நம்ம விஜயா. நம்ம கண்ணகியின்னு சொந்தம் கொண்டாடிடுவேன், இப்பக் கூடப் பாருங்க... அதே பழக்க தோசம்...நீங்க ஒரு வேளை சோத்தைப் போட்டவுடனேயே நாய் மாதிரி சொந்தம் கொண்டாட ஆரம்பிச்சிட்டேன்...''

''அடப் பூ...இதானா. அம்மா அபிராமி, பார்த்திபன் தம்பி மனசு இருக்கே...தும்பைப் பூ மாதிரி. அம்புட்டு வெள்ளை. தம்பியோட குரூப்புல வேலை செய்யறதை பெரிய அதிருஷ்டமா நினைப்பாங்க எல்லாரும். பாரேன். தம்பிக்கு ஆறு வருசத்துக்கு முந்தியே சினிமா சான்ஸ் வந்தது...''

''சினிமாவுல நடிக்கறதுக்கா...போயிருக்கலாமே...'' அபிராமி கண்களை அகல விரித்தாள்.

''அட ஆமாம் கண்ணு...அப்போ ஆக்ட் பண்ணப் போயிருந்தா...இப்ப பெரிய ஸ்டாரா ஆகிட்டிருக்கும்! அசட்டுப் புள்ள வேண்டாம்னு சொல்லிடுச்சு...''

பங்காரு சொல்லச் சொல்ல அபிராமிக்கு என்னவோ தெய்வ சந்நிதியில் நிற்பது போன்ற பிரமை. திறந்த வாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருந்தாள்.

பார்த்திபனுக்கோ—எதிரில் நிற்பவளின் அழகைப் பார்த்துப் பார்த்து அதிசயப்படவே நேரம் போதவில்லை.

31452
4818025

'இந்த அழகு மட்டும் பட்டணத்துல இருந்துச் சுன்னா—எத்தனை லட்சத்துக்கு விலை போகும்' என்கிற ரீதியில் மனசு கணக்குப் போட்டுப் பார்த்தது.

'இவ மட்டும் நம்ம நாடகக் குழுவுல இருந்தா—எப்படியெல்லாம் பணத்தை வாரலாம்' என்று கற்பனை செய்து பார்த்தது.

இவையெல்லாவற்றையும் விட... அபிராமியின் அழகு அவனைக் கிறங்க அடித்தது. இது நிஜம். அந்த சந்தன மேனியைத் தொட்டுப் பார்க்க வேண்டும்போல உள்ளம் பறவாய் பறந்தது.

அவனது நாடகக் குழுவில்—பங்காருவைத் தவிர மற்ற பெண்களனைவருமே பார்த்திபனின் வைப்பாக சில நாட்களாவது இருந்தவர்கள்தான். இதற்கு ஒத்துக் கொள்ளாமல் முரண்டு பிடிக்கும் பெண்களை அவன் சீந்துவதில்லை.

"ஆமா, இவ பெரிய ரதி. தொடாமக் கொள்ளாம நடிக்கணுமாம். கண்டிஷன் போடறா 'மனசுக்குள்ளார சினிமா ஸ்டாருன்னு நினைப்பாக்கும். நாடகத்துல வேசம் கட்டணும்னா—அதுவும் இந்தப்பார்த்திபனுக்குப் பக்கத்துல உட்கார்ற கதாநாயகி அந்தஸ்து கிடைக் கணும்னா இதையெல்லாம் பார்த்தா முடியாது. சொல் லிட்டேன். எனக்குப் பத்தினிப் பொண்ணுங்க வேண் டாம். நாடக நடிகைங்க, எல்லாத்தையும் சுலபமா எடுத்துக்கற பொம்பளைங்க கிடச்சா போதும்..."

இப்படி 'பளிச்'செனக் கூறிவிடுவான். மேலும் நடிகைகளைத் தேடி அவன் தெருத்தெருவாய் அலைந்த தில்லை. இதுவரையில் பிழைப்புக்கு வழிதேடி-பங்காரும் மாவின் மூலமாய் அவனிடத்தில் சரணடைந்த பறவைகள் தான் அதிகம்.



அவனாக எவளையும் நாடிப்போனதில்லை. 'இவ சந்திரமதி வேசம் போட்டா நல்லா இருக்கும்' என்றோ-'இவ சீதை வேசத்துக்குப் பொருத்தமானவ' என்றோ அவன் யாரையும் தேர்ந்தெடுத்ததில்லை,

எவள் அவனது சொற்படி கேட்கிறாளோ அவளுக்கு நல்ல கதாபாத்திரம்.

எவள்—அந்தச் சமயத்தில் அவனது விருப்பத்துக்கு மிகவும் பாத்திரமாக இருக்கிறாளோ அவளுக்கு நாடகக் குழுவில் ராஜோபசாரம் நடக்கும். கொஞ்சகாலம்தான். பார்த்திபனுக்கு அவள் மீதிருக்கும் பிடிப்பு தளர ஆரம் பித்ததும்-வேறொரு புதுநடிகை குழுவில் சேர்ந்ததும்—முதலாமவரின் மீதிருந்த மதிப்பு இறங்கிவிடும். அவனது கதாநாயகியாய்—பளபளக்கும் உடையணிந்து பாட்டுப் பாடி ஆடியவள், தட்டைச் சுமக்கும்சேடிப் பெண்ணாக நாடக அரங்கின் ஓரத்துக்குத் தள்ளப்படுவாள்.

தலைவிகள் மாறுவார்கள். தலைவன் மட்டும் புதுப் புதுப் பூவை நாடும் வண்டாய் ராஜாங்கம் நடத்திக் கொண்டேயிருப்பான்.

இவனுடைய செய்கையால் மனம் வெறுத்து, 'ச்சீ'யென ஒதுங்கிப் போன பெண்கள் பலர்.

எப்படியோ பிழைப்பு நடந்தால் சரி என-அவன் கொடுக்கும் பாத்திரத்தை ஜடமாய் ஏற்றுக்கொள்ளும் நடிகைகள் பலர்...

சரக்கு மலிந்ததும் சந்தைக்கு வருவதுபோல-பார்த்தி பனின் ஆளுகையிலிருந்து விடுபட்ட பெண்கள்-அதே நாடகக் குழுவிலுள்ள மற்ற சில்லறை வேடதாரிகளுக்கு, ஒப்பனைக் கலைஞர்களுக்கு, திரை நகர்த்தும் இளவட் டங்களுக்குத் தற்காலிக மனைவியாய் இருப்பதுமுண்டு.

ஆனால்—பார்த்திபனாய் பார்த்து ஒரு பெண் மீது அளவற்ற மோகம் வைப்பது இதுவே முதல்தடவை...

'இந்த சத்யமூர்த்தி—அண்டங்காக்கா மாதிரி இருக்கற பய...இவனுக்குப் போயி இப்படி ஒரு பொண்ஜாதி அவசியமா...'

காரணமில்லாமல் சத்யமூர்த்தியின் மீது எரிச்சலாக வந்தது அவனுக்கு.

இவளை எப்படியாவது என்னுடையவளா ஆக்கிக்கணும். எப்படியாவது...'

நினைப்பின் வேகம் தாளாது தேகம் தகித்தது. வெற்றிலைச் செல்லத்தின் மீது விரலால் தாளமிட்டபடி சிந்தனையைத் தீவிரமாக்கி...

'அபிராமிக்கு சினிமா நாடகத்துல ஒரு மோகம்... ஏன் பைத்தியமே இருக்கு...இதை நமக்கு சாதகமா பயன்படுத்திக்கிட்டா என்னா...'

எண்ணத்தின் முடிவில்—மிகப்பெரிய திட்டமொன்று விரிய...அவன் வெற்றிப் புன்னகை பூத்தான்.

''பங்காரு...நா சொல்ல வந்ததைச் சொல்லலையே... இவங்களுக்கு இருக்கற அழகுக்கு-சினிமாவுல பூந்தாங்க.. பிச்சு உதறிடுவாங்க...இப்ப இருக்கற நடிகைங்களுக்கு இந்த முகவெட்டும், உடல்கட்டும் இருந்திச்சு...''

''ஐயய்யயோ...வானத்துக்கும் பூமிக்குமா றெக்கை கட்டிக்காத நோசமாயில்ல பறப்பாங்க...''

—பங்காரு, பார்த்திபனின் நோக்கமறிந்து ஒத்துப் பாடுகிறாள். அவளுக்குத் தெரியும், மனிதனின் சபலம், அவளுக்குத் தெரியும். தான் எப்படியெல்லாம் வளைந்து கொடுத்தால் வயிறு வளர்க்க முடியுமென்பது, அவளுக்குத் தெரியும். பார்த்திபனை அனுசரித்து, 'அவனது



திட்டங்களில் கைகொடுத்தால்தான்—தான் இந்த நாடகக் குழுவில் நிரந்தரமாய் இருக்கமுடியும் என்பது. அதனால், பார்த்திபன் வீசிய வலையில் பெரிய மீனாய் சிக்கும் வரையில் தானும் மாற்று வலை விரிக்கத் தயாராகி விட்டாள்.

''அபிராமி...தம்பி இதுவரைக்கும் எந்தப் பொண்ணையும் பார்த்து இந்த வார்த்தைய சொன்னதில்லே. எனக்கே ஆச்சரியாமால்லே இருக்குது... சினிமாவுல கொடிகட்டிப் பறந்த பத்மினி, சரோஜாதேவி, சாவித்திரி இவங்க எல்லாரையுமே நம்மதம்பி ஏதோ ஒரு குறை சொல்லும். 'கண்ணு அழகா இருக்கற அளவுக்கு மூக்கு நல்லாயில்லே'ங்கும்; 'முகத்துலே இருக்கற கவர்ச்சி உடம்புல இல்லே'ங்கும். எல்லாமே இருந்தாக்கூட—உணர்ச்சிகள வெளிப்படுத்தத் தெரியலை. பொம்மை மாதிரி நிக்குதுன்னு சொல்லிப்புடும். அந்த மாதிரி ஒரு குணம். தம்பியே உன்னைப் பார்த்து சொல்லியிருக்குதுன்னா...சும்மாயில்லே. தா, நம்ம குழுவுல இருக்கற லீலாராணி — இதுங்கிட்ட 'சபாசு' வாங்கிடணும்னு ஒத்தைக் காலுல நிக்குது...''

பார்த்திபனின் பாட்டுக்கு சுருதி கன கச்சிதம்.

அபிராமி—அளவு கடந்த ஆச்சரியத்துடன் பங்காருவைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

தான் அழகுதான். இருந்தாலும் சினிமாவில் நடிக்கக்கூடிய அளவுக்கு அழகா...

இவர்கள் சொல்லித்தானே தெரிகிறது.

''என்ன இருந்து என்ன பங்காரு...அபிராமியோட அழகெல்லாம் காட்டுல காயற நிலவு'மாதிரி. இதுவே பட்டணத்துல இருந்திருந்தா...லட்சக்கணக்கா பணத்துல மெத்தை தச்சுப் போட்டிட்டிருப்பாங்க. தங்கத்

தாம்பாளத்துல பால் சோறு திம்பாங்க. இவங்க முகத்தைப் பார்க்கறதுக்காக பங்களா வாசல்லே தினம் பெரிய கியூவே நிக்கும்...''

ஆகா...இந்தக் கற்பனைதான் எத்தனை சுகமானவை.

அபிராமியின் கண்முன் — பார்த்திபன் வர்ணித்த காட்சிகள் படமாய் விரிய...

தன்னை மறந்து நின்றாள் அவள்!

# 7

**சாலை கடந்து வாடி**
**சந்தைப் பேட்டை தாண்டி வாடி**
**ஓடை கடந்து வாடி**
**ஓடிப் போவோம் ரங்கூனுக்கு!**

பார்த்திபன் சொன்ன வார்த்தைகள் பலாச்சுளை போல் இனித்தது அபிராமிக்கு.

தனது வார்த்தைகள் எந்த அளவுக்கு வேலை செய்கிறது என்பது போல அவளை ஓரக்கண்ணால் பார்த்தவன்—அந்த முகத்தில் கொப்புளித்த பெருமிதத்தைக் கண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்

'கவலையில்லே, இது வளையற கேசுதான்...'

இந்த நினைப்பு புதுத் தெம்பைத் தர—அவன் அபிராமியை, அவளின் அழகை, அது அநாவசியமாய் கிராமத்தில் சீரழிவதைத் திருப்பித் திருப்பிச் சொல்லி அவளைப் பனியாய் குளிர்வித்தான்.

''பங்காரம்மா, பத்து நாள் முன்னாடி செட்டியாரு புதுப் படத்துக்காக ஹீரோயின் தேடிட்டிருக்கறதா சொன்னாரே...அப்ப என்ன சொன்னாரு...''



பங்காரு அவனைக் கூர்ந்து பார்த்தாள். வெற்றிலையைக் குதப்பும் உதடுகளில் விஷமம் விளையாடியது...

'ஏண்டா டேய்... ஒரு பொம்பளை கூட பார்க்க லட்சணமா, அளகா இருக்கக் கூடாதே உனக்கு...அது என்னாமாத்தான் இப்படி கதை திரிப்பியோ...'

மனசுக்குள் சிரித்துக் கொண்டே அவனுடன் ஒத்துப் பாட...

''யாரு. நம்ம அனா ருனா செட்டியார்தானே...ஊரு முழுக்க சல்லடை போட்டுச் சலிச்சாலும் மொத்தமா, எல்லாவிதத்துலயும் மனசுக்குப் பிடிச்சிருக்காப்பல பொண்ணு கிடைக்கலைப்பா...பிரும்மாவுக்கு அளகுன்னா என்னான்னே மறந்து போச்சு போலயிருக்கு அப்படின்னாரு...''

''அதைத்தான் கேட்கறேன், பங்காரும்மா, நம்ம செட்டியாரு மட்டும் அபிராமியப் பார்த்தாருன்னா...''

''ஐயோ, சொல்லாதே தம்பீ...அப்படியே அசந்து போய் மயக்கம் போட்டு விளுந்திடுவாரு...பிரும்மா எல்லா அளகையும் இவகிட்ட கொட்டிட்டதாலதான் பட்டணத்துப் பொம்பளைங்க அப்படி இருக்காங்கன்னு சொன்னாலும் சொல்லுவாரு...''

அபிராமி மலைத்து நின்றாள் அன்றைக்கு அவ்வளவு போதும் என்பது போல விடைபெற்று எழுந்தான்.

''சாயந்தரம் நாடகத்துக்கு வந்திடு அபிராமி...''

பங்காரு தூண்டுகோல் போட்டுவிட்டுக் கிளம்பினாள்.

''பங்காரும்மா, அபிராமி வறச்சே ரெண்டு தம்ளர் பாலுல, நாலஞ்சு வால்மிளகு தட்டிப் போட்டு எடுத்திட்டு வரமுடியுமான்னு கேளுங்க... மிராசு வீட்டுப் பாலு—நம்ம ஊரு காவேரித் தண்ணியவிட நீர்க்க இருக்குது...''

வாசலில் ஒரு காலும், தாழ்வாரத்து நடையில் ஒரு காலுமாய் நின்றபடி அவன் கேட்க...

''அதுக்கென்ன... கொண்டாரேங்க உங்களுக்கு எது வேணுமோ சொல்லி அனுப்புங்க... கொடுத்து அனுப்பறேன்...''

அபிராமி உச்சி குளிர்ந்து பதிலளிக்க...

அன்றிரவு—நாடகம் நடக்கும் திடலில் சேர்ந்திருந்த பெண்கள் கூட்டம் முழுவதும் அபிராமியை ஒரு மாதிரியாகப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தது.

''அடியே...வெங்கல கூஜாவுல என்னது...''

''உனக்குத் தெரியாதா, பால்கார சின்னான்கிட்ட அரைப்படி பாலு கூட வாங்கினாளே அபிராமி கோவலன் வேசம் கட்டிட்டு உள்ளார உட்கார்ந்திருக்காரே பார்த்திபன் மகாராஜா... அவரு தொண்டை உலராம இருக்க பால் கொண்டு போறாடி..,''

''பெத்த புள்ளைக்கு ஒழுங்கா பால் புகட்டினாளா இல்லையா...''

''அதைப்பத்தி இவளுக்கு என்னா கவலை...அதான் கட்டின புருஷன்—இவ காலால இட்ட வேலைய தலையால செய்ய கைகட்டிக் காத்துக் கிடக்காரே...''

''வாத்தியாரு பாவம்டி அவரோட அடக்கத்துக்கும், குணத்துக்கும் இந்த மாதிரி ஒரு பொம்பளை வந்து வாய்க்க வேணாம்... நீ வேணாபாரு. இந்த அபிராமிக்கு இவ அழகு தாண்டி எதிரி...நாமளும்தான் இருக்கோமே இப்படியா...அடியம்மா, புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிட்டு, கழுத்தை ஒரு வெட்டு வெட்டி இவ நடந்தா இங்கே வந்திருக்கிற அத்தினி ஆம்பிளைங்களும் 'ஆ'வுன்னு இல்லே வாயைப் பிளக்கறாங்க...''



''நீ கவனிச்சியா...நேத்து வாத்தியாரு வீட்டுலதான் டிராமாக்காரங்களுக்கு எல்லாம் விருந்து. அந்த பார்த்திபனும் அவன் கூடவே சுத்துவாளேடி பங்காருவோ—என்னாவே அவ பேரு—அவளும் ரொம்ப நேரம் அபிராமி கூடப் பேசிட்டிருந்தாங்க. நான் தெரியாமத்தான் கேட்கறேன் வாத்தியாரய்யா வீட்டுல இல்லாதப்ப கண்ட கூத்தாடிப் பசங்களோட இவளுக்கு என்னத்துக்குப் பேச்சு...''

''யம்மாடி அவன் கூடப்பேசறப்ப அவ மொகத்தைப் பார்த்தியா? அம்மா, மாரியம்மன் கோவில் பொங்கப் பானை கணக்கா இல்லே பொங்குது. நான் இதுமாதிரி வேத்து மனுசன்கிட்ட நின்னு பேசினேன்...எங்க வீட்டுக்காரர் அரிவாளைத் தூக்கிட்டு வந்திடுவாரு...''

''அதெல்லாம் வாத்தியாரு கொடுக்கற எடம்டீ. என்னதான் பொண்சாதி மேல பிரியம் இருந்தாலும் இந்தமாதிரி தலைமேல தூக்கி வச்சுக்கிட்டு ஆடக்கூடாது. தட்ட வேண்டிய நேரத்துல தட்டி வைக்கணும். இல்லாட்டி துளுத்துப் போயிடும்...''

சின்னச் சின்னதான வார்த்தைகள், தங்களுக்குள் ரகசியமாய் பரிமாறிக் கொண்ட விமரிசனங்கள்! பெண்கள்—அதுவும் கிராமத்துப் பெண்கள்—பொல்லாதவர்கள். அவர்களிடமிருந்து யாரும் தப்பிவிடமுடியாது. சின்னதாய் ஒரு முனை கிடைத்தாலும் அதை வைத்துக் கொண்டு வெகுவேகமாய் கயிறு திரிப்பதில் வல்லவர்கள்.

சத்யனின் காதில் இதெல்லாம் விழாமலில்லை. இந்தப் பெண்கள், சிலசமயம் அவனது செவிகளில் விழ வேண்டுமென்றே இரைந்து பேசினார்கள்.

அசட்டு சத்யன் இந்த வார்த்தைகளை பெண்களின் பொறாமைப் பேச்சாக நினைத்து ஒதுக்கினானே தவிர இவைகளைப் பொருட்படுத்தவேயில்லை.

''என்னங்க, சினிமாக்காரங்க எல்லாம் ஆயிரக் கணக்கா சம்பாதிக்கறாங்களே—அவங்க வீடெல்லாம் எப்படி இருக்கும் பார்த்திருக்கீங்களான்னு நான் பங்காரும்மாவைக் கேட்டேனா... ஒவ்வொருத்தர் வீட்டைப் பத்தியும் எப்படியெல்லாம் சொல்றாங்க தெரியுமா? அந்தம்மா...ஒரு நடிகை வீட்டுல—வீடுன்னு சொல்லக்கூடாது, மாளிகை—அந்த மாளிகையில யாருக்கும் தெரியாத நிலவறை இருக்குதாம், திருடங்க கண்டுபிடிக்கமுடியாதபடி...அந்த அறையில் கட்டுக் கட்டா ரூபா நோட்டு, தங்கக் கட்டிங்க, வைர நகைங்க எல்லாம் குவிச்சு வைச்சிருப்பாங்களாம்...இன்னொரு நடிகரு, தன்னோட படுக்கையறையில போட்டிருக்கற கட்டிலை—ராட்டினம் மாதிரி மெதுவா சுத்தறாப்பல வச்சிருப்பாராம்.''

''இப்ப எனக்கு தூக்கத்துல கண்ணைச் சுத்துது அபிராமி. தூங்கலாமே. நான் உன் மடியில தலைய வச்சிப்பேனாம். நீ பாட்டுப் பாடுவியாம்...நான் அப்படியே தூங்கிப் போவேனாம்...''

''உக்கும். போங்க. நான் எது சொன்னாலும் கண்டுக்காம இருங்க...''

அவள் புரண்டு படுத்தாள்.

சத்யனுக்கு—அவளது தோளைத் தொட்டு—'குடும்பப் பெண்ணான உன்னை, இந்தக் கிராமத்துப் பெண்கள் கண்டபடி பேசுகிறார்களே...கொஞ்சம் பதவிசாய் நடக்கக் கூடாதா'—என்று கேட்க வேண்டும் போல ஒரு கண நேர நினைப்பு...

அடுத்த நிமிடம்—தூக்கக் கலக்கத்தில் கோபத்தை மறந்து அவனை இறுக அணைத்துக் கொண்ட மனைவியைப் பார்த்ததும்— இந்த நினைப்பெல்லாம் பறந்து போயிற்று...



'அதுக்கென்ன செய்ய... ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு கலை மேல நாட்டம். எனக்கு சின்ன வயசுல தமிழ் சொல்லித்தந்த வாத்தியாரய்யாவுக்கு— இலக்கியக் கூட்டம், பட்டி மன்றம், இதுக்கெல்லாம் போறதுன்னா ஒரு வெறி மாதிரி... எத்தனை தொலைவா இருந்தாலும் மூச்சிரைக்க கூட்டம் ஆரம்பிக்கறதுக்கு முன்னாலே போயிடணும்னு ஓடுவாரு. தமிழ் அறிஞர்னு சொல்லிட்டு யார் அவரோட வீட்டுக்கு வந்தாலும், தான் குடிக்கற மல்லிக் காப்பியக் கொடுத்தாவது உபசரிப்பாரு அத்தனை எதுக்கு—இப்ப இந்த ஊரு மிராசு இல்லியா...டிராமா, டான்சு மேல மோகம் அதிகமா இருக்கறபடியாலத் தானே இப்படி வருஷம் தவறாம திருவிழாவுக்கு நாடகமும், பாட்டுமா அமர்க்களப் படுத்தறாரு... அது மாதிரி, இவளுக்கு இப்படி ஒரு பைத்தியம். இவ குழந்தை மனசைப் புரிஞ்சுக்காத பொம்பளைங்க அப்படித்தான் பேசுவாங்க...'

அவன், அவளை சேர்த்தணைத்து, மூடிய இமைகளின் மீது முத்தமிட்டான்.

அந்த இமைகளினுள்—வண்ணச் சித்திரமாய் அவள் காணும் கனவு என்னவென்று தெரிந்திருந்தால்...

பதறிப் போயிருப்பான்.

இந்த மூன்று நாட்களுக்குள்—அபிராமியின் மனசில் கற்பனைக் கோட்டைகளை மளமளவென வளர்த்து விட்டான் பார்த்திபன்.

'நாளைக்கு இவங்க எல்லாரும் ஊருக்குப் போயிட்டா அப்பால இந்த கிராமத்துல என்ன இருக்கு... கிராமமே வெறிச்சோடிப் போயிடாதோ...'

அவளால் வீட்டு வேலைகளை சரிவரக் கவனிக்க முடியவில்லை. ஆங்காங்கு மலைத்து மலைத்து நின்றாள்.

நீளமாய் பெருமூச்சு விட்டாள். குழந்தை முகுந்தன் அழுதால், 'சனியனே' என்று எரிச்சல் பட்டாள்...

இத்தனைக்கும் மேல்...

அன்றிரவு சத்யமூர்த்தியின் அணைப்பில் கிடந்தவள்— இதுநாள் வரையில் அடைந்திராத அருவெறுப்பை அடைந்தாள்.

சத்யனின் கரங்கள்—அவளது இடையில் வலுவாய் விழுந்தபோது...

''நான் புகழ்ச்சிக்காகச் சொல்றேன்னு நினைக்காதே அபிராமி. நேத்து பார்த்திபன் தம்பி சொல்லிச்சு. 'இடுப்புன்னா அபிராமி இடுப்புதான் இடுப்பு தங்கக் குடம் போல தேய்ச்சு வச்ச வெள்ளிக் குத்துவிளக்குப் போல... நம்ம குழுவுல இருக்கற பொம்பளைங்களுக்கும் இடுப்பு இருக்குதே... ஒண்ணா தேவகோட்டை செட்டியார் வீட்டுத் தூண் மாதிரி—கட்டிப் பிடிக்க நாலஞ்சு கைசேர்ந்தாலும் முடியாது. இல்லாட்டி ஒட்டடைக் குச்சிக்குப் புடவை கட்டின மாதிரி'யின்னு சொல்லிச் சிரிச்சான்...'' இப்படி பங்காரம்மாவின் வார்த்தைகள் காதில் ஒலித்து, இம்சித்தது!

சத்யனின் கரடுமுரடான கன்னம், அவளது கன்னத்தில் அழுந்தப் பதிந்து, இரண்டு நாள் அலட்சியத்தில் கருவேலம் முற்கள் படர்ந்தாற் போன்ற அவனுடைய கன்னப்பிரதேசம்! அவளின் பட்டுக் கன்னத்தில் முரட்டுத்தனமாய் உரசியபோது...

'பங்காரம்மா... அபிராமி கன்னத்தைப் பார்த்தா கண்ணாடியோட நினைப்புதான் வருது'—இது மாதிரி, பார்த்திபன் அபிராமியின் எதிரிலேயே பங்காரம்மாவிடம் புகழ்ந்தது நினைவில் வந்து வாட்டியது!

''என் தேகம் அழகானது. ரொம்பவும் அழகானது. இது எல்லாராலும் பார்த்து ரசிக்கப்பட வேண்டிய



முகம். சும்மா பாயில படுத்து, இவரோட கை பட்டுத் தேயறதுக்குப் பொறந்ததில்லை.

இது மாதிரி இன்னும் ரெண்டு பிள்ளை பொறந்தா உடம்பு கூட்டுவிட்டு கிழவியா போயிடுவேன்... அப்ப என்னை யாரும் 'அபிராமி அழகு'ன்னு சொல்ல மாட்டாங்க...''

''நான் மட்டும் சினிமாவுல நடிக்கப் போனா ஆயிரமில்லை, லட்சம் லட்சமா சம்பாதிப்பேன்...'

இந்த கற்பனைகள் கொடுமையானவை. கதாநாயகியாய் தன்னை நினைத்துப் பார்த்த அபிராமியால்—சத்யனின் மனைவியாய், முகுந்தனின் தாயாய் வாழ முடியவில்லை.

பார்த்திப அண்ணனால என்னை சினிமாவுல நடிக்க வைக்க முடியும்னா—சொல்லுங்க பங்காரம்மா... நான் சொல்லாமக் கொள்ளாமக் கிளம்பி உங்களோட வந்திடறேன்!

ஆசை! கட்டுக்கடங்காத ஆசை, அவளை என்னமாய் பேச வைத்தது!

''நிசமாவா?''

பங்காரம்மாவே அதிர்ந்து விட்டாள். இத்தனை சீக்கிரத்தில் இவள் மசிவாளென நினைக்கவில்லை...

''நிசம்தான். நான் பெரியகதாநாயகியா ஆனபிறகு திரும்பி வந்து என் குழந்தையையும், புருஷனையும் அழைச்சுகிட்டுப் போவேன்!''

அப்பாவித்தனமாய் அவள் கூறியதைக் கேட்டு உள்ளூரச் சிரித்துக் கொண்டாள் பங்காரு.

''சினிமாவுல காலெடுத்து வச்சபிறகு புள்ளையாவது, புருஷனாவது, எல்லாம் போகப் போகப் புரிஞ்சுப்பே...'

பங்காரு, பார்த்திபனிடம் விஷயத்தைக் கூற, மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான் அவன்.

''நாளைக்கு விடிகாலையில் அவளைப் புறப்பட்டுடச் சொல்லிடுங்க பங்காரும்மா. நாம இன்னிக்கு சாயந்திரமே ஊரை விட்டுப் போயிடலாம். நான் மட்டும் புறப்பட்டுப் போறாப்பல போயிட்டு—விடிகாலை அஞ்சு மணிக்கு இவ வீட்டு புழக்கடை கதவைத் தட்டறேன்!''

எத்தனை சுலபமாய் திட்டமும் தீட்டிவிட்டான் அவன்!

# 8

**தங்கத்துக்குத் தங்கம்—பெண்ணே**
**தனித்தங்கம் நான் இருக்கப்**
**பித்தளை தங்கத்துக்குப்—பெண்ணே**
**வீணாசைப் பட்டாயோ?**

நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்த சத்ய மூர்த்தியை ஒருகணம் பார்த்தாள் அபிராமி. வரப் போகும் அதிர்ச்சி தெரியாமல் மல்லாந்து படுத்து, ஒரு கையால் குழந்தை முகுந்தனை இழுத்து அணைத்தபடி ஆனந்தமாக உறங்குகிறான்

குழந்தைக்கு சில மாதங்களிலேயே அம்மாவை விட அப்பாவிடம் மிகுந்த ஈடுபாடு..தந்தையின் மலை போன்ற மார்பின் மீது—செதுக்கிய கிருஷ்ண விக்கிரகம் தலை குப்புறகவிழ்ந்து கிடப்பது போலக் கிடந்தான் குழந்தை. பிஞ்சுக் கைகள், அகலவிரிந்து தந்தையை சேர்த்தணைக்க முயலும் விதமாய்...மூடிய இமைகள் கருப்பு வெல்வெட் துணியைக் கத்தரித்து ஒட்டினாற் போன்ற -இதழ்களில் காலைப் பனித்துளி வெய்யில்பட்டு உருகி வழிவதுபோல



எச்சில்—அவனது கன்னத்தில் வழியே அப்பாவின் விஸ்தார மார்பில் வழிய...

அடடா, என்ன நிம்மதியான உறக்கம்?

இரவு முழுவதும் தூங்கவில்லை அபிராமி. எப்படித் தூக்கம் வரும்? விடிகாலை நேரத்தில்-இருள் பிரியும் முன்பு, பார்த்திபன் கொல்லைப்புறக் கதவை இலேசாகத் தட்டுவானென்றும், அபிராமி தூங்காமல் 'விழித்திருந்து சமிக்ஞை வந்தவுடன் கிளம்பிவிட வேண்டுமென்றும் பங்காரும்மாவின் கட்டளை

இதப்பாரு அபிராமி, உன் ஆசையை பார்த்திபன் தம்பிகிட்ட சொன்னேன், உன் புருஷனுக்குத் தெரியாம உன்னை அழைச்சுகிட்டுப் போறதுல அவனுக்குக் கொஞ்சம் கூட விருப்பமில்லே. திருட்டுத்தனமா ஒரு பொண்ணை அழைச்சுகிட்டுப் போறது எவ்வளவு பெரிய மிஷ்டேக் தெரியுமான்னு கத்தினான். நான்தான் ரொம்பவும் எடுத்துச் சொன்னேன். என் வார்த்தைக்கு மதிப்பு வச்சு அவன் சரியின்னு சம்மதிச்சிருக்கான். நாளைக்கு விடிகாலையில உங்க வீட்டுப் புழக்கடைப் பக்கம் அவன் வந்து கதவைத் தட்டுவான். சட்டுபுட்டுனு கிளம்பிடு...துணிமணி அவசியமானதை ஒரு பையில போட்டு எடுத்துக்க போதும். உன்னோட நகைங்கள மறக்காம எடுத்துக்க...பணம் எதுனாச்சும் இருந்தா எடுத்துக்க. இல்லாட்டி பரவாயில்லே...தம்பி அட்ஜஸ்ட் பண்ணிக்கும்...''

பங்காரு அம்மாள், முதல்நாள் புறப்படுவதற்குமுன் அபிராமியை இழுத்துத் தன்னருகில் வைத்து—சிறு குழந்தைக்குப் பாடம் சொல்வதுபோலப் படித்துப் படித்துச் சொல்ல—

''என் குழந்தை...?''

அப்பாவியாய் வினவிய அபிராமியை மிரண்டுபோய்ப் பார்க்கிறாள் பங்காரு.

''அது எதுக்கு? மடியில பூனைய கட்டிகிட்டு சகுனம் பார்க்கக் கிளம்பினாப்பல...நீ சினிமாவுல பெரிய நடிகையா பேரும் புகழும் வர்றப்ப—உனக்குக் கல்யாண மாகி பிள்ளையும் இருக்கற விஷயம் வெளில தெரிஞ்சது . மார்க்கெட்டு 'தடால்'னு இறங்கிடும் அபிராமி. பிள்ளை எங்கே ஓடிப்போகுது...கொஞ்சநாள் கழிச்சு, பட்டும் பனாரஸுமா நீ காருல வந்து 'வாடா மகனே'யின்னு கூப்பிட்டா வராமலா போயிடுவான்? உன்னை விட, உம் புருஷன் குழந்தைய நல்லாப் பார்த்துப்பாரு...''

இந்த வார்த்தைகள் மட்டும் அபிராமியினால் ஏற்க முடியவில்லை,

என்னதான் மகன் பெற்றவளை விடவும், தந்தையிடம் பிரியமாய் ஒட்டிக்கொண்டாலும், மகனைப் பிரிய மனசு வரவில்லைதான். இரவு முழுவதும் ரகசியமாய் அழுதாள். திடீரென, கணவனுக்குத் தான் செய்யப் போகும் துரோகத்தின் பின்விளைவுகள் கண்முன் பூதாகரமாய் விசுவரூபமெடுக்க பயத்தில் வியர்த்துப் போனாள்.

பார்த்திபன் வந்து கூப்பிடும்போது எழுந்து போகாமல், கண்களை இறுக்க மூடி படுத்துவிட்டால் என்ன என்றுகூடத் தோன்றியது.

ஆனால்—ஆசைக்கயிறு, வடம் போட்டு அவளை இழுக்க, அவள் புறப்படுவதற்குத் தயாராகிவிட்டாள்,

முதல்நாளிரவே—சமையலறைக் கதவு—மூலையில் ஒரு துணிப்பையில் இரண்டு புதுப்புடவைகளையும், ரவிக்கைகளையும் போட்டு மறைத்து வைத்தாள். சத்திய மூர்த்தி, தனது வாத்தியார் உத்தியோகத்தில் அவளுக்குப்



பொன்னால் இழைக்க முடியாவிட்டாலும் அவளது கைகளுக்கு ஒரு ஜோடி வளையல்களும், ஒற்றை வடம் சங்கிலியும் செய்து போட்டிருந்தான். அவளது பிறந்த வீட்டில் அவளுக்கெனப் போட்டது. சிவப்புக்கல் தோடும், ஒற்றைக்கல் மூக்குத்தியும், பொன்னால் செய்த சின்னஞ்சிறு தாலியும்தான்...

சத்யனுக்கு, தன் மனைவி நகைகளை கழற்றி வைப்பது பிடிக்காது.

''உனக்கு நான் தங்கக் கவசமா செஞ்சு போட்டிருக்கேன்? இந்த செயினும் வளையலும்தானே...இதை ஏன் கழட்டிக் கழட்டி வைக்கறே...போட்டுகிட்டுத்தான் இரேன்...''

இப்படி அடிக்கடிச் சொல்லுவான். அதனால அபிராமி, எப்பொழுதுமே தனக்குள்ள நகைகளை அணிந்து கொண்டே இருப்பாள்.

முதல்நாள் கணவன் கொண்டு வந்திருந்த சம்பளப் பணத்திலிருந்து நூறு ரூபாயை மட்டும் எடுத்து வைத்துக் கொண்டாள்.

விடிகாலை நாலு மணிக்கு புழக்கடைக் கதவை எலி பிறாண்டுவது போன்ற சத்தம். அபிராமி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். கிளம்புவதற்குமுன் முகுந்தனின் கன்னத்தில் ஒருமுறை முத்தமிட ஆசையாய், கண்களில் நீர் தளும்ப குனிந்தாள்.

அதற்குள் இரண்டாம் முறையாய், பிறாண்டல் ஒலி...இந்தத் தடவை சற்று பலமாகவே...

இதற்குமேல் தாமதித்தால்—பார்த்திபனுக்கு கோபம் வந்துவிடுமோ என்னவோ...

அவன் பதறி எழுந்தாள். அதற்கு மேலும் நேரத்தைக் கடத்தாமல் 'விருட்'டெனக் கிளம்பிவிட்டாள்,

மனசுக்குள் கடைசி, கடைசியாய் குழந்தையை அணைத்து முத்தமிடக்கூட முடியவில்லையே என்கிற தவிப்பு இல்லாமலில்லை...

அன்றுடன்—அபிராமியின் இன்பமான இல்வாழ்வுக்கு ஒரு முற்றுப்புள்ளி விழுந்தது!

பார்த்திபனுடன் ஓடியவள்—இன்று வரையில் எத்தனையோ மேடு பள்ளங்களைக் கண்டு விட்டாள். வாழ்க்கையில் இவள் கண்ட அனுபவங்கள்—இவளது அப்பாவித்தனத்தையும், குழந்தைத்தனமான சிரிப்பையும் அழுந்தத் துடைத்துவிட்டது.

குடையின் கீழ்—அமர்ந்திருந்த அபிராமி, முதன் முதலாய் பார்த்திபன் தன்னைத் தொட்டபோது, தானடைந்த அதிர்ச்சியை நினைத்துப் பார்க்கிறாள்...

இதோ—இப்பொழுது அபிராமியின் தொண்டையில் செருகியுள்ள பிளாஸ்டிக் பூவை சரிசெய்துவிடும் பங்காருதான் அன்றும் நிலைமையை சரி செய்தவள்.

அபிராமி நினைத்ததுபோல—சென்னை வந்ததுமே சினிமா நட்சத்திர வாழ்க்கை ஆரம்பமாகி விடவில்லை.

பங்காருடன் தங்கிய அபிராமியைப் பார்க்க இரண்டு வேளையும் தவறாமல் ஆஜரானான் பார்த்திபன்.

''என்ன பங்காரு... அபிராமிக்கு எல்லாம் வசதியா இருக்குதாமா...நாம அவங்க ஊருக்குப் போனப்ப ஏகப்பட்ட உபசாரம் நடந்துச்சே...அந்த அளவு இல்லாட்டாலும் அதுல பாதியாவது வசதி பண்ணித்தா... அபிராமி, இன்னிக்கு நாம ஸ்டுடியோவுக்குப் போறோம்...ஒரு பட முதலாளியப் பார்க்க வர்றதா சொல்லியிருக்கேன். அதுக்கு முன்னால உனக்கு நடிப்புன்னா என்னன்னு சொல்லித் ;தரேன். இந்தா, இப்படி வந்து நில்லு. இப்ப நான் உன்னைத் தொட்டு வசனம்



பேசுவேன். நீ வெட்கப்பட்டு முகம் சிவக்கணும... என்னா...''

அவன், அவளை ஸ்பரிசித்தபோது வெட்கத்தினால் உடம்பு சிலிர்த்ததோ இல்லையோ...கூச்சத்தினால் தேகமே குன்றிப் போனது. அவனது கைபட்ட இடத்தில் ஈ ம்பளிப்பூச்சி ஊர்வதுபோல வேதனை பிடுங்கியது...இந்த அதிர்ச்சியில், அவன் சொல்லிக் கொடுத்த வசனம் மறந்தே போயிற்று...

பக்கத்தில் பங்காரு...நடுக்கூடத்தில் நாலைந்து பெண்கள் அமர்ந்து தாயம் விளையாடிக் கொண்டிருந்தனர். பார்த்திபனின் வார்த்தைகளையோ, அபிராமியின் பதட்டத்தையோ அவர்கள் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை.

'எங்களுக்கு இதெல்லாம் பழக்கமானதுதான்' என்பது போல் அமர்ந்திருந்தனர்.

''என்ன பங்காரு...அபிராமி இப்படி நடுங்குது... ஐயய்யே, இப்படி இருந்தா—காதல் காட்சிகள்லே எப்படி கட்டிப் பிடிச்சு நடிக்குமாம்...நடிக்க வந்தா முதல்லே இந்தக் கூச்சத்தை விட்டொழிக்கணும்-என்கிட்டயே இப்படி வெட்கப்பட்டா, புதுசு புதுசா நடிகருங்க இவளைத் தொடறப்ப என்ன செய்வா...''

''நீ என்னா தம்பி... இப்படியெல்லாம் கேட்டு அதை பயமுறுத்தறே... முதமுதல்லே அப்படித்தான் இருக்கும். அப்பாலே எல்லாம் சரியாப் போயிடும். இப்ப நான் இல்லையா...ஆரம்பத்துல—சினிமாவுல நான் காலெடுத்து வச்ச முதநாளே— பி.யு. சின்னப்பாவோட லவ் ஸீனு... ராஜகுமாரனை மயக்கற தாசிப் பொண்ணா நடிக்க வேண்டிய காட்சி. அந்தக் காலத்துல இப்ப மாதிரியா...

டைரக்டருக்குக் கோவம் வந்தா 'பளார்'னு அறைஞ்சிடுவாரு...இப்ப மாதிரி கண்டிசன் எல்லாம் போட முடியாது ஸ்கூல் பசங்க வாத்தியார்கிட்ட பயப்படற மாதிரி பயப்படுவோம்... அடியம்மா, அன்னிக்கு நான் என்னமா பயந்தேன்...'

பங்காரு, நேரம் காலம் தெரியாமல் தனது சுய பிரதாபத்தை ஆரம்பிக்க, பார்த்திபன் பொறுமையிழந்து சிடுசிடுத்தான்.

''அதையெல்லாம் பேசிகிட்டிருக்க இதுவா நேரம்? என்னை என்னா வேலையில்லாதவன்னு நினைச்சுகிட்ருக்கீங்களா... பத்து மணிக்கு ரிகர்ஸலுக்குப் போகணும். அதுக்குப் பிறகு மத்தியான சாப்பாட்டுக்கு நளினாதேவி வீட்டுக்குப் போகணும். அவளுக்கு செட்டியார் படத்துல ஹீரோயின் சான்ஸ் வாங்கித் தரணுமாம். யாரோ சொல்லியிருக்காங்க... 'பார்த்திபனைப் பிடிச்சா காரியம் நடக்குமின்னு...' மூணுநாளா போன்மேல போன் போட்டுக் கழுத்தை அறுக்கறா. பகல் மூணு மணிக்கு அபிராமிய அழைச்சுக்கிட்டு ஸ்டுடியோவுக்குப் போகலாம்னு இருக்கேன். அதுக்கு முன்னாடி கொஞ்சம் நடிப்பு சொல்லித் தரலாம்னு வந்தா...''

அவன் அலுத்துக்கொண்டான், கைக் கடிகாரத்தை ஒரு முறை நாசூக்காகப் பார்த்தபடி, கிளம்புவது போல பாவனை செய்தான்.

பங்காரு, இதைக்கண்டு—போலியாய் பரபரக்கிறாள்.

''ஆங், என்னா தம்பி கோவமா பேசறே... அந்தப் பொண்ணு உன்னை நம்பித்தான் வந்திருக்கு. அதுக்கென்ன முதல்லே அப்படித்தான் இருக்கும். பின்னாலே பழகப் பழக சரியாயிடும்...''

அபிராமி, இந்த வார்த்தைகளின் அர்த்தம் எதுவுமே புரியாமல் பொம்மை மாதிரி நின்றாள்.



சாதாரணமாய், பார்த்திபன் ஒரு பெண்ணைத் தன் வசப்படுத்த இத்தனை முயற்சிகள் எடுத்துக்கொண்டதில்லை. கொஞ்சம் முரண்டு பிடித்தாலும் 'சீ போ' என உதறி விடுவான். இவள் விஷயத்தில் அவனால் அப்படி உதற முடியவில்லை.

அபிராமியை சரிக்கட்ட அவன் தாராளமாகவே பணத்தை விரயம் செய்தான். அவளை தினமும் கொலுப் பொம்மையை அலங்கரிப்பது போல அலங்கரித்து நிறுத்துவாள் பங்காரு. பார்த்திபன் வாடகை டாக்ஸி எடுத்து வருவான். அவளை ஏற்றிக் கொண்டு சென்னை முழுக்கச் சுற்றி வருவான்.

''அபிராமி. அதோ பார்த்தியா அதுதான் ஜெமினி ஸ்டுடியோ. உள்ளார இப்ப ஷூட்டிங் நடந்திட்டிருக்கு...'

''நிசமாவா, நாம போய் பார்க்கலாமா...''

''ஐய்யயோ, திடீர்னு சொல்லாமக் கொள்ளாமப் போய் நிக்கக் கூடாது. அதுக்கெல்லாம் பார்க்க வேண்டியவங்களைப் பார்க்கணும். கொடுக்க வேண்டியதைக் கொடுத்தாகணும்...''

''அப்படியா... நாம போய் வெறுமே ஷூட்டிங் பார்க்கறதுக்குக் கூடப் பணம் கொடுத்தாகணுமா...'

''பணமா கொடுக்கணும்னு அர்த்தமில்லே அபிராமி. உனக்கு அதெல்லாம் சொன்னாப் புரியாது... இதப்பாரு... உனக்கு ஷூட்டிங் பார்க்கணும், அவ்வளவுதானே. கவலைய விடு. அதுக்கெல்லாம் ஏற்பாடு பண்ணியிருக்கேன். இப்ப நாம நேரா, 'ஓட்டல் இந்திரா'வுக்குப் போறோம். அங்கே நம்ம ஃபிரண்டு, பெரிய டைரக்டர் பூஷணம் காத்திட்டிருப்பாரு. உனக்கு மேக்கப் டெஸ்ட், காமிரா டெஸ்ட், எல்லாம் முடிஞ்ச பிறகு அப்படியே அங்கேயிருந்து விஜயா ஸ்டுடியோவுக்குப் போறோம்.

அங்கே இன்னிக்கு நம்ம வாத்தியார் படம் ஷூட்டிங் இருக்குது...''

பார்த்திபனின் வார்த்தைகளில் இருந்த ஜாலம் அவளை மயங்கவைத்தது. இவன் சொல்வதில் எந்த அளவுக்கு நிஜம் இருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கும் அறிவே இல்லாமல் பரிபூரணமாய் இவனை நம்பினாள் அவள்.

அவன் சொன்ன மாதிரி மேக்கப் டெஸ்ட், காமிரா டெஸ்ட் எல்லாம் நடந்தது. விஜயா ஸ்டூடியோவுக்கு ஷூட்டிங் பார்க்க அழைத்துக் கொண்டு போனான்.

இடையில்—ஒரு மணி நேரத்துக்கு—சின்னதாய் ஒரு இடைவெளி... அபிராமியை ஒரு விபத்தில் மாட்டி வைத்தது!

அந்த விபத்தில் உருக்குலைந்து போனது—அவளது பெண்மை! அவளின் கள்ளமற்ற குழந்தைத்தனம்! சத்யனுக்கு மட்டுமே சொந்தமான அவளது பரிசுத்தமான தேகம்! லட்சுமிகரமான குடும்பப் பெண் என்கிற பட்டப் பெயர்!

விஜயா ஸ்டூடியோவில் அவள் படப்பிடிப்பைப் பார்க்க வந்த போது அபிராமியாய் வரவில்லை. புதுமுகம் அபீதாவாக, புதுசாய் ஜனனமெடுத்திருந்தாள்!

## 9

**அண்டினது ஆலமரம்**
**அதற்கும் கீழ் கோரைப் புதர்**
**புடிச்சது முருங்கக் குச்சி**
**புடி நழுவிப் போச்சுதடி!**

பார்த்திபனின் வேடம் கலைய வெகு நாட்களாக வில்லை. வெகு சீக்கிரமே அவன், அபிராமியை தான் ஒதுக்கித் தள்ளிய பெண்களின் பட்டியலில் சேர்த்து விட்டான். அபிராமியின் சதா அழுத முகம் அவனுக்கு அலுப்படையச் செய்துவிட்டது.



''இப்ப உனக்கு என்னா கொறை... உம்? ஊருல, வெறும் கைத்தறிச் சேலையக் கட்டிகிட்டு வளைய வந்தவ இன்னிக்கு பட்டுப்பாவாடையும் தாவணியுமா விளக்கு வெளிச்சத்துல பகட்டறயே... எல்லாம் யாராலே... அதுக்கு நன்றி விசுவாசம் எதுவம் இல்லாட்டியும், இப்படியா மொகறையத் தூக்கி வச்சிக்கறது....'

'சள்'ளென்று எரிந்து விழுகிறான். அபிராமி அதிர்ந்துபோய் நின்று விட்டாள்.

''உன்னைப் பார்த்தவுடனேயே டைரக்டர் சந்தோஷத்துல துள்ளிக் குதிக்கப் போறாரு... பார்த்துக்கிட்டேயிரு. அல்வாத்துண்டு மாதிரி இத்தினி அழகான பொண்ணை அவரோட ஆயுசுல பார்த்திருக்க மாட்டார்...''

இப்படிச் சொன்ன பார்த்திபன்—

''மெழுகுப் பொம்மை மாதிரி அழகு இருந்திட்டா போதுமா... நாலு பெரிய மனுஷங்களை அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போகத் தெரியலை. யாராவது இவளோட கையப் பிடிச்சா—உடனேயே மூஞ்சி என்னவோ போல ஆயிடறது. கடோசியில அவங்க என்னைப் பிடிச்சு எகிறாறங்க..., 'ஏண்டா டேய், இந்த மாதிரி பத்தினிக் கேஸை எல்லாம் எங்கேயிருந்து பிடிச்சுக்கிட்டு வந்தேன்னு மூஞ்சி மேலேயே காறித் துப்பறாங்க...''

''நடிப்புக்காக, செட்டுல வைத்துத் தொட்டா பரவாயில்லே. ஓட்டல் ரூமுல, தனியா இருக்கற பொம்பளைகிட்ட எசகுபிசகா நடக்கறவன் எல்லாம் ஒரு ஆம்பிளையோட சேர்த்தியா... இவனுங்களுக்கெல்

லாம் பெண்டாட்டி பிள்ளை எதுக்கு? அக்கா தங்கச்சிங்களோடப் பொறந்தவன்—இன்னொரு பொண்ணைப் பத்தி இப்படிக் கேவலமா நினைக்கலாமா...இவனுங்க எல்லாம் நல்லாயிருப்பானுங்களா? எல்லாரும் நாசமாத்தான் போகப் போறாங்க...எங்க ஊர் எல்லைக்காளியம்மன் இவனுங்களுக்கு சரியான தண்டனை கொடுக்காமல் போக மாட்டா...''

அபிராமி. வயிறெரிந்து கொடுத்த சாபங்கள் இவை. பார்த்திபனைத் தனிப்படத் தாக்கிப் பேசும் அளவுக்கு அவளிடம் தைரியம் இல்லை. ஆனால் மொத்தமாய் எல்லா ஆண் பிள்ளைகளையும் சேர்த்துத் திட்டுவது போல—மறைமுகமாய் அவனை வார்த்தைகளால் தாக்கினாள்.

பார்த்திபனைப் பற்றி—தான் நினைத்திருந்த உயர்வான அபிப்பிராயங்கள் அனைத்தும், தரைமட்டமான ஏமாற்றம் தாளாமல்—அவனிடம் முகம் கொடுத்துப் போகக்கூட விருப்பமில்லாமல் எரிந்து விழுந்தாள்.

நாலைந்து தடவைகள்—இவளின் அலட்சியத்தைப் பொருட்படுத்தாமல் வந்து போனவன், நாளாக ஆக தனது வருகையை அடியோடு நிறுத்திக் கொண்டான்.

பார்த்திபன்—அபிராமியின் செலவுக்காக பங்காரம்மாவிடம் கொடுத்து வந்த தொகை நிறுத்தப்பட்டதும்தான்—அபிராமிக்குத் தன் நிலைமை புரிகிறது.

''என்னம்மா அபிராமி...பார்த்திபன் தம்பியையும் பகைச்சுக்கிட்டே...அதனால சினிமா சான்சும் கிடைக்க வழியில்லாமல் பூடுச்சி...போன மாசம் முப்பதாம் தேதியோட பார்த்திபன் உனக்காக, என்கிட்ட கொடுத்து வச்சிருந்த பணம் தீர்ந்துபோச்சு. இந்த மாசம் பதிமூணு நாளுக்கு உனக்கு இலவசமா சோறு போட்டிருக்கேன். காலம் கெடக்கற கிடப்புல, பட்டண வாழ்க்கையில



எந்த கர்ண மகாராசாவும் சும்மா உட்கார வச்சுச் சோறு போட மாட்டாங்க...மேலே என்ன செய்யறதா உத்தேசம்? பதிமூணுநாள் சோத்துப் பாக்கிக்கு ஏதாவது வழி சொன்னாத்தான் அடுத்த வேளை சாப்பாட்டுக்கு இலை முன்னாடி உட்காரலாம்...''

பங்காருவின் வார்த்தையைக் கேட்டு மலைத்துப் போய் நின்று விட்டாள் அபிராமி.

தன் வீட்டில்-வடையும் பாயசமுமாய்—வஞ்சிரமும் விறாலுமாய் இவனுக்கு தான் சமைத்துப் போட்டது நினைவுக்கு வருகிறது.

'அதையெல்லாம் எப்படி மறந்து போனாள் இந்த பங்காரு...'

என்றோ ஒருவேளை—யாரோ மனமுவந்து கொடுத்த நீராகாரத்தைப் பற்றி இன்றும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கும் தன் கணவன் சத்யமூர்த்தியை அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லையே...

நன்றி விசுவாசம் எல்லாம், அதிகம் படிக்காத கிராம மக்களிடம்தான்... பட்டிணத்தில் இருப்பவனைத் தலை மீது தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுறதும், இல்லாதவனைத் தரையில் போட்டுத் தேய்ப்பதும் சகஜம் தான் என்பதை—பாவம், அவள் எங்கே அறிந்திருக்கப் போகிறாள்...

'இப்ப என்ன செய்யறது... திருப்பி ஊருக்குப் போய் அவர் மொகத்துல எப்படி முழிக்கிறது...'

கலங்கிப்போய், 'ஓ'வென அழுகிறாள் அவள். இந்த அழுகை, இவளின் சோகம்—கல் மனசையும் கரைக்கும் தான். ஆனால், பங்காரு இதற்கெல்லாம் மசியவில்லை. இது போல எத்தனை பெண்களின் அழுகையைப்

பார்த்திருக்கிறாள் அவள்? பச்சாதாபப்பட்டால் பிழைப்பு நடத்த முடியுமா?

'இந்தா, எதுக்கு அழறே? இப்ப நான் என்னா சொல்லிட்டேன்னு ஒப்பாரி வைக்கறே? அட, இருக்கற நிலைமையைச் சொன்னேன்...தா பாரு... பட்டணத்துல, தாலி கட்டின பொண்டாட்டிக்குக் கூட இலவசமா சோறு போடத் தயங்குவான் புருஷன்காரன். 'நீயும் வேலைக்குப் போய் ரெண்டு காசு கொண்டு வந்தாதான் சோறுன்னு கணக்குபேசுவான். இங்கே இருக்கறவங்க அத்தினி பேரும் சம்பாதிக்கற காசுக்கும், செலவழிக்கற காசுக்கும் நோட்டு புஸ்தகத்துல கணக்கு எழுதியே வாழ்நாளை ஓட்டறவங்க இதுல பதிமூணு நாளு- சொந்த பந்த மில்லாத ஒருத்திக்கு உட்கார்த்தி வச்சு சோறு போட்டிருக்கா பங்காருன்னு வெளில தெரிஞ்சா என் வீட்டு வாசல்லே பிச்சைக்காரங்களோட கியூவே நிக்கும். அந்த அளவுக்கு எனக்கு சொத்து கொட்டிக் கிடக்கலை. அழுது ஆர்ப்பாட்டம் செய்யாம மேலே என்ன செய்யப் போறேன்னு சொல்லு...''

வெட்டொன்று துண்டு இரண்டு என்பது போலப் பேசினாள் பங்காரு.

''என்ன செய்யறதுன்னு எனக்குத் தெரியலை...தயவு செஞ்சு நீங்கதான் எனக்கு ஏதாவது வழி சொல்லணுங்க.'

அழுதபடி, பங்காருவின் கரங்களை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள் அபிராமி.

''என்னைக் கேட்டா... நா என்னாத்தை சொல்றது. பொழைக்கற பொண்ணாயிருந்தா— பார்த்திபன் தம்பி சொன்னாப்பல அட்ஜஸ்ட் செஞ்சுகிட்டுப் போகணும். சினிமா சான்ஸ்—அலுங்காம நலுங்காமக் கிடைச்சுடுமா. இங்கே இருக்கறவங்களைப் பார்க்கறே இல்லே... ஒவ்வொருத்தியும் தன் மூஞ்சி ஒரு தடவை 'குளோஸப்' லே



தெரியணும்கறதுக்காக என்ன வேணாலும் செய்யறேங்கறாங்க... உனக்கு இருக்கற அழகுக்கு கொஞ்சம் அனுசரிச்சுப்போற குணம்மட்டும் இருந்திச்சு...உன்னைப் பிடிக்க முடியாது. அத்தினி உசரத்துக்குப் போயிடுவே... உன்னோட பிடிவாத குணம்தான் யாருக்கும் பிடிக்கலை. பேசாம, உன் புருஷனுக்கு ஒரு லெட்டர் போடு. அவனை வந்து—பதிமூணு நாள் சோத்துக் கடனைத் தீர்த்துட்டு உன்னை அழைச்சுக்கிட்டு போகச் சொல்லு...''

''ஐயய்யோ... அது எப்படிங்க இனிமே முடியும்? கெட்டுப் போன பொம்பளைய எப்படி புருஷன்காரன் சேர்த்துப்பான்... இந்தப் படுபாவி பார்த்திபனை நம்பி மோசம் போயிட்டேனே...''

''அதுக்கென்ன செய்யறது. உம் புருஷன் வந்து பணத்தைக் கொடுத்திட்டு உன்னை அழைச்சிட்டுப் போய்— குடித்தனம் நடத்தட்டும்... இல்லே, கழுத்தை நெறிச்சு கொலைதான் பண்ணட்டும்... எனக்கென்னா வந்தது...''

நெஞ்சில் துளி கூட ஈரமேயில்லாமல் பேசும் பங்காருவை, கண்ணீர் திரையிடும் கண்களால் உறுத்துப் பார்த்தாள் அபிராமி.

''எத்தனை கொடூரமான மனசு இவளுக்கு...''

''இத்தனைக்குப்பிறகு ஊருக்குப் போய்தான் என்ன செய்யப்போறேன்...அதுக்குகஷ்டமோநஷ்டமோபேசாம இங்கேயே இருந்து— இந்த பார்த்திபனும், பங்காருவும் அசந்து நிக்கறாப்பல சினிமா உலகத்துல நிரந்தரமான இடத்தைப் பிடிக்கணும்...''

நெஞ்சுக்குள்— அவமானப்பட்ட அபிராமி சீறி, குரல் கொடுத்தாள். அவள் நிதானமாய் தன் கழுத்தில் கிடந்த சங்கிலியைக் கழற்றி, பங்காருவின் கையில் கொடுத்தாள்.

''பங்காரும்மா... இதை வித்து, எனக்கு ஆகிற செலவுக்கு வச்சுக்குங்க. இதுக்கு மேலயும் ஆயிடுச்சுனா, கை வளையலைக் கழட்டித் தரேன். கம்மல், மூக்குத்தி அம்புட்டையும் கழட்டித் தாரேன். தாலியத் தவிர அம்புட்டையும் உருவித் தந்திடறேன். என்னை மட்டும் இங்கேயிருந்து விரட்டிடாதிங்க... இந்தப் பட்டணத்துல திக்குத் திசை தெரியாது...''

சங்கிலி கைக்கு வந்தபின், பங்காரும்மாவின் சிரிப்பு காதளவோடியது.

''ஆங்... இது நல்ல பொண்ணுக்கு அடையாளம். இதப் பாரு... கவலைய விடு. இனிமே நானாச்சு, உன்னை ராசாத்தி கணக்கா கவனிச்சுப்பேன். நீ மட்டும் கொஞ்சம் என்னோட ஒத்துழைச்சா போதும்...''

சங்கிலியை ஆசையுடன் புரட்டிப் பார்த்து, தனது கழுத்தில் மாட்டிக் கொண்டாள் பங்காரு.

அன்று முதல்—அபிராமி அந்த வீட்டின் நிரந்தர பிரஜையாகி விட்டாள். அந்த வீட்டின் தினசரி நடவடிக்கைகள் அவளுக்குப் பழகி விட்டது...

கிராமத்து வீட்டில், விடிகாலைப் பொழுதில் எழுந்து வாசல் பெருக்கி, சாணமிட்டு முத்துமுத்தாய் கோலமிடும் அபிராமி—இன்று, வெய்யில் சுள்ளென முகத்தில் அடிக்கும் வரையில் படுக்கையில் புரள்கிறாள்... இரவு வெகு நேரம் விழித்துக் கொண்டிருக்கிறாளே...

முன் போல அழுது கொண்டு பட்டினி கிடக்காமல், நேரம் தவறாமல் டிபனும், சாப்பாடுமாய் பங்காரு கொடுப்பதைச் சாப்பிடுகிறாள்... ஏனெனில் இவளின் தேகம் வாடாமல் பாதுகாக்க வேண்டியது அவசியமாயிற்றே...



பங்காரு செய்து விடும் அலங்காரத்தை முகம் சுளிக்காமல் ஏற்றுக் கொள்கிறாள். ஏனெனில் இவளது லட்சியத்துக்கு அதெல்லாம் முக்கியம்.

பங்காரு அறிமுகப்படுத்தும் நபர்களிடம் சிரித்து, குழைந்து பேச இவள் கற்றுவிட்டாள். இவர்களில் எவர்மூலமாவது தனது அதிருஷ்ட வாசலின் கதவுகள் திறக்கலாம் இல்லையா...

அனாலும்... அபிராமி அங்கிருந்த மற்றப் பெண்களிடம் அளவுக்கு அதிகமாய் பேச்சு வைத்துக் கொண்டதில்லை. ஒரே வீட்டில் ஏழெட்டுப் பெண்கள் சேர்ந்திருந்தால் எப்பொழுதும் சண்டையும், சச்சரவும் இருந்து கொண்டேதான் இருக்கும். பங்காருதான் இவர்களை அடக்கி ஆள்பவள்.

சில சமயம் அத்தனை பெண்களும் ஒன்றாய் அமர்ந்து சீட்டு விளையாடுவார்கள். சிரிப்பும், பாட்டும் அமர்க்களப்படும்.

''மன்னவன் வந்தானடி... ஏய், அழுகுணி ஆட்டம் ஆடாதே... இடுப்புல ஒளிச்சு வச்சிருக்கற ராஜாவை இறக்கு...''

''யாருடி அழுகுணி ஆட்டம் ஆடறது... உனக்குத்தான் அந்தத் தில்லு, முல்லு திப்பிசம் எல்லாம் தெரியும்.''

''வாய மூடுடி—வாழா வெட்டியா வந்தவளே...''

''ஆமாமா... நாந்தான் வாழா வெட்டியா வந்தேன். இவதான் என்னை உட்கார்த்தி வச்சு சோறு போட்டா. எனக்காவது ஒருத்தன் தாலி கட்டித் துரத்தி விட்டுட்டான்... அங்கே எப்படி... '—' யாவா போனவதானே!''

நடுக்கூடத்தில் கூச்சல் காதைசெவிடாக்கும். அபிராமி அப்படி தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பாள்... அப்படி

இருப்பவளையும் இவர்கள் எதற்காவது வம்புக்கு இழுப்பார்கள்.

''மனசுக்குள்ளார பெரிய ரதின்னு நினைப்பு...''

''நம்ம கூட எல்லாம் பேசினா அவ கௌரவம் பாழாப்பூடுமாம்...''

''பங்காரம்மாவுக்கும் அவதான் ஒசத்தி. நாள் தவறாம அவ தலைக்கு மட்டும் பந்து மல்லியப்பூ வாங்கி வைக்கறா...''

'ஆமா—என்னமோ நாம சாதிக்காததை இவதான் சாதிக்கப் போறான்னு நினைப்பு...பச்சை மரத்துக் கடியிலதான்-பாம்பிருக்கும். தேளிருக்கும்...தட்டுவாணி கொண்டையில் தட்டாமப் பூவிருக்கும்''

உதடு வரையில் வரும் வார்த்தைகளை, அப்படியே விழுங்கி வைப்பாள் அபிராமி...

இவர்களிடம் எதிர்த்துப் பேசிப் பலனில்லை. அபிராமி, இவர்களை விழிகளால் எரித்துவிட்டு நகர்ந்து விடுவாள்.

சில சமயங்களில் பார்த்திபன் பங்காரம்மாவிடம் பேசுவதற்காக வருவதுண்டு. அப்பொழுதெல்லாம் அபிராமியை நேருக்கு நேர் சந்தித்துவிட்டால், எதுவுமே நடக்காததுபோல சுமுகமாய் அவன் விசாரிகும் பாங்கு இருக்கிறதே...

''என்னா தங்கச்சி...எப்படியிருக்காப்பல...''

''யாரு, பார்த்திப அண்ணனா...வாங்க, ஏதோ உங்க தயவுல சுகமாத்தான் இருக்கேன், எங்கே இப்படி...?''

''அடுத்தாப்பல ஒரு புது டிராமா போடலாமின்னு இருக்கேன்...பங்காரும்மா இல்லாம டிராமா எடு



படாதே..அதான் கண்டுக்கிட்டுப்போக வந்தேன்.ஆமா.. இப்ப உனக்கு ஏதாவது பட சான்ஸ் வருதா...''

''எஙகே அண்ணே...உங்களை மாதிரி பெரிய மனுஷங்க சிபாரிசு செஞ்சாத்தான் உண்டு...''

''என்னம்மா, விளையாடறயா...?''

''ஐயய்யோ நிசம்மாத்தான் சொல்றேண்ணே, பங்காரம்மா—பாருங்க. பார்த்திப அண்ணே நான் டமாசு பண்றேன்னு நினைச்சுகிட்டிருக்காரு...''

அபிராமி, புடவை முந்தானையை முறுக்கியபடி, பொய்யாய் வெட்கப்படுவாள். பார்த்திபன், கெக் கெக்' கெனச் சிரிப்பான்.

''அதானே பார்த்தேன்...அப்ப நான் வரட்டுமா...''

''சந்தோஷம். அடிக்கடி வந்து போயிட்டு இருங்க. யாராவது புதுப்படம் எடுத்தா என்னைப் பத்தி ரெண்டு வார்த்தை அவங்க காதுல போட்டு வையுங்க மறந்திடாதீங்க...''

''மறப்பேனா தங்கச்சி, வரட்டுமா...''

அபிராமியின் மனசில் எத்தனை வெறுப்பு தன் மீது இருக்கிறது என்பது பார்த்திபனுக்குத் தெரியும். அபிராமிக்கும், அவனது பார்வைக்கும், 'தங்கச்சி' என அழைக்கும் நாவுக்கும் நடுவே மறைந்திருக்கும் நஞ்சு தெரியாததல்ல.

ஆனால், அவள் தேறிவிட்டாள். மனசுக்கு ஒப்பாமலேயே அவனை அண்ணே என்று அழைக்கப் பழகி விட்டாள்...

இந்த உலகத்தில் பிழைக்க வேண்டுமானால், நினைத்ததைச் சாதிக்க வேண்டுமானால் எப்படியெல்

லாம் நடிக்கவேண்டும் என்பதைச் சந்தேகத்துக்கிட மில்லாமல் பூரணமாய் கற்றுவிட்டாள்.

இருந்தும்—நட்சத்திர உலகில் வெறும் எக்ஸ்டிரவாக, துணை நடிகையாகத்தான் அவள் காலம் ஓடிக்கொண்டி ருக்கிறது.

இதோ...இப்பொழுதுதான் அவளுக்கு கதாநாயகி யுடன் தொட்டுப்பேசி,சிரிக்கும் சினேகிதி வேடம் கிடைத் திருக்கிறது.

## 10

**ஆல மரம் உறங்க**
**அடி மரத்துப் பால் உறங்க**
**உன் மடியில் நானுறங்க**
**உலகம் பொறுக்கலையே!**

அபிராமியின் தலை மறைவினால் அதிகம் பாதிக்கப் பட்டவன் சத்யமூர்த்திதான். குழந்தை முகுந்தனுக்கு அவ்வளவு தூரம் விவரம் தெரியவில்லை. வீட்டில் அம்மா இல்லாததால் சதா அப்பாவின் தோள்மீது சவாரி செய்ய வேண்டுமென்று அடம்பிடித்தான்.

சின்ன ஊர். சத்யமூர்த்தியும் சாதாரண நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன். அதனால் அபிராமி ஓடிப் போன விவரத்தை மறைக்க இயலவில்லை. நடுத்தர வர்க்கத்தின் சிரமமே இதுதான். பணக்கார வீட்டுப் பெண்-விட்டை விட்டு ஓடினால், விஷயம் வெளியே வரவே வராது. அப்படியே கம்மென்று அடங்கி விடும். ஓடினவள் மீண்டும் திரும்பி வந்தால் கூட யாருக்கும் விஷயம் தெரியாது. பணத்தால் பூசி மெழுகி விடுவார்கள். இதுவே ஒரு சேரிப் பெண் ஓடியிருந்தால்—மறுநாளே



அவளைத் தேடிப்பிடித்து அரிவாளால் ஒருபோடு போட்டு பெண்டாட்டியின் தலையுடன் போலீசில் சரணடைந்து விடுவான் புருஷன். இவர்களுக்கு ரோஷம் அதிகம்.

நடுத்தர வர்க்கத்தினால்— இது இரண்டையும் செய்ய முடியாது. அபிராமி ஓடிப்போன விஷயமே வெளியே பரவாமல் அமுக்க— சத்ய மூர்த்தியிடம் பணபலம் இல்லை.

பொழுது விடிந்தும் மனைவி, தன் கன்னத்தில் வழக்கமாய் வழங்கும் முத்தத்தைக் காணாமல், முகுந்த னுக்குப் பால் காய்ச்சிக் கொண்டிருப்பாள் என்கிற எண்ணத்தில் புன்னகையுடன் மீண்டும் தலையணையில் முகம் புதைத்தவனை, பால்காரியின் குரல் தள்ளி எழவைத்தது.

''காலையிலேயே வந்து ஒரு குரல் கொடுத்தேன் வாத்தியாரய்யா. அபிராமி எழுந்திருக்கலை. சின்னப் பொண்ணுதானே... அசந்து தூங்கிடிச்சு போல...அதான் வாடிக்கை வீட்டுக்கெல்லாம் ஊத்திட்டு திரும்ப வந்தேன்...''

''அபிராமி...''

சத்யன், சாவதானமாய் சமையலறையில் போய் பார்த்தான்

''அபிராமி...''

புழக்கடைக் கதவு திறந்திருப்பதால்—கிணற்றடிப் பக்கம் போய் நின்று குரல் கொடுத்தான்.

''என்ன வாத்தியாரய்யா...''

பால்காரி, அவனுடனேயே கிணற்றடி வரையில் வந்து—முகம் நிறையக் கேள்விக் குறிகளுடன் வினவ...

''எங்கே போனா, காலங் கார்த்தால... பக்கத்து வீட்டுக்கு எதுக்காவது போயிருக்காளோ என்னவோ... நீங்க பாலைப் பாத்திரத்துல ஊத்திட்டுப்போங்க...''

பாலைப் பாத்திரத்தில் ஊற்றி விட்டுப் போனவள்—போன சுருக்கில் திரும்பி வந்து அவனது வயிற்றில் தீக்குழம்பை ஊற்றினாள்.

''ரெண்டு பக்கத்து வீட்டுலயும் கேட்டுட்டேன் வாத்தியாரய்யா...அபிராமி அங்கே வரலையாமில்லே...''

அவ்வளவுதான். சத்யனை விடவும் இந்த விஷயத்தை—அபிராமி ஊரை விட்டே ஓடியிருப்பாள் என்கிற விஷயத்தை—அக்கம் பக்கத்தவர்கள் தான் முதலில் ஊகித்தவர்கள். பாவம் சத்யன். தன்னைவிட்டு, அபிராமியால் பிரிந்திருக்க முடியும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கக்கூட முடியவில்லை.

''நா சொல்றேன்னு தப்பா நினைக்காதே சத்யமூர்த்தி. எதுத்தாப்பல டிராமா கம்பெனி வந்து தங்கினப்பவே என் அடிவயித்துல சொரேர்னுது... ஏதுடா, குடும்பஸ்தங்க இருக்கற இடத்துல நாடகக்காரங்களைக் கொண்டாந்து வைக்கறாரே பண்ணையாருன்னு அப்பவே கவலைப்பட்டேன். இப்பப்பாரு... நேத்து ராவு அவனுங்க கிளம்பினாங்க. இதோ—இன்னிக்கு விடிகாலையில உம் சம்சாரத்தைக் காணோம். இதுலேயிருந்து என்ன தெரியறது...?''

பக்கத்து வீட்டுக்காரன் நீட்டி முழக்கினான். சத்யன், இந்த வார்த்தைகளைக் கேட்கமுடியாமல், அவனை முஷ்டியால் ஓங்கிக் குத்தினான்.

''யோவ், நாக்கை அடக்கிப் பேசு, அடுத்தவன் பெண்சாதியக் காணோமின்னா—உடனே ஓடுகாலிப் பட்டத்தைத் தூக்கித் தந்திடுவீங்களே...இன்னொருதடவை



அபிராமியப் பத்தி ஏதாவது தாறுமாறா பேசினே... கழுத்தை நெரிச்சிடுவேன்...''

அந்தக் கணத்தில் அவன் அத்தனை மூர்க்கத்தனமாய் கத்தியிருக்கக்கூடாது. அபிராமியின் மீதிருந்த அளவிட முடியாத பாசம்—அந்த நல்ல மனிதனை ஒரு நொடியில் நிதானமிழக்கச் செய்தது. அதன் பலன்...

அபிராமியைக் காணோம் என்கிற செய்தி, விஷம் போல கிராமம் முழுக்கப் பரவியது.

வரிசையாய், சாரி சாரியாய் அவனை துக்கம் விசாரிக்க வந்த கிராமமக்கள்...அவனுடன் வேலை பார்க்கும் சக ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர், மாணவர்கள், பண்ணையார் குடும்பத்தினர், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், பக்கத்து ஊரிலிருக்கும் உறவினர்கள், அபிராமியைப் பெற்றவர்கள்...

எத்தனை பேர்?

ஆறுதல் அளிக்க வந்து, ஆத்திரத்தைக் கிளப்பி விட்டவர்கள் எத்தனை பேர்?

கண்ணீரைத் துடைக்க வந்து, கதற விட்டுச் சென்றவர்கள் எத்தனை பேர்!

துக்கம் விசாரிக்கவந்து,துயரத்தைக்கிளறி வேடிக்கை பார்த்தவர்கள் எத்தனை பேர்?

''நான் அப்பவே நினைச்சேன்யா...இந்தக் குட்டி, அந்த நாடகக்காரனை வீட்டுக்கு அழைச்சு, விருந்து வச்சப்பவே நினைச்சேன்...ஐயோ, வாத்தியாரு தங்கமான பிள்ளையாச்சே...அவரு குடியைக் கெடுக்கறாப்பல இந்தப்பாவி எங்கேயிருந்துடா முளைச்சான்னு கலங்கிப் போனேன். உண்டா, இல்லையான்னு எம் மருமவ

அஞ்சுகத்தைக் கேட்டுப் பாருங்க. இந்தச் சன்னியம்மாக் கிழவி போட்ட கணக்கு தப்பாதுன்னேன்...''

கிழவியொருத்தி, சத்யனின் எதிர்த்தாற் போல உட்கார்ந்து புலம்புகிறாள்.

''பெண்சாதி மேல பிரியம் வேண்டியதுதான். அதுக்காவ, அவ இன்னொரு ஆம்பிளை கூட சிரிச்சுப் பேசற அளவுக்கு இடம் கொடுத்தா—இப்படித்தான் கையப் பிசைய வேண்டிவரும்...''

அதே தெரு பெண் ஒருத்தி—அபிராமியின் முந்தானையைப் பிடித்தபடி தினமும் நாடகத்துக்கு ஓடியவள், அவளுடன் உட்கார்ந்து கோலி சோடா குடித்து மகிழ்ந்தவள், கையிரண்டையும், கொட்டிக் கன்னத்தில் வைக்கிறாள்.

''நாஞ் சொல்லலை! அடியே இவ அழகு அம்புட்டும் ஆளை அழிக்கற அழகுடியின்னு ...அடியம்மா... என்னமா சிங்காரிச்சுப்பா? ஒரு குடும்பப் பொண்ணு மாதிரியா இருப்பா...கண்ணுமையென்ன, கத்தரிப்பூ கலர் பொட்டென்ன தலையில பூசற வாசனைத் தைல மென்ன, மொகத்துல மின்னற பவுடரு என்ன...எல்லோரும் சின்னாளம்பட்டு கட்டினா—இவ பூப்போட்ட வாயில் புடவை கட்டுவா...எல்லாரும் கையில ரெண்டு கண்ணாடி வளையல் போட்டா இவ மட்டும் பத்து கண்ணாடி வளையலோட ரெண்டு தங்க வளையலும் கலந்து போடுவா...வாய் நிறைய வெத்தலையும், தலை நிறைய சந்தன மல்லியுமா ராவு சினிமா விட்டு நம்ம வீட்டு வழியாத்தானே தளுக்கு நடை போட்டுப் போவா...''

இப்படி ஒருத்தி, அபிராமியின் அழகிலும், அலங்காரத்திலும் பொருமிப் போனவள்...இன்று அவள் நாடகக்காரனோடு ஓடிய செய்தி கேட்டு கைகொட்டி நகைக்கிறாள்.



''பொட்டச்சிக்கு இத்தனை இடம் கொடுக்கக் கூடாதுன்னேன். என்னதான் அவ ரதியா, ரம்பையா இருந்தாலும் அப்பப்போ நாலு தட்டு தட்டித்தான் வைக்கணும். இல்லாட்டி நாம ஆம்பிளையின்னு இருந்து என்னா பிரயோசனம்...அடி உதவறாப்பல அண்ணன் தம்பி உதவமாட்டான். அப்பவே அவளை அடிச்சுப் பதப்படுத்தியிருந்தா இன்னிக்கு இன்னொருத்தன் கூட ஓடியிருப்பாளா...''

இது பண்ணையாரின் உபதேசம். இவர் இப்படி சத்யமூர்த்தியிடம் அளந்து கொண்டிருக்கையில்—இவரிடம் அடிபட்டு, உதைப்பட்டு, உடம்பு வீங்கிப்போன இவரது மனைவி இன்னொருபுறம் பெண்களிடம் வீராவேசமாய் முழங்கிக் கொண்டிருந்தாள்.

''ஆரு கண்டது...வாத்தியாரய்யா நமக்கெல்லாம் நல்லவருதான்...ஆனா, பொஞ்சாதிகிட்ட எப்படி நடந்துகிட்டாரோ...இவளோ, கண்ணுல வச்சுப் பொத்தலாம் போல அம்புட்டு அழகு...இந்த மனுஷனோ ஐயனாரு சிலைக்கு வேட்டி சட்டை மாட்டி விட்டாப்பல இருக்காரு...பொஞ்சாதிய என்ன பாடு படுத்தினாரோ... நாம சொல்லிப்புடலாம் சுளுவா...அபிராமி, டிராமாக்காரனோட ஓடிட்டான்னு...ஓடினதுக்கு ஏதுனாச்சும் காரணம் இருக்குமடி பொண்டுகளா...பாவி மனுஷன்—அடிச்சாரோ. உதைச்சாரோ, இன்னம் என்னெல்லாம் கொடுமைப்படுத்தினாரோ...பெத்த பிள்ளய விட்டுட்டு ஒருத்தி ஓடணும்னா விசயம் இல்லாம இருக்காதுடி... இந்தமாதிரி கொடுமைக்காரப் புருஷன்கிட்ட மாட்டிட்டுத் திண்டாடறதைவிட கிணத்துல குளத்துல விழுந்து சாவலாம்னு போயிட்டாளோ என்னமோ... இருக்காளோ, செத்தே போயிட்டாளோ...''

இப்படி இரைந்தவள், அபிராமி எங்கேயோ போய் தற்கொலைதான் செய்து கொண்டிருப்பாள் என்கிற தீர்மானமான எண்ணத்தில் குழந்தை முகுந்தனை எடுத்து, 'ணக்'கென மடிமீதிருத்தி, அவன் திமிறத் திமிற—இரு கன்னங்களிலும் 'பசக்'கென முத்தமிட்டு, பெரும் குரலெடுத்து ஒப்பாரி வைக்கிறாள்.

''வாசலிலே நீராடி
மரவையிலே பொன் கழட்டி
மதிச்சாண்டார் கை கொடுத்து
மலரோட தீ கலக்க
மாதங்கள் செய்த ஆத்தா
பிள்ளை பறக்க பேரழகி ஆனாத்தா
மைந்தன் பறக்க வாவரசி ஆனாத்தா
பாலுக்கு மைந்தன் பறக்க வச்சுப் போன ஆத்தா
தொட்டிலிலே மைந்தனைத் துடிக்க வச்சுப்
போன ஆத்தா...''

பண்ணையார் சம்சாரம் அழுகையில், பார்த்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பது மரியாதைக் குறைச்சல் என்றுகூடச் சேர்ந்தழுத சில பெண்கள். ஒப்பாரி கேட்டவுடனேயே—என்ன, எதற்கு என்று விசாரியாமல் படீர் படீரென மாரிலடித்துக் கொண்டு அழுத சில பெண்கள், அபிராமி நிச்சயமாய் தற்கொலை தான் செய்து கொண்டிருப்பாள் எனப் பண்ணை சம்சாரம் சொன்னதை அப்படியே நம்பி பொலபொல வென அழுத பெண்கள். இத்தனையையும் மனசுக்குள் சிரித்தபடி பார்த்துக் கொண்டு—அபிராமியாவது... கிணத்துல விழறதாவது...இம்புட்டு நேரம் அந்த பார்த்திப மகாராசாவோட கும்மாளம் போட்டுக் கிட்டிருப்பா...'' இப்படிக் காதோடு கிசுகிசுத்த பெண்கள்...



இத்தனைபேருக்கும் நடுவில் சத்யன் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்த கோலம்...

கண்களிலிருந்து பெருகிய கண்ணீர். கண்ணீரா அது? நெருப்புப் பூக்கள்.

இதுவரையில் சத்யமூர்த்தி எவர் முன்பும் தலை குனிந்து நின்றதில்லை. அன்றுதான் முதன் முதலாய் அந்தக் கண்கள் மண்ணை நோக்கியது...

அவனால், அபிராமி இன்னொருவனுடன் ஓடியிருப் பாள் என நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லையே...

'என்னிடம் என்ன குறை கண்டா இவ...'

'நிசமாவே, இவ அந்தப் பார்த்திபனோடத்தான் ஓடியிருப்பாளா...'

'என்னையும், குழந்தையையும் விட்டுட்டுப் போக எப்படி மனசு வந்தது அவளுக்கு...'

அவன் மலைத்துப்போய் உட்கார்ந்திருந்தான். யார் யாரோ வந்தார்கள்; போனார்கள்...

அபிராமியைப் பெற்றவள் அலறிக் கொண்டு ஓடி வந்தாள். தந்தையோ—பெண் மாத்திரம் கையில் அகப் பட்டால் பனங்காயைச் சீவுவதுபோல ஒரே சீவாய் சீவி விடுவதாய் சபதமெடுத்தார்.

''குழந்தைய வச்சுகிட்டு நீங்க என்ன செய்வீங்க... பச்சைப்புள்ள கிராதகி, அவதான் விட்டுட்டுப் போயிட் டான்னா, எங்களுக்கு மனசு கேட்கலை...நாங்க எடுத் திட்டுப் போய்...''

''அது மட்டும் வேண்டாங்க. இவனும் என்னை விட்டுப் போயிட்டா. நானும் செத்திடுவேன்...''

சத்யமூர்த்தி, முகுந்தனை இறுக அணைத்தபடி

சொன்னான். வந்தவர்கள் வாய்திறந்து பேச வழியில்லை. அந்தப் பாசம் மிகுந்த மனிதனை, கண்ணீர் மல்கப் பார்த்தபடி நின்று விட்டுப் போயினர்.

அதற்குப்பின் அதிகநாள் அந்த ஊரில் இருக்க விரும்ப வில்லை சத்யன். வீட்டில் எந்த மூலையைப் பார்த் தாலும் அபிராமி சிரித்தாள். குழந்தையை எடுத்துக் கொண்டு தெருவில் நடக்கையில்—'இந்தக் குழந்தை யோட அம்மாதான் ஓடிப்போயிட்டா...பாவம்...'— இப்படி ஒலித்த பச்சாதாபக் குரல்கள் அவனை சித்ரவதை செய்தது. "அப்புறமா, அவ எங்கே போனான்னு விவரமே தெரியலையா சத்யமூர்த்தி..?" இப்படி தலைமை ஆசிரியரும், பண்ணையாரும் விசாரிக்கையில் வெந்த புண்ணில் வேலைச் செருகியதுபோலிருந்தது...

அவன் குழந்தையுடன் ஊரை விட்டே கிளம்பி விட்டான்.

இத்தனை வருஷமாய் குழந்தை முகுந்தன் தாயில்லாப் பிள்ளையாகவே வளர்ந்தும் விட்டான...

ஆனால் இன்று—

அபிராமியை மீண்டும் சந்தித்ததில் ஆடிப்போய் விட்டான் சத்யன். நெஞ்சில் ஆத்திரமில்லை. எரிச்சல் இல்லை...ஆனால் உள்ளூர ஆறிய புண்ணில் கோலிட்டது போல நெஞ்சில் குருதி வடிந்தது...

அவளுடன் ஒரு வார்த்தையாவது பேசிட்டு வந்திருக் கலாம்...'

பாழாய்ப்போன மனசு, அலைகடலாய் ஆரவாரிக் கிறது. மனக்கண் முன்—அவள் ஓடிப்போன நாள், அன்றுதான் பட்ட துன்பம், அதற்குப்பின் எங்காவது அவள் தென்படமாட்டாளா எனத்தான் ஏங்கிய ஏக்கம், அவளில்லாத இரவுகளில் வெற்று மார்பில் மகனைப்



போட்டபடி உறங்காமல் கொட்டக் கொட்ட விழித் திருந்த அவலம்...அத்தனையும் பதட்டமாய் ஓட...

மறுநாள் படப்பிடிப்புக்கும் தொடர்ந்து போகிறான் சத்யன்...ஆம், அபிராமியைப் பார்க்காமல் அவனால் இருக்க முடியவில்லை. அவனுடைய உயிருடன் கலந்த வளாயிற்றே...!

# 11

**பட்சம் இருக்கு**<br>
**பறக்கச் சிறகிருக்கு!**<br>
**எண்ணம் இருக்கு**<br>
**எழுத்து விதி எப்படியோ?**

சுற்றி வர பலர் பார்த்திருக்க, காவிரியில் கதாநாய கியும், அபிராமியும், இன்னும் நாலைந்து பெண்களும் குளிக்கும் காட்சி படமாக்கப்பட...

ஆற்றங்கரையோரமாய், துணி துவைப்பதற்காகப் போடப்பட்டுள்ள வட்டப் பாறையில் முகுந்தனுடன் தலை குனிந்து அமர்ந்திருக்கிறான் சத்யமூர்த்தி.

கிராமத்து மக்களுக்கு காவிரியும் புதுசில்லை, அதில் நீராடும் பெண்களும் புதுசில்லை. இருந்தாலும் நடிகைகள் குளிப்பதைக் காண பெரும் கூட்டம் கூடியிருந்தது... அவர்கள் மேக்கப் கலையாமல் குளிப்பதைக் காண்பதிலும் நீந்தத் தெரியாதப் பெண்கள் இடுப்பளவு தண்ணீரிலேயே கையை ஆட்டி—முகத்தைக் குலுக்கி ஆடுவதைப் பார்ப் பதிலும், வேண்டுமென்றே ஈர உடையில்— நனைந்த தேகத்தைப் பலரறியப் பறை சாற்றாத குறையாய் அவர்கள் படையலிடுவதைக் கண்டு விசிலடிப்பதிலும்...

—இவர்களுக்கு தனி உற்சாகம். அவர்களின் கிழ்த்தரமான விமரிசனங்கள் காதைத் துளைக்க, குன்றிப் போய் உட்கார்ந்திருக்கிறான் சத்யன்

''என்ன இருந்தாலும் அவ என் மனைவி... என் காதுபட நாலு பேர் நாலு விதமா சொல்லறதைக் கேட்டுட்டு சும்மா உட்கார்ந்திருக்கற நிலைமை எனக்கு வந்திடுச்சே...''

''ஏன், இப்பத்தான் என்ன... இதையெல்லாம் கேட்டுகிட்டு யாரு உன்னை இங்கே உட்காரச் சொன்னது. எழுந்து வீட்டுக்குப் போயேன். அவளா உன் கையப் பிடிச்சு தடுக்கறா...''

மனம், இரண்டு விதமாகவும் முழங்கியது. எழுந்து போகவும் மனசில்லை.

இதோ—கூப்பிடு தூரத்தில் தனது பிரியத்துக்கு உகந்தவள், உயிருக்கு உயிரானவள், இருக்கிறாள் என்பதே பெரும் நிம்மதியாய்...

அபிராமி தண்ணீரில் ஆடுவதைக்காண வேண்டுமென அவன் உள்ளம் பரபரக்கவில்லை. அவளுக்கு நீச்சல் தெரியும். இருந்தாலும் சத்யனை மணந்த பின்பு அவள் காவிரிக்கு குளிக்கப் போனதில்லை.

'என்னத்துக்கு... ஆத்துல தண்ணி ஒரு சமயத்தைப் போல இருக்காது... உனக்கு வேண்டிய தண்ணிய நான் கிணத்துல இறைச்சுக் கொடுக்கறேன். வீட்டுலேயே குளி...''

கிணற்றடியில் அவளை உட்கார வைத்து, குடம் குடமாய் நீர் இறைத்து அவள் மீது ஊற்றியிருக்கிறான் சத்யன். அபிஷேகத்துக்குக் காத்திருக்கும் அம்மன் சிலை மாதிரி, அலைபுரளும் கூந்தலை, முதுகு முழுக்கப் பரவ



விட்டபடி அவள் அமர்ந்திருக்கும் கோலத்தைப் பார்த்துப் பார்த்து ரசித்திருக்கிறான்.

அதெல்லாம் அந்தரங்கமாய், ஆத்மார்த்தமாய் இதயத்தில் வைத்து பூஜிக்கப்பட வேண்டிய தங்கப் புத்தகம் இப்படி கடைச் சரக்காய், மலிவுப் பதிப்பாய் பலர் கண்களுக்கு விருந்தாய் அந்தப் புனிதப் புத்தகம் சந்தி சிரிக்கும் என்று அவன் கனவிலும் நினைத்ததில்லையே...

''அடேய்... அந்த மூணாவதா நிக்கறாளே... அந்தக் குட்டியப் பாருடா...''

''காமிராக்காரரு அவளைத்தான் படம் புடிச்சுத் தள்ளறாரு...உடம்பைப் பாருடா வாளை மீனு மாதிரி...'

பங்காரும்மாவின் காதிலும் இந்த விமரிசனங்கள் விழாமலில்லை. அவள், ஜனங்களின் ரசிகத் தன்மையை மெச்சி, தனக்குள் புளகித்துப் போய் உட்கார்ந்திருந்தாள். அவளது கண்களில் சத்யமூர்த்தி தென்படவில்லை. அவனைப் பார்த்திருந்தால் அந்த முகத்தில் இத்தனை சிரிப்பு பூத்திருக்காது.

''அடியே, ஜனங்க அம்புட்டு பேரும் யாரைப் பார்த்து மயங்கி நிக்கறாங்க... தெரியுதில்லே... நம்ம அபிதாவைப் பார்த்துதான். சிலுக்குத்துணி கணக்கா பொண்ணு என்னமா இருக்கா பாரு...''

தனக்கு அடுத்தாற் போலிருந்த, துணை நடிகையிடம் சொல்லிச் சொல்லிப் பூரித்து போகிறாள்...

''ஆத்திலே தலை முழுகி
ஆயிரங்கால் பட்டுடுத்தி
ஊத்துப் பக்கம் உட்கார்ந்து
போட்டுக்கடி வெற்றிலையை!

ஆலம் விழுதுபோல—குட்டி
அந்தப் பிள்ளை தலைமயிரை
ஆரு ஒண்ணும் பார்க்காமல்
தான்—குட்டி
ஆத்துறாளாம் ஆத்துக்குள்ளே!''

கதாநாயகன், ஆற்றங்கரை யோரமாய் ஆலம் விழுதுகளைப்பற்றிக் கொண்டு பாடுகிறான். தண்ணீரில் நீந்தும் கதாநாயகியை மறைந்திருந்து பார்க்கிறான். தோழியர் பார்க்காத நேரத்தில் அரளிப் பூ ஒன்றைப் பறித்து கதாநாயகியின் மீது போடுகிறான். தோளில் கிடந்த துண்டை தலையில் முண்டாசாய் கட்டிக் கொண்டு 'தன்னானே னானே'... எனப் பாட்டுப் பாடுகிறான்.

சத்யமூர்த்தியின் எதிரில் நனைந்த தாமரை போல அபிராமியின் முகம் தோன்ற...

அடடா... அந்த அழகு என்ன...கிணற்றடியில் காலை வெய்யிலில், மஞ்சள் மினுமினுக்கும் அந்த முகத்தைப் பார்க்க ஆயிரம் கண் போதாதே...

மஞ்சளை இழைத்துப் பூசுகையில், கண்ணாடி வளையல் 'சிலுங்'கென சத்தமிடும் சங்கீதத்துக்கு முன்னால் இந்தப் பாட்டெல்லாம் எந்த மூலை...

''தண்ணிய சட்டு புட்டுனு ஊத்துங்க, குழந்தை முழிச்சுக்கறதுக்குள்ள குளிச்சி முடிக்கணும்... அடுப்புல போட்ட உலை நீரு இத்தனை நேரம் தளைச்சுக்கிட்டி ருக்கும்...''

—வெய்யிலுக்காகக் கண்களை இடுக்கியபடி அவனை அண்ணாந்து பார்த்து சிரிக்கும் அவளின் முகத்துக்கு, கோடிப்பொன் கொடுத்தாலும் ஈடாகாதே...

''அப்பாவ்... அந்த அக்கா எல்லாரும் பாட்டுப் பாடிட்டே குளிக்கறாங்கப்பா... அங்கே போய் பார்க்க லாம்...வாப்பா...''



முகுந்தன், தந்தையின் கையைப் பிடித்து இழுக் கிறான்.

'ப்சு. வேண்டாம்டா கண்ணா...'

''ஏம்ப்பா...''

''பொம்பளைங்க குளிக்கறதை வேடிக்கை பார்க்கறது தப்பு...''

குழந்தை, ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க விழிக் கிறான். கட்டை விரலைச் 'சடக்'கென வாயில் போட்டு சூப்புகிறான். சத்யன், புன்னகைத்தபடி அவனை இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறான்.

அபிராமி இல்லாததால் —சிறுவனுக்கு எந்த ஒரு குறையையும் வைக்கவில்லை சத்யன். இருந்தாலும், இந்த விரல் சூப்பும் பழக்கத்தை மட்டும் அவனால் மாற்ற முடியவில்லை...

குழந்தையின் மனம் தாயன்புக்காக ஏங்கும் போது புரியாத விவரங்கள் பிஞ்சு மனசில் அலையாய் எழும் போது விடை தெரியாத கேள்விகள் புதுசு புதுசாய் முளைக்கும் போது வலது கை, கட்டை விரல் தானாக வாய்க்குப் போகும். அந்தக் கணத்தில் சிறுவனின் சிறுவனின் பரிதாபகரமான தோற்றம் சத்யனை மெழுகாய் உருக்கி விடும்...

எதிர் வீட்டுத் திண்ணையில்— முகுந்தனை ஒத்த சிறுவனை உட்கார வைத்து குழந்தையின் தாய் சோறூட்டும் போது...

''எங்க அம்மா இன்னிக்கு எனக்காக குழிப் பணியாரம் பண்ணியிருக்காங்களே'— இப்படி அவனின் சினேகிதப் பையன் பீற்றிக் கொள்ளும் போது...

அடுத்த வீட்டுப் பெண், ஆறு மாசக் குழந்தையை மடியில் இருத்தி, ரவிக்கை முடிச்சைத் தளர்த்தி பாலூட்டும் போது...

விளையாட்டுச் சண்டையில் கீழே விழுந்து, காலில் சிராய்த்துக் கொண்டு ஓவென அலறும் நண்பனை அவனது தாய் ஓடி வந்து தூக்கிக் கொண்டு மேனியில் ஒட்டியுள்ள மண்ணைத் தட்டிவிட்டு முத்தமிடும் போது...

தனது வீட்டின் வாசற்புறத் தூணில் சாய்ந்தபடி வாயில் விரலை வைத்து சூப்பியபடி, வெட்ட வெளியை வெறித்துக் கொண்டிருப்பான் குழந்தை...

''அப்பால், அவங்க எல்லாருக்கும் மாத்திரம் அம்மா இருக்காங்களே... எனக்கு மாத்திரம் என் அம்மாவே இல்லே?''

''ஏம்பா, பக்கத்து வீட்டுப் பாப்பாவுக்கு அதும் அம்மா பால் கொடுக்கறாங்களே...எனக்கு யார் கொடுத் தாங்க...உம்?'

''அம்மாவே இல்லாம நான் மட்டும் எப்படிப் பொறந்தேன்...மானத்துலேந்து 'தொப்பு'னு கீழே குதிச்சேனா...''

''எதிர் வீட்டு ஆயா, உன் அம்மா செத்துப் போயிட் டா'ன்னு சொல்றாங்களே...நிசம்மாவா? வயசானவங்க தானே செத்துப்போவாங்க...அம்மா எப்படி செத்துப் போனா...

அவனுக்குத்தான் எத்தனை சந்தேகங்கள். படிக்கும் பொழுது, வாசலில் விளையாடும் பொழுது, சாப்பிடும் பொழுது, திடீரென முளைக்கும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள, தந்தையைத் தேடி ஓடி வருவான் குழந்தை சத்யனால் அவனது கேள்விக்கு விடை சொல்ல முடியாத



போது விரலின் துணையை நாடுவதைத் தவிர வேறு வழி தெரியாது அவனுக்கு...

அப்பொழுதெல்லாம் தந்தையின் அணைப்புதான் அவனுக்குச் சகலமும். இப்பொழுதும் அதே அணைப் பில் முடங்கிக் கிடந்தவன், சட்டென உற்சாக மிகுதியில் இறைகிறான்.

''அப்பால், அந்த சினிமாக்கார அக்கா எல்லாரும் இந்தப் பக்கமா வராங்கப்பால்!''

சத்யன், பரபரப்பாக எழுந்து நிற்கிறான். ஈர உடையை மாற்றிக் கொள்ள, அருகிலிருந்த மண்டபத்தை நோக்கி நடிகைகள் வர...

அபிராமி, சத்யனைக்கண்டதும் தயங்கி நிற்கிறாள். நூற்றுக்கணக்கானவர்களின் பார்வைக்கு விருந் தளித்த தேகம் அவன் முன் கூசிக் குறுக...

குழந்தை முகுந்தனை நோக்கி, விழிகளைத் தாழ்த்து கிறாள். இமையோரத்தில் காவிரியில் இல்லாத உப்புநீர். சடக்கென திரும்பி பார்க்கிறாள். பங்காரு வருகிறானோ என்று... அவள் ஆலமரத்தடியிலேயே டைரக்டருடன் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தவள் நிம்மதி யாய் இழுத்து மூச்சு விடுகிறாள்...

அவளையுமறியாமல் அவளது விரல்கள், குழந் தையின் கன்னத்தை ஆசையுடன் வருட...

''என்ன நின்னுட்டே அபீதா...''

கூட வந்தவள் குரல் கொடுக்க...

''ஆங்...ஒண்ணுமில்லே, இந்தக் குழந்தை அழகா இருக்கு இல்லே...அதான்...''

''சரி, சரி...சீக்கிரம் வா. அப்புறம் டைரக்டர் கத்துவாரு...''

''கொஞ்சம் இரேன்...''

''நீ மெள்ள வா, நான் போறேன்...''

அவள் ஓட, அபிராமி மட்டும் அடித்து வைத்த சிலையாய் நிற்கிறாள்...

என்ன பேசுவது...எப்படிப் பேசுவது...சத்யனின் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே அவளால் முடியவில்லையே...

''அபிராமி...எப்படி இருக்கே...''

—இதைக் கேட்க வேண்டும்போல சத்யனுடைய தேகம் பரவாய் பறக்கிறது. ஆனால், கேட்க முடியாமல் எதுவோ தடுக்கிறதே...என்ன அது...

அபிராமி, முகுந்தனின் முன்பு ஈரப்புடவையில் மண் ஒட்டிக் கொள்ளுமே என்கிற எண்ணமில்லாமல் மண்டியிட்டு அமருகிறாள். சிறுவனின், குண்டுக் கன்னத்தை தன்னிரு கைகளிலும் ஏந்திப் பிடிக்க...

விழியிரண்டும் புதுப்புனலாய் பெருக்கெடுக்க...

''படிக்கறயா...''

''உம்...ரெண்டாங் கிளாஸ்...''

''நல்லா படிப்பியா...''

''எங்கிளாசுல நான்தான் ஃபர்ஸ்ட்...''

அவள், முகுந்தனின் கன்னத்தில் முத்தமிடக் குனிகிறாள்.

''அபீதா.ஜல்தியா வா.நேரமாச்சுனு தலைக்குத்தலை கத்தறாங்க...''

முன்னாள் போனவள் இரைந்து குரல் கொடுக்க' அபிராமி சடக்கென எழுந்து நிற்கிறாள். மகனின்



மாம்பழக் கன்னத்தை ஸ்பரிசிக்க இருந்த இதழ்கள், ஏமாற்றத்தால் இலேசாய் துடிக்கிறது...

''டவுன்லே— இந்திரா லாட்ஜுலதான் இன்னிக்கு ராத்திரி தங்கறோம். ரூம் நம்பர் இருபத்தி நாலு... குழந்தைய எடுத்துட்டு வாங்க...''

அவள், சலசலக்கும் காவிரியைப் பார்த்தபடி வார்த்தைகளைக் கொட்டி விட்டு ஓடுகிறாள்.

அவன், அபிராமி சென்ற திசையையே வெறித்தபடி நிற்கிறான்.

எதிர்பாராமல் அவள் தன்னருகில் வந்து நின்றதும் பேசியதும், கனவு போல இருக்கிறது...

''அப்பா, அந்த சினிமாக்கார அக்கா என் கூடப் பேசினாங்களே...''

சிறுவன் குதூகலத்தால் ஆரவாரிக்கிறான்.

சத்யமூர்த்தி, மௌனமாய் தனக்குள் மூழ்கிப் போகிறான்.

''அப்பா, அந்த அக்கா என் பேரு என்னன்னு கேட்கவே மறந்துட்டாங்க...''

சட்டெனக் குழந்தை மிகுந்த வருத்தத்துடன் சொல்ல—

''உன் பேரு அவங்களுக்குத் தெரியுமாயிருக்கும்...'' சத்யமூர்த்தி எங்கோ நினைவாய் சொல்ல—

''அது எப்படி, என்பேரு அவங்களுக்கு முன்னாடியே தெரிஞ்சிருக்கும்...''

சத்யன், சமாளித்துக்கொள்ள வழி தெரியாமல் சற்று நேரம் திகைக்கிறான்.

''நீ அழகா இருக்கே இல்லே... அதனாலே உன் பேரும் அழகானதாத்தான் இருக்கும்னு அவங்களுக்குத் தெரியுமாயிருக்கும்...முகுந்தன்கற பேரு அழகான பேரு இல்லையா...''

அவனது பதிலில் திருப்தி அடைந்த சிறுவன், மெதுவே தந்தையின் கையைப் பற்றிக்கொண்டு நடக்கிறான்.

'சாயந்திரமா, அந்த அக்கா வர சொல்லியிருக்காங்களே...போய் பார்க்கலாமாப்பா...''

''வேணாம் கண்ணா...''

''ஏம்பா அவங்க நல்லவங்களா இருக்காங்களே...''

''நல்லவங்கதான் முகுந்தா. இருந்தாலும் அவங்க இருக்கற ்இடத்துக்கெல்லாம் நாம போகக்கூடாது. எதுக்கு வீணா இன்னொருத்தருக்கு நம்மாலத் தொந்தரவு...''

அன்று மாலை, சத்யமூர்த்தியையும், முகுந்தனையும் எதிர்பார்த்துக் காத்திருந்த அபிராமி விழிகள் பூத்துப் போகிறாள்...

## 12

**ஒடுகிற தண்ணியிலே**
**உரச்சு விட்டேன் சந்தனத்தை!**
**சேந்துச்சோ சேரலையோ**
**செவத்த மச்சான் நெத்தியிலே!**

அன்று இரவு முழுக்கத் தூங்கவில்லை அபிராமி. சத்யமூர்த்தி வராதது— அவளை என்னவெல்லாமோ எண்ண வைத்தது.



இத்தனைக்குப் பிறகும் — சத்யமூர்த்தி தன்னிடம் அன்பும், ஆசையும் வைத்திருப்பான் என அவள் எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் அவனது இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் கூடவா தனக்கு இடமில்லாமல் போய் விட்டது...

''ஒரு வேளை— அவர் மறுமணம் செய்திருப்பாரோ' இந்த நினைப்பும் எழாமலில்லை.

இருக்குமா... தன்னை விரும்பியவரால் இன்னொருத்தியை நினைத்துப் பார்க்கக் கூட முடியுமா...

அப்படியானால் முகுந்தனின் கதி என்ன? மாற்றாந் தாயின் சுடு சொல்லுக்கும், அலட்சியத்துக்கும் ஆளாகி அவதிப்படுகிறானோ...

'இத்தனை வருஷமா இல்லாத அக்கறை இப்ப எங்கேயிருந்து வந்துதடி. குழந்தை இருக்கானா செத்தானாங்கற கவலையே இல்லாம எங்கேயோ இருந்திட்டு, இப்பப் போய் கவலைப்பட்டு என்ன பிரயோசனம்? நீயா, இத்தனை வருஷமா அவனைப் பார்த்துகிட்டே...''

மனசாட்சியின் ஒரு மூலையில் மெல்லியதாய் ஒரு குரல் எதிர்ப்பு தெரிவிக்க... அபிராமி, தளர்ந்து போய் உட்காருகிறாள்.

இன்று வரையில்—சினிமா உலகில் முன்னுக்கு வர வேண்டும் என்கிற ஆசையில், பார்த்திபனின் கண்ணெதிரில் 'ஓகோ'வெனப் பாராட்டப்படும் நட்சத்திரமாய் பவனி வர வேண்டும் என்கிற வெறியில், தலைக்கு மேல் வெள்ளம் போய் விட்டது. இனி சாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்கிற விரக்தியில்...



சென்னை மாவட்ட கிளை
3145
481802

அவள் மேலும் மேலும் தவறிழைத்திருக்கிறாள். சேற்றை வாரி உடம்பு முழுக்கப் பூசிக்கொண்டு மிருக்கிறாள். தெரிந்தே தேகத்தை மாசு படுத்திக்கொண்டிருக்கிறாள். ஒவ்வொரு முறை தடம் புரண்ட பாதையில் அடியெடுத்து வைக்கும் போதும் தனியே படுத்து அழுது தலையணையை நனைத்திருக்கிறாள்.

இது அவளாகவே வரவழைத்துக் கொண்ட கொடுமை. யாரும் இவளை, இந்த நரகத்தில் பிடித்துத் தள்ளவில்லை. நெருப்பு அழகாக இருக்கின்றதே எனக் குழந்தை தீக்குள் விரலை வைத்தாற்போல...

சினிமா உலகில் நல்லவர்கள் இருக்கலாம். நாணயம் இருக்கலாம். ஆனால் பெரும்பாலான பெண்கள் இது மாதிரிப் புதைகுழிகளில்தான் அழுத்தப்படுகிறார்கள் என்பதை அபிராமி புரிந்து கொள்ளவில்லை. எல்லாம் புரிந்தபோதோ...

எல்லாமே முடிந்து விட்டது!

ஆனால், அவள் நினைத்த வாழ்க்கைதான் இன்னமும் கிடைக்கவில்லை.

அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்டாப்பல...'

அபிராமி, சத்யமூர்த்தியுடன் வாழ்ந்த காலத்தில் அவள் வசித்த தெருவில் நாலு வீடு தள்ளியிருந்த அலமு ஆச்சி என்கிற கிழவி அடிக்கடி சொல்லும் வார்த்தை இது.

நிஜம்தான். நாடகத்தில் அரசனாக வேஷம் போடும் பார்த்திபனை நம்பி, அன்பான புருஷனைக் கை விட்டாகி விட்டது...

மீண்டும் பழைய வாழ்க்கைக்குத் திரும்ப ஆசையிருந்தாலும்— கனவிலும் முடியாத காரியமாகி விட்டது. இனி



இதே பாதையில் தொடர வேண்டியதுதான் என அவள் நினைத்த நினைப்புக்கு இடையூறாய் மீண்டும் சத்யனின் சந்திப்பு.

அபிராமியின் இந்த சில வருட சினிமா உலக வாழ்க்கையில் வேண்டிய மட்டும் கசப்பை விழுங்கி விட்டாள்...

அவளை ஒரே படத்தின் மூலம் கதாநாயகியாக்கி விடுவதாகச் சபதமெடுத்த சில பேர், இந்த ஒரு படத்தில் மட்டும் உடம்பைக் காண்பித்து குரூப் டான்ஸ் ஆடினால், அடுத்த படத்தில் கதாநாயகி வேஷம் தானாகத் தேடி வரும் என ஆசை காட்டிய சில பேர்; 'முதலாளியுடன் படுக்க சம்மதித்தால்—அவர் உன்னை வைத்துப் படமெடுக்க சம்மதிப்பார்'—என பேரம் பேசிய சிலபேர்; 'நீ படத்தில் 'நடிக்க வேண்டாம். பேசாமல் வைப்பாக இருந்து விடு'; என உபதேசித்த சில பேர்...

கிராமத்தில், சின்னஞ்சிறு வீட்டில் சுதந்திரமாய் வளைய வந்தவள், இன்று பங்காரும்மாவின் பாதுகாப்பில் கூண்டுக்கிளியாக அடைபட்டுக் கிடக்கிறாள். சிறையிலிருக்கும் போதுதானே சுதந்திரத்தின் அருமை புரிகிறது!

சத்யமூர்த்தியுடன் வாழ்ந்த நாட்களில் எல்லாமே அவளது இஷ்டம் போல்தான். அவளுடைய விருப்பமில்லாமல், அவளின் இணக்கமில்லாமல் தொடக்கூட மாட்டான் சத்யன்.

என்றாவது அவள் முகம் வாடியிருந்தால் பதறிப் போய் விடுவான்.

''என்னம்மா, தலைய வலிக்குதா...''

''நீ வேணா படுத்துக்க. அடுப்பங்கரைய நான் சுத்தம் பண்ணி வைக்கறேன்...''

''தலைவலித் தைலம் தடவி விடட்டுமா...''

''விறகு ஈரமா இருக்கா...கண்ணெல்லாம் சிவந்திருக்கே...நாளைக்குப் போய் நல்லா காய்ஞ்ச விறகு வாங்கிட்டு வந்துதான் மறுவேலை...''

''அபிராமி, உடம்பு சுகமில்லாட்டி சிரமப்படாதே. வெறும் சோறும், மோரும் போதும். இப்படி வந்து படுவா...''

எத்தனை அனுசரணையான வார்த்தைகள்? அவளது முகம் பார்த்து, அகம் பார்த்து, தனது சுகத்தை ஒத்திப் போடும் அவனின் பண்புதான் எப்பேர்ப்பட்டது...

பங்காருவின் வீட்டில் — அபிராமிக்கு சமைக்கும் வேலை கிடையாது. சாப்பாடு நேரத்தில் கடனே என்று தட்டில் போட்டதை விழுங்கி வைக்க வேண்டியதுதான்...

ஆனால்,படப்பிடிப்பு இல்லாவிட்டால்-பங்காரும்மா அழைத்து வரும் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். கொஞ்சம் முகத்தை சுளித்தாலும் சோறு கிடையாது.

தனது பசியைப் போக்க—மற்றவரின் பசியைத் தீர்க்க வேண்டிய நிலைமை!

தனது ஒரு வேளை உணவுக்காக—தானே, உணவாக மாற வேண்டிய கொடுமை!

''இட்லி அவிச்சு, வெங்காயச் சட்டினி தொட்டுகிட்டு சாப்பிடணும் போல இருக்குது...''

முருந்தனை வயிற்றில் சுமந்திருந்த அபிராமி கேட்டதற்கு, மறுநாள் மாலையே வாசற் கதவையும், புழக் கடைக் கதவையும் தாழிட்டுவிட்டு 'மங்கு மங்கெ'ன்று மாவாட்டிக் கொடுத்திருக்கிறான் சத்யன்.

''ச்சீய், நா ஒருத்தி கல்லு மாதிரி வீட்டுல



இருக்கறச்சே—நீங்க மாவாட்டறதாவது...கொஞ்சம்கூட நல்லாயில்லே...எழுந்திருங்க...''

''இதுல ஒண்ணும் தப்பில்லே அபிராமி. புள்ளத்தாய்ச்சி ஆசைப்படறே... வீட்டுல வேற பொம்பளைங்களும் கிடையாது. அதனால நான் ஆட்டறேன்... ஒவ்வொரு வீட்டுல போய் பாரு... பொண்சாதிக்குப் பயந்து புருஷன்காரன் அவ புடவையக் கூட துவைச்சு உலர்த்துவான். இங்கே அப்படி இல்லையே...உனக்கு முடியலை. நான் செய்யறேன்...''

அவன் பிடிவாதமாய் அவளை இழுத்துத் தன் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக் கொண்டான்.

''வெங்காயத்தைக் கொடு. நான் உரிக்கறேன். உனக்குக் கண்ணைக்'கரிக்கும்...''

இப்படிப் பார்த்துப் பார்த்து அவளது வேலைகளை பகிர்ந்து கொண்டு—அவளைப் பொன் போலப் பாதுகாத்தது—

அதையெல்லாம் நினைத்துப் பார்த்தவளுக்கு—பங்காருவின் ஆர்ப்பாட்டங்களும், அலட்சியங்களும் நினைவிற்கு வராமலில்லை... அப்பப்பா, என்ன பேச்சு பேசியிருக்கிறாள் அவள்

''சங்கிலியும் வளையும் ஆயுசு மட்டும் சோறு போடாது...''

''வாலிபமிருக்கு... இன்னிக்கு எந்த ஆம்பிளையும் தொடக் கூடாதுன்னு சட்டம் பேசுது... முரட்டுக் காளையும், முசுட்டுப் பொண்ணும் உருப்படாதுங்க...''

''அட, இன்னிக்கு கெளுத்தி மீன் கணக்கா பளபளப்பா இருக்கற தேகம்-நாளைக்கு கருவாட்டு வத்தலா

சுருங்கிப் போயிரும்னேன்...அப்ப யாரு உம் மூஞ்சியத் தேடிட்டு வரப் போறாங்க...''

''சினிமாவுல சான்ஸ் கிடைக்கனும்னா — இப்படி உட்கார்ந்திருந்தா—கிடைச்சுடுமா? இன்னிக்கு உச்சாணிக் கிளையிலே இருக்காளே... அதான்டி, அகல்யாதேவி... அவ இங்கேயிருந்து போனவதான். ஸ்டுடியோ வாட்ச் மேன்லேருந்து புரொடியூஸர் வரைக்கும் வளைச்சுப் போட்டுக்கற வித்தை தெரிஞ்சவ... அவளைத் தேடிட்டு இங்கே வந்த சினிமாக்காரங்களோட பேரை வரிசையா லிஸ்ட்டு போட்டு வச்சிருக்கேன். இன்னிக்கு அவ, அவுட்டோர்லே சொல்லிட்டிருக்கா... 'ஹீரோ அனாவசியமா என்னைத் தொட்டுக்கிட்டு நடிக்கப்படாது சார். எனக்கு அதெல்லாம் புடிக்காது'ன்னு...எப்படியிருக்கு? அதுவும் என் முன்னாடியே, டைரக்டர்கிட்ட சொல்லிட்டிருக்கா...எனக்கு இவளைப் பத்தித் தெரியாதா...இல்லே, அந்த டைரக்டருக்குத்தான் தெரியாதா...யூனிட்லே வேலை செய்யற லைட்பாய்க்கும் தெரியுமே...''

''எல்லாம் காலம்டி அபிராமி, காலம்! இன்னிக்கு நீ, மெய்யாலுமே இன்னொருத்தன் கை உன் மேல படக் கூடாதுன்னு சொன்னா—'பத்தினிவேசம் போடுறா'ன்னு தான் சொல்லுவாங்க...நாலு படத்துல நடிச்சு ஒரு பங்களாவும் காருமா ஆனதுக்கு அப்பாலே, இதே வார்த்தையைச் சொல்லு...உன்னை சுத்தி நிக்கற கும்பல் கை கட்டி, வாய் பொத்திக் கேட்கும்... 'ஆகா—இந்த சினிமா உலகத்துலேயே இவதான்டா நெருப்பு'ன்னு கூடி நின்னு ஆலவட்டம் போடும்...இது தெரியாம எகிறிக் குதிச்சு என்னா பிரயோசனம்...''

''என்னம்மா, அபிராமி...என்னடா பங்காரு இன்னிக்கு வெறும் சோத்தை வச்சு திங்கச் சொல்றாளேன்னு பார்க்கறயா... நீ கொடுத்த நகைக்கணக்கு



நேத்தோட தீர்ந்துபோச்சு. இன்னிக்கு இதுவே அதிகம். நாளைக்கு இதுவும் கிடையாது. ஒண்ணு மட்டும் நினைப்புல வச்சுக்க, நீ திங்கற சோறும், கறியும் குழம்பும் எந்த ஆம்பிளையும் சம்பாதிச்சுப் போட்ட பணத்துல வந்ததில்லே...ஒவ்வொரு பருக்கை சோத்துலேயும் இங்கே இருக்கற பொம்பளைங்களோட படுக்கையறை கதை தெரியும். வாய்க்கு உப்பும் உறைப்புமா நேத்துவரைக்கும் நீ தின்ன காயும், கறியும், மீனும், வறுவலும் வெறும் பதார்த்தமில்லைடி... அவளவ தேகத்துல இருந்து வெட்டி எடுத்த சதை...தெரிஞ்சுக்க! ஊத்திக்கற குழம்பு—இவளுங்க சிந்தின ரத்தம்...ஆமா, சொல்லிப்புட்டேன். இதுக்கு மேலேயும் இங்கே உட்கார்ந்து, இவளுங்க சம்பாதிக்கிற காசுல சோறு தின்னா இதுக்கு மேல நா சொல்லமாட்டேன் ரோஷமுள்ளவளானா நாளைக்கு ராவுக்குள்ளாரப் பணத்தைக் கீழே வையி...''

இதுபோல எத்தனை வார்த்தைகள்...இன்று அபிராமியின் மீது கொள்ளைப் பிரியமாக பங்காரு இருக்கிறாளெனில்...அதற்குக் காரணம் அபிராமி. சினிமா உலகின் நெளிவு சுளிவுகளை நன்கு அறிந்திருப்பது தான்...

''சினிமாவுல சான்ஸ் கிடைக்காட்டி என்னா...எங்க அபிராமி, கண்ணை அசைச்சா ஆயிரம் ஆயிரமா அவ காலடியில கொண்டாந்து கொட்ட எத்தனை பேர் காத்துக் கிடக்காங்க...''

பங்காருவின் இன்றைய வார்த்தைகள் இது...

கிராமத்திலிருந்து வந்த அப்பாவி அபிராமிக்கும்—இதோ சத்யனின் வரவை எதிர்பார்த்தபடி. வாசலிலேயே விழியைப் பதித்து—பக்கத்திலிருக்கும் காமிராமேனின் சேஷ்டைகளை எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் ஏற்றுக் கொண்டு ஜடமாய் உட்கார்ந்திருக்கிறாளே...இந்த அபிராமிக்கும் இடையில் எத்தனை வித்தியாசங்கள்...

'போதுமே இந்த வாழ்க்கை...'

அபிராமி அலுத்துப்போய் விட்டாள். அக்கரைக்குப் போன பின்புதான் இக்கரையின் பெருமை தெரிகிறது...

அபிராமி, காமிராமேனின் கரத்தை ஒதுக்கி விட்டு, அறையின் ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கிறாள்...

# 13

**கட்டில் மெத்தை பாய் இருக்கு-பெண்ணே**
**கால் பிடிக்கவும் ஆள் இருக்கு**
**தோட்டத்துக்குள் தொட்டில் இருக்கு-பெண்ணே**
**துணை மட்டும் இல்லையடி!**

ஊகும்... சத்யன் வரவேயில்லை.

அவனது மௌனப் புறக்கணிப்பு- இதயத்தில் அவமான உணர்வை 'சுள்'ளென்று கிளப்பிவிட கண்ணீர் முள்ளாய் விழிக்கடையில் உறுத்துகிறது...

''அபீதா, இங்கே என்ன பண்ணிட்டிருக்கே...அங்கே நம்ம ஹீரோ சார், டைரக்டர் எல்லாருமா உட்கார்ந்துகிட்டு தமாஷா பேசிட்டிருக்காங்க... டைரக்டர் நாலு தடவை அபீதா எங்கேன்னு வாயைவிட்டுக் கேட்டாரு... வா, வா...'

விழிகளில் தளும்பிய நீர் கன்னங்களில் இறங்குவதற்கு முன்பு அவசரமாய் கிளம்புகிறாள் அபிராமி. போகிற போக்கில், கண்ணாடி முன் ஒரு கணம் நின்று— கலைந்த கூந்தலை ஒதுக்கி, முகத்தில் இலேசாக பவுடரை ஒற்றி...

இதெல்லாம் பழக்க தோஷம். பிடிக்கிறதோ, இல்லையோ முகத்தையும் உடம்பையும் அழகாகவைத்துக்



கொள்ள வேண்டியது அவளது வியாபார தர்மமாகி விட்டது.

''வா, வா அபீதா... நீ இல்லாம இந்த இடமே களையா இல்லே... உட்காரு...''

டைரக்டர், தனது பக்கத்தில் காலியாய் இருந்த நாற்காலியைத் தட்டுகிறார்.

அவரது பக்கத்தில் அமரப்போன— அபிராமியின் மனசில் சின்னதாய் ஒரு கேள்வி...

''இந்த சமயம் பார்த்து அவரு வந்தாருன்னா... அட, இத்தனை வருஷத்துல நான் எப்படியெல்லாம் சிரிச்சு சீரழிஞ்சேன்னு அவர் ஊகிக்காமயா இருப்பாரு... பழைய அபிராமி செத்துட்டதா நினைச்சு, முழுக்குக்கூடப் போட்டிருப்பாரு... அதுக்காக... அவர் கண்ணெதிரேயே இன்னொரு ஆம்பிளை பக்கத்துல உட்கார்ந்துக்கறதா...''

யோசித்தவளுக்கு 'சட்'டென ஒரு எண்ணம்.

''நானே அவரைத் தேடிட்டுப் போனா என்ன...'

நினைத்துப் பார்த்தவளுக்கு அதுதான் சரியெனப் படுகிறது...

''வீடு தேடிப் போனாக்கூடவா, பேச மாட்டாரு...''

''அப்படியே வெளியே போடி நாயேன்னு திட்டினா அதையும்தான் கேட்டுக்கிட்டா போச்சு. நான் செஞ்ச துரோகத்துக்கு இந்த வார்த்தை என்ன... இதுக்கு மேலயும் கேட்டுக்கலாம்...''

''என்ன அபீ...என்ன மலைச்சு நின்னுட்டே...''

ஹீரோ, கம்பீரமாய் கால் மீது கால் போட்டபடி கேட்க, அவனைப் பார்த்து சிநேகிதமாய் சிரிக்கிறாள் அபிராமி.

''என்னமோ... இந்த ஊரும், கிளைமேட்டும் ஒத்துக்கலை. பக்கத்துல மருந்துக்கடை எதுனாச்சும் இருந்தா— வயித்துக் கடுப்புக்கு மாத்திரை வாங்கிட்டு வந்திடலாம்னு பார்க்கறேன். நாளைக்கு ஷூட்டிங் என்னால தடைபடக் கூடாதில்லே...''

டைரக்டரின் முகத்தில் உண்மையான கவலை படருகிறது.

''ஆமாமா... நாளைக்கு ஷூட்டிங் தடங்கலில்லாம நடந்தாகணும். ஏற்கனவே ஒரு நாள் வெயில் வராம வேஸ்ட்டாயிடுச்சு... போய் மாத்திரைய வாங்கி முழுங்கு...''

அபிராமி, தன்னுடன் துணைக்குவரத் தகுதியானவள் யாரெனச் சுற்றிலும் ஒருமுறை நோட்டம் விட்டாள்.

''ஜலஜா... எங்கூட வரியா...''

மூலையில் ஒடுங்கி உட்கார்ந்திருந்த பெண், தயக்கத்துடன் எழ...

''இவளை நம்பலாம். இந்த மோசமான சினிமா உலகத்துல இப்பத்தான் முதன்முதலா அடியெடுத்து வச்சிருக்கா. இன்னும் கொஞ்ச நாளைக்கு இவ நெஞ்சுல இரக்கமும் குழந்தைத்தனமும் நிச்சயமா இருக்கும்...'

''அக்கா நான் போயிட்டு வந்திடறேன்...''

பங்காருவிடம் சம்பிரதாயத்துக்கு சொல்லி விடை பெற, பங்காருவும் பெரிசாய் தலையை ஆட்டுகிறாள்.

அவளுக்கு அபிராமியிடம் பூரண நம்பிக்கை உண்டு.

'இனிமே இவ இந்த வலையில இருந்து தப்பிக்க நினைக்கமாட்டா...நினைச்சாலும் முடியாது. இதை விடவும் மோசமான, அசிங்கமான வாழ்க்கைதான் இனிமே இவளுக்குக் கிடைக்கும்...'



பங்காருவின் அசைக்கமுடியாத நம்பிக்கை இது.

அபிராமி, ஜலஜாவின் துணையுடன் சத்யனின் வீட்டைத் தேடிக் கிளம்புகிறாள்...

'முதல்லே, டவுன் பஸ் ஸ்டாண்டுக்குப் போய், அங்கேயிருந்து பஸ் பிடிச்சு கிராமத்துக்குப் போகலாம்... சின்ன கிராமம். அவரைத் தெரியாதவங்க இருக்க முடியாது...'

தலையைச் சுற்றி முக்காடிட்டவள், ஜலஜாவின் கரத்தை அழுந்தப் பிடித்தபடி நடக்கிறாள்.

அபிராமி, அந்தத் தெருவுக்குள் காலெடுத்து வைக்கும்போதே—இருட்டத் தொடங்கிவிட்டது.

''ரொம்ப நேரமாக்கிடாதே அபீதா...அப்பாலே பங்காரு அக்கா வாயில விழுந்து பொறப்படணும். 'ஷூட்டிங்குக்காக வந்த இடத்துல 'தொழில்' நடத்தப் போயிட்டீங்களாடீ'ன்னு அசிங்கமா கத்தும்...''

அபிராமியின் காதில் அவளது வார்த்தைகள் விழுந்ததாகத் தெரியவில்லை. நெஞ்சம் முழுக்கப் படபடப்பு... இதயத்தின் துடிப்பு 'திம்திம்' என முரசமாய் ஒலிக்க... தேகம் முழுவதும் தணலாய் தகிக்க...தகிப்புத் தாளாமல் மேனி தெப்பமாய் நனைய...

'கடவுளே, கடவுளே...அவர் வீட்டுல இருக்கணும். ரெண்டாந்தாரமா, அவரைச் சொந்தம் கொண்டாட எவளும் இருக்கக்கூடாது. அப்படியே எவளாவது இருந்தாலும் அவ முன்னாடி உன்னை அவர், அவமானப் படுத்தி அனுப்பிவிடக்கூடாது...'

சத்யமூர்த்தியின் வீட்டைக் கண்டுபிடிப்பதில் ஒன்றும் சிரமம் இருக்கவில்லை. பஸ் ஸ்டாண்டில் இறங்கியவள் கொஞ்சநேரம் நிதானித்தாள்.

யாரிடம் கேட்பது...

பஸ் ஸ்டாண்டையொட்டி, சின்னதாய் மார்க்கெட், இன்னொரு பக்கம் மீன் சந்தைக்குப் போகும் வழி இதுதான் என வாடை அறிவித்தது...நாடக மேடையில் தொங்கும் திரைச்சீலை நிழலோவியம்போல—எங்கோ நெடுந்தொலைவில் தெரியும் கோவில் கோபுரம்...சந்தை இரைச்சலுக்குப் பின்னணியாக 'ஹோ'வென்ற காவிரி இரைச்சல்...

காக்கி நிற அரை நிக்கரும், வெள்ளைச் சட்டையுமாய், நாலைந்து பொடியன்கள்...ஒரு கையில் சில புத்தகங்களும், இன்னொரு கையில் துண்டுக் கரும்புமாய்...

'இவங்களைக் கேட்டா, நிச்சயமாத் தெரிஞ்சிருக்கும்.'

—உள் மனசு, குரல் கொடுக்க...

''தம்பி...''

சிறுவர்களில் ஒருவனின் தோளைத் தொட்டு நிறுத்துகிறாள் அபிராமி.

'இங்கே—சத்தியமூர்த்தின்னு ஒருவர்...''

''வாத்தியாருங்களா?''

''உம்...''

இந்த சந்தையத் தாண்டி, மேக்கால போனா கம்மாளத் தெரு வரும்...அதுக்கு பக்கத்துலயே குடியானவங்க தெரு...அதுல வலது கைப் பக்கம் ரெண்டாவது வீடுதான் வாத்தியாரு வீடு...நீங்க யாருங்க...''

சற்று நேரம் குழம்பி நிற்கிறாள் அபிராமி,

என்ன சொல்வாள்...



''அவங்களுக்கு உறவுங்களா...''

''ஆமாம்பா...''

'சட்'டெனத் தலையை அசைத்து வைக்கிறாள்.

''ஊருக்குப் புதுசுங்களா...''

''உம்...''

''அதானே பார்த்தேன். வாத்தியார் வீட்டுக்கு இதுவரைக்கும் உறவுக்காரங்கன்னு யாருமே வந்ததில்லையே...டேய், மாதைய்யா...பொஸ்தவத்தைப் பிடிடா...நான் இவங்களுக்கு வீடு காமிச்சுட்டு வந்திடறேன்...''

முதலில் பேசிய சிறுவன், உற்சாகமாய் கிளம்புகிறான். தனது வாத்தியார் வீட்டுக்கு புதுசாய் வந்திருக்கும் உறவினரை அழைத்துப் போவதில் அத்தனை உற்சாகம்.

''இப்பத்தான் வாத்தியார் வீட்டுலேருந்து வரோம்... சாயங்கால நேரத்துல டியூஷன் சொல்லிக்க நாங்கள் ளாரும் வாத்தியார் வீட்டுக்குப் போயிடுவோம்...''

''பாவம்...ஸ்கூல்லேயும் வேலை செஞ்சிட்டு, வீட்டுக்கு வந்தும் உங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக் கறாருன்னா...குழந்தை முகுந்தனை கவனிச்சு சோறு போடறது யாரு...''

அபிராமி, மிகச் சாமர்த்தியமாய் தனது கேள்வியைத் தயாரிக்க...

''அதெல்லாம் வாத்தியாருக்கு கஷ்டமே இல்லாம நாங்க பார்த்துப்போம்க...அடுப்புல உலைய வச்சிட்டு எங்களுக்கு கணக்கு சொல்லித் தருவாரு வாத்தியார்... இங்கிலீஷ் சொல்லித் தர்றப்ப ஒரு முறத்துல வெங்காயத் தைப் போட்டு எங்களுக்கு நடுவுல வச்சிடுவாரு...

பாடத்தை ஒப்பிச்சுகிட்டே ஆளுக்குக் கொஞ்சமா உரிச்சு வச்சிடுவோம்...இதோ—எங்களை அனுப்பின கையோட வாத்தியாரு, சமையலையும் முடிச்சு, முகுந்தனுக்கு சோறூட்டியும் முடிச்சிருப்பாரு...''

சிறுவன், நீளமாய் பேசியபடி, மூச்சிரைக்க நடக்கிறான். அவன் பின்னாலேயே ஓட்டமும் நடையுமாய் விரைகிறார்கள் அபிராமியும், ஜலஜாவும்.

''இதாங்க வாத்தியார் வீடு...''

சிறுவன், சட்டென ஒரு வீட்டுக்குள் நுழைய, உள்ளே நுழைவதா—வேண்டாமா? என்பது போலத் தடுமாறி நிற்கிறாள் அபிராமி.

''சார்...உங்க வீட்டுக்கு விருந்தாளி வந்திருக்காங்க...''

சத்யன் சாப்பிட உட்கார்ந்திருந்தான். அவன் மடிமீது தலை வைத்தபடி முகுந்தன் உறங்கிக் கொண்டிருக்க... எதிர்த்தாற்போல சோறும் குழம்பும்...

சோற்றைப் பிசைந்தவன், சிறுவனின் குரல் கேட்டு திடுக்கிட்டு நிமிர...வாயிற்புரத்தில் அபிராமியைக் கண்டதும் பேச்சடங்கி பிரமித்துப் போகிறான்...

''உள்ளே வாங்கம்மா ..வாத்தியாரு சாப்பிட்டுட்டு இருக்காரு...''

துணைக்கு வந்த சிறுவன், மெதுவே முகுந்தனை நகர்த்திப் படுக்கையில் விட்டுவிட்டு, வந்த வழியே திரும்புகிறான்.

''அப்ப நான் வரேன் சார்...''

சிறுவனுக்குத் தன்னை அடையாளம் தெரியாததும் நல்லதுதான் என நினைத்தாள் அபிராமி.



தெரிந்து விட்டால், இத்தனைநேரம் ஊரைக் கூட்டி, சத்யனின் வீட்டு வாசலில் நிறுத்தியிருப்பான். ஷூட்டிங்கின் போது மிதமிஞ்சி அவள் பூசி இருந்த பவுடரும், லிப்ஸ்டிக்கும் சிருஷ்டித்திருந்த நட்சத்திர அபிதா வேறு... இன்று வாயில் சேலையும்,எளிமையான அலங்காரமுமாய் சத்யமூர்த்தியின் வீட்டு வாசலில் நிற்கும் அபிராமி வேறு...

அவன் வாவெனக் கூப்பிடுவான் என எதிர்பார்த்து சற்றுநேரம் வாசற்படியிலேயே தயங்கி நின்றவள்—அவன் அழைக்காததால் ஏற்பட்ட ஏமாற்றத்துடன் மெள்ள கூடத்தில் காலடி எடுத்து வைக்கிறாள்...

# 14

**சேர்ந்தோமடி சேர்ந்தோமடி**
**செடியிவிட்ட பூப்போலச்**
**செடியறுந்து பூ உதிர்ந்தா**
**சேருவது எந்த விதம்?**

ஜலஜா, வாசற் திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டாள். பஸ்ஸில் வரும்போது—அபிராமி சொன்ன கதை நெஞ்சில் முள்ளாய் உறுத்துகிறது...

''பாவி... அழகான பிள்ளையையும் பாசத்தைக் கொட்டற புருஷனையும் தவிக்க விட்டு என்னமா ஓடி வந்தா... எனக்கு மட்டும் இதுமாதிரி ஒரு வாழ்க்கை கிடைச்சிருந்தா— சந்தோஷமா இருந்திருப்பேனே கஞ்சி குடிச்சாலும், புருஷன் சம்பாதிச்சுக் கொடுத்த பணத்துல வவுறு ரொம்பதுன்னு நிம்மதியா இருந்திருப்பேனே... என் புருஷன் சொல்லாமக் —கொள்ளாம ஓடினதாலே தானே— நான் இன்னிக்கு வேசம்கட்ட வேண்டியிருக்கு.''

கிட்டத்தட்ட அபிராமியுமே— ஜலஜாவின் மனநிலையில்தான் இருந்தாள்...

கூடத்துக்குள் வந்தவளை இதற்கு மேலும் அலட்சியப்படுத்தும் அளவுக்கு கடின மனசில்லை சத்யனுக்கு...

கையிலிருந்த சோற்றை உதறிவிட்டு எழ...

''எதுக்கு எழுந்திருக்கறீங்க... உட்கார்ந்து சாப்பிட்டுட்டு வாங்க... அதும் மட்டும் நான் இங்கே...''

அவன் அவளது வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல—எழுந்து வந்து, சுவற்றில் சாய்த்து வைத்திருந்த பாயை விரித்துப் போடுகிறான்

''உட்காருங்க... சாப்பாட்டை எடுத்து மூடி வச்சிட்டு வந்திடறேன்...''

அவளது பதிலை எதிர்பார்க்காதவனாய், அவன் பாத்திரங்களை, எடுத்து வைக்க...

அவனுடைய மரியாதை கலந்த பேச்சு, அவளை ஒருகணம் அதிர வைக்க...

அவள் பாயை நகர்த்திவிட்டு தரையில் முழந்தாளிட்டு அமர்கிறாள். பார்வை, சமைத்து வைத்திருந்த உணவின் மீதும், கூடத்தைச் சுற்றியும் படர...

நெஞ்சில் உறுத்திய முள், கண்ணுக்குள் பல நூறாய் நெருடியது போன்றதொரு வலி...

அபிராமி, சத்யனுடன் வாழ்ந்த காலத்தில், மனைவிக்கு உதவியாய் அவன் சுற்று வேலை எல்லாம் செய்து தருவானே தவிர, சமைக்கத் தெரியாது... அப்படி அவன் சமைக்கும்படியான நிர்பந்தம் ஏற்பட்டால் — நொடிக்கொரு தடவை அவளிடம் சந்தேகம் கேட்டுக் கொண்டேயிருப்பான்.

'அபிராமி குழம்புக்கு இத்தனை புளி வச்சுக்கலாமா.'



''நீ சொன்ன அளவுக்குத்தான் மிளகாய்த்தூள் போட்டேன். அது என்னா... பொரியல் இந்த உறைப்பு உறைக்குது...''

''குழம்புல என்னமோ குறையுதே ... என்னாது உனக்குத் தெரியுதா பாரு...''

அந்த சத்யனா இவன்... இன்று, மகன் முகுந்தனுக்கு தன்னால் முடிந்த வரையில் வாய்க்கு ருசியாக சமைத்துப் போட வேண்டுமென எப்படியெல்லாம் பாடுபட்டிருக்கிறான். அம்மிக் கல்லில் அரைக்கும் பொழுது விரலையும் சேர்த்து நசுக்கிக் கொண்டு... பொங்கும் பாலை அவசரமாய் வெறும் கையால் இறக்கிக் கொண்டு...காய்நறுக்கும் வேகத்தில் விரலையும் சேர்த்து நறுக்கிக்கொண்டு... மறந்து போய், மிளகாய் தூளைத் தொட்ட கையுடன் கண்ணைத் தொட்டுக் கொண்டு துடிதுடித்து...

பாத்திரங்களை எடுத்துவைத்து விட்டு, சத்யன் வருகையில் — அபிராமி முகுந்தனின் அருகில் அமர்ந்திருந்தாள். நிச்சிந்தையாகத் தூங்கும்குழந்தையின் முகத்தையே பார்த்தபடி...

''உக்கும்...''

அவனின் கணைப்பு, அவளது கவனத்தைத் திசை திருப்ப...

''எங்கே இந்தப் பக்கம்...''

சத்யனின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் சற்று நேரம் ஸ்தம்பித்து நின்றவள்— சட்டென அவனது காலைத் தொட்டு, கண்களில் ஒற்றிக் கொள்கிறாள்.

எஃதெஃதோ பேச வேண்டுமென்றுதான் ஆசை. பாழாய் போன உதடுகள் ஒத்துழைக்க மறுக்கிறதே.

"என்னை மன்னிச்சுடுங்கன்னு நான் உங்களைக் கேட்கப் போறதில்லை. ஏன்னா, மன்னிக்கக் கூடிய தப்பு இல்லே, நான் செஞ்சது... கடவுளாலே கூட என்னை மன்னிக்க முடியாதுங்க... இந்த ஊர்ல உங்களைப் பார்த்த பிறகும் மனசுவிட்டுப் பேசாம இருக்கமுடியலை.'

அவள் விசும்புகிறாள்.

சத்யன், நட்டு வைத்த மரமாய் நிற்கிறான்.

என்றாவது ஒரு நாள்— இவளை சந்தித்தால்— கேட்டே தீர வேண்டுமென எத்தனை ஆயிரம் கேள்விகளை. அவனது இதயத்துக்குள் பூட்டி வைத்திருக்கிறான்...

சமயத்தில் எதுவுமே கேட்கத் தோன்றவில்லையே...

"இந்த நேரத்துல இங்கே எதுக்கு வந்தீங்க..."

—இதுதான் அவனால் கேட்க முடிந்தது

' தயவுசெஞ்சு என்னை வா, போ-ன்னே கூப்பிடுங்க. என்னதான் கெட்டு சீரழிஞ்சாலும், நான் உங்க பொஞ்சாதி. இதப் பாருங்க... தாலியக் கழட்டினா— உங்களுக்கு எதுனாச்சும் நேர்ந்துடுமோன்னு பயந்துகிட்டே... யாரு, என்ன சொன்னாலும் கழட்டாம இருக்கேன்..."

அவள், தன் ரவிக்கையில் மறைந்து கிடந்த சங்கிலியைத் தூக்கி, அதில் கோர்த்திருந்த தாலியை அவன் முன்பு காட்ட...

அவன், அதையே வெறிக்க...

"எத்தனையோ சிரமப்பட்டிருக்கேன்... எதையெதையோ வித்திருக்கேன், இதை மட்டும்... விற்க என் மனசு இடம் கொடுக்கலீங்க..."



சத்யனின் காலடியில் மண்டியிட்டுக் கதறுகிறாள் அவள்.

"சத்தியமாச் சொல்றேங்க...சினிமா மேல இருந்த மோகத்துலதான் நான் உங்களையும், குழந்தையையும் விட்டுட்டு ஓடினேனே தவிர...பார்த்திபன் மேல ஆசைப்பட்டு அவனோட போகல்லீங்க... ஆனா, எது எப்படியிருந்தாலும், ஒரு பொண்ணு எந்த நோக்கத்தோட வாசப்படி தாண்டினாலும் கடைசியில அவ கசங்கின பூவாத்தான் போறா...நான் அனுபவிச்சுட்டேன் வேண்டியது அனுபவிச்சுட்டேன்..."

அவள் துக்கம் தொண்டையை அடைக்கக் கூறிய போது..சத்யன், பதிலேதும் சொல்லத் தோன்றாமல் அவளையே வெறித்துப் பார்க்கிறான்.

இரண்டு நாட்களாய், இவளின் முகத்தை மேக்கப்புடன் சற்றுத் தள்ளியிருந்து பார்த்ததாலோ என்னவோ, வித்தியாசம் தெரியவில்லை.

இன்று—

மிக அருகில், சாதாரணப் பெண்ணாக, பவுடர் பூச்சு கூட அதிகமில்லாமல், அவளைப் பார்க்கையில்...

பழைய அபிராமிக்கும், இவளுக்கும் நிறைய மாற்றம் தெரிந்தது...

மஞ்சள் பூச்சேறி மினுமினுத்த அவளின் கன்னக் கதுப்புகள் சின்னஞ்சிறு குழந்தையின் சருமம் போன்று இருக்கும். இன்று ஏகப்பட்ட லோஷன், க்ரீம், இன்னும் பல அலங்காரப் பொருட்களை உபயோகித்ததால்— வறண்டிருந்தது.. மென்மை மாறி, கடினமாயிருந்தது... கண்களைச் சுற்றி லேசாய் விழும் கருவளையம்—மேக்கப் இல்லாததால் 'பளிச்'செனத் தெரிந்தது...நெற்றியில் கூட சிற்றாய் நெளியும் சுருக்கம்...

''நான் இவ்வளவு பேசறேன்..என் கூடப் பேசக் கூடாதா...''

அவனை ஏறிட்டுப் பார்க்கும் அவளது கண்களிலிருந்து புறப்பட்ட வற்றாத ஜீவநதி,கன்னத்தின் வழியே மார்புக்கு இறங்க...

''என்ன பேசறது—உன்கூட பேசறதுக்கு எனக்கு என்ன அருகதை...நிஜமாகவே நான் பெரியதப்பு. செஞ்சிட்டேன். என்னோட குடும்பம் நடத்தி, ஒரு பிள்ளையப் பெத்துக்க—சுமாரான அழகுடைய ஒருத்தி போதும்... உன்னை கட்டிக்கிட்டிருக்கக் கூடாது. எனக்கு ரொம்பவும் பேராசை...என்னோட லட்சணத்தைப் பத்திக் கவலைப்படாம எனக்கு வர்றவ மட்டும் பிரமாதமா இருக்கணும்னு ஆசைப்பட்டேன்...அந்தத் தகுதியில்லாத ஆசைக்கு கைமேல பலன் கிடைச்சிடுத்து. உன் மேல தப்பே இல்லை உன் நிலையில யார் இருந்தாலும் இதைத்தான் செஞ்சிருப்பாங்க..''

அவனுடைய அமைதியான பதிலில், ஆடிப்போய் உட்கார்ந்திருக்கிறாள் அபிராமி...

எத்தனை நேரம் உட்கார்ந்திருப்பாள்...

இந்த வீடு, இதில் துலங்கும் அமைதியும், இதோ—எதிரில் முழங்கால்களுக்கிடையில் கைகளை வைத்துக் கொண்டுப் படுத்துறங்கும் குழந்தையும், தொடக் கூடியத் தொலைவில் ஆஜானுபாகுவாக நிற்கும் கணவனும்... எத்தனை நேரம் அனுபவித்தாலும் போதாது போலத் தான்...

பழைய நாட்கள் நெஞ்சில் அலை மோதியது. அந்த நாட்களில் அபிராமிக்கும் தனக்கும் இடையே இந்த அளவுக்கு இடைவெளியை விட்டு வைத்ததுண்டா சத்தியமூர்த்தி..,•முதலாவது அபிராமியைத் தொடாமல் பேசவே தெரியாதே அவனுக்கு...



வாய் எதைப் பேசிக் கொண்டிருந்தாலும் விரல்கள் அவளது மேனியில்தானே சஞ்சரிக்கும்: கோலமிடும்; நர்த்தனம் செய்யும்; கவிதைபுனையும்; மென்மையாய் ரகசியம் பேசும்...

நெற்றியில் சுருண்டு விழும் கேசக் கற்றையை...

மூக்கில் சுடர் விடும் ஒற்றைக்கல் மூக்குத்தியை...

சிவப்புக்கல் தோடுகளை மாதுள முத்துக்கள் போல பிரதிபலிக்கும் கண்ணாடிக் கன்னத்தை...

செம்பருத்தி மொட்டுக்களாய் குவிந்த உதடுகளை...

இன்னும் சங்குக் கழுத்தை, சிலை போன்ற உடலை, சின்னஞ்சிறு இடையை...சத்யனின் விரல் ஸ்பரிசித்துக் கொண்டேயிருக்கும்...

''த்சு, கொஞ்ச நேரம் கையக் கட்டிட்டு உட்காருங்களேன்...அது என்ன, எப்பப் பார்த்தாலும் அவளது பொய்யான கட்டளைக்குக் கீழ் படிந்து அந்த ஆசிரியன் கைகட்டி, உட்காருவான்...ஒரு நிமிஷம் கூடத் தாக்குப் பிடிக்க முடியாது...

''கையத் தானே கட்டச் சொன்னேன்...வாயைய்யா மூடிக்கச் சொன்னேன்? இப்பப் பேசுங்களேன்.'

''ஐயோ அபிராமி, உன்னைத் தொடாம என்னால பேச முடியாது...உன் சுண்டுவிரல் நுனியையாவது தொட்டுகிட்டே பேசறேனே...''

குழந்தை மாதிரிப் பிடிவாதம் பிடிப்பானே அவன்... இன்று என்னமாய் இப்படி கைகட்டி நிற்க முடிகிறது... அவனது இந்த விலகலே ஆயிரம் சவுக்கடிக்கு ஒப்பாக... குன்றிப்போய், கூசிப்போய் உட்கார்ந்திருக்கிறாளே அபிராமி

''இதப்பாரு...இருட்டிப் போச்சு. நேரங்கழிச்சு போனா உன் அக்கா பங்காரும்மா திட்டப் போறாங்க'

மேலும், ராத்திரி நேரத்துல பொம்பளைங்க தனியாப் போகக்கூடாது...பஸ் கிடைக்கறதும் கஷ்டம்...''

''என்னை விரட்ட நீங்களா—என்பதுபோல அவள் பார்க்க, அவன் மோட்டு வளையைப் பார்க்கிறான்... சற்றுப் பொறுத்து, மிகத் தணிவான குரலில் சொல்கிறான்.

''என் வீட்டுல பொம்பளைங்க நிழல்கூட இதுவரை பட்டதில்லே...இத்தனை நேரத்துக்கு மேல நான் உன் கூடப் பேசிட்டிருக்கறது. அக்கம்பக்கத்துகாரங்களுக்குத் தெரிஞ்சா...என்னைத்தான் கேவலமா நினைப்பாங்க...''

இதற்கு மேலும் அபிராமியால் உட்கார்ந்திருக்க முடியவில்லை, எழுந்தாள்.

''உங்களுக்கு கெட்ட பேரை வாங்கித்தர மாட்டேங்க... ஆனா ஒண்ணே ஒண்ணு...அதை மட்டும் சொல்லிட்டுப் போயிடறேன்... நான் என் தப்பை நல்லா உணர்ந்திட்டேன். இத்தனை வருஷத்துல எத்தனையோ அசிங்கத்தை மிதிச்சு, சாக்கடையில புரண்டு மன்னிப்பை வேண்டி உங்க முன்னாடி நிக்கறேன்... தயவு செஞ்சு எனக்கு இன்னொரு தடவை வாழறதுக்கு அனுமதி கொடுத்தீங்கன்னா... ஐயோ, வேண்டாம், என்னை அப்படிப் பார்க்காதீங்க என் மனசுல இருக்கற ஆசையச் சொன்னேன்... மறுபடியும் உங்க பொண்சாதியா. முகுந்தனுக்கு அம்மாவா— வாழற 'ாக்கியம் கிடைக்காதாங்கற ஏக்கத்துல சொன்னேன், பலபேர் தொட்டு, சீரழிஞ்சவளை உங்க மனைவியா ஏத்துக்கறது கஷ்டம் தான். வீட்டுல எனக்கு ஒரு இடம் கொடுத்தா போ ும்... வீட்டுக்காரியா வேணாம்... வேலைக்காரியா இருக்கேன். குழந்தையப் பார்த்துக்கற ஆயாவா இருக்கேன். தயவு செஞ்சு யோசிச்சு பதில் சொல்லுங்க. இன்னும் நாலுநாள் இங்கே இந்த ஊருலதான் இருப்பேன்...''



அவன் தூங்கும் குழந்தையை நோக்கி முத்தமிடக் குனிகிறாள். இமை விளிம்பில் சரம் கோர்த்திருந்த முத்துக்களில் இரண்டு மட்டும் சிறுவனின் கன்னத்தில் உதிர்ந்து உருள...

''அபீதா...''

இத்தனைநேரம் வாசலில் பொறுமையாய் காத்திருந்த ஜலஜா குரல் கொடுக்க அபிராமி திடுக்கிட்டு எழுந்திருக்கிறாள்...

''ரொம்ப நேரமாச்சு... சீக்கிரமா கிளம்பு...

உட்புறம் எட்டிப் பார்க்கத் தயங்கிய ஜலஜா வாசலிலிருந்தே கூற... அபிராமி கிளம்பி விட்டாள்.

குழந்தை முகுந்தனை, ஏக்கத்துடன் திரும்பித் திரும்பி பார்த்தபடி...

அந்த இடத்தை விட்டுக் கிளம்பவே மனசு வரவில்லை... சின்ன வீடானாலும், சத்யனின் கைத்திறத்தால் சுத்தமாய் விளங்கும் அதன் நேர்த்தியும் அங்கு நிலவும் அமைதியும்...

பங்காரும்மாவின் வீடு பெரிசுதான். எல்லாருக்கும் பொதுவாக உள்ள கூடத்தில் விலையுயர்ந்த சோபாக்களைப் போட்டிருப்பாள். திரைப்பட சம்பந்தமாகவோ, அல்லது வாடிக்கையாளர்களையோ வரவேற்று அந்தக் கூடத்தில் அமர்த்திதான் விசாரிப்பாள்... அதற்குப்பின் வந்தவரின் தேவையறிந்து தரம் பார்த்து அவரவர்களுக்கேற்றபடி உபசாரம் நடக்கும்...

அந்தக் கூடத்தைத் தவிர... மாடியிலிருக்கும் இரண்டு படுக்கையறைகளைத் தவிர...மிச்ச இடமெல்லாம் கண்ணால் பார்க்கச் சகிக்காது...

பத்தடிக்குப் பத்தடி அறையில் நாலு பெண்கள்

தங்கள் தகரப் பெட்டிகளும், தடுக்குப் பாய்களுமாய் வாசம் செய்ய வேண்டிய அவலம்...

அடுத்தவள் கொஞ்சம் அயர்ந்தால் அவளின் பொக்கிஷங்களான பவுடர், சோப்பு, உள்ளாடை, ரவிக்கை, சின்னஞ்சிறு மணிப்பர்சில் சிரமப்பட்டு சேர்த்து வைக்கும் ஐந்து பத்து சில்லறைகள் அத்தனையும் மாயமாய் மறைந்து விடும்...

முதல் நாள் இரவு சம்பாதித்தவள் குளியலறையில் 'மன்னவன் வந்தானடி' பாடிக் கொண்டிருப்பாள்...

கையில் காசில்லாதவள்...நடு முற்றத்தில் துவைக்கிற கல் மீதமர்ந்து குளியலறைக்குள் புக இரண்டு மணி நேரமாய் தவம் கிடப்பாள்.

## 15

**கொக்குப் பறக்குதடி—குட்டி**
**கோணவாய்க்கால் மூலையிலே**
**பக்கத்திலே உங்கார்ந்து நீ—என்னைப்**
**பதறவிட்டுப் போனாயடி!**

''என்னா ராணி. பாட்டு பொளக்குது...சட்டு புட்டுனு வெளிய வாடி...பசி உசிரு போவுது...ரெண்டு மணி நேரமா காத்துகிட்டிருக்கேன்...''

''பரவால்லே... குளிக்காம சாப்பிடு ஒண்ணும் குறைஞ்சு போயிடமாட்டே... அங்கே என்ன...உடம்பு மணக்குதான்னு மோந்து பார்க்க கியூ வரிசையா தட்டு கெட்டுப் போவுது...''

உள்ளே குளிக்கும் ராணி, களுக்கிட்டுச் சிரிப்பாள். அடுத்த கணம் முற்றம் வசை மொழிகளால் நாற்றமெடுக்கத் தொடங்கிவிடும்.



''என்னடி சொன்னே... நா குளிக்காட்டி பரவாயில்லையா...உன் உடம்பு மணந்தா போதுமா... அடியே, எத்தினி நாளுக்குடி இந்த வாழ்வு...சந்தனத்தைத்தேய்ச்சு, பன்னீரால குளிச்சு, அத்தரால முழுகி எழுந்தாலும் ஒருநாளு பொணமா நாத்தமெடுக்கப் போற உடம்பு தாண்டி இது...தெனாவட்டா பேசாதே... பல்லுகில்லெல்லாம் எகிறிப் பூடும்...ஆமா...''

அபிராமி, இதுமாதிரி எத்தனை வசை மொழிகளைக் கேட்டு விட்டாள்.

என்றாவது ஷூட்டிங் இருந்து — அவுட்டோரில் கதாநாயகியுடன் ஓடியாடி விளையாடிவிட்டு வீட்டுக்கு வரும்போது...

தொழில் மந்தமான பெண்களின் உஷ்ணமிகுந்த பார்வைகள் ஒவ்வொரு மூலையிலிருந்தும் அவளைச் சுட்டெரிக்கும்...

''வந்துட்டா, நம்மவீட்டு நடிகையர் திலகம்...''

இப்படிப்பட்ட எரிச்சல் மிகுந்த வார்த்தைகளைக் கேட்க வேண்டியிருக்கும்...

அலுத்து விட்டது அவளுக்கு...

''ஜலஜா... இப்பப் பார்த்தியே... இவர்தான் என் புருஷன். குழந்தை தூங்கறான் ... சின்ன வீடு தான்...ஆனா...அதுல நான்தான் ராணி. அந்தப் பழைய வாழ்க்கை கிடைச்சா... உலகத்துல என்னைவிட அதிருஷ்டசாலி யாருமே இல்லே...''

''அவரு என்ன சொல்றாரு அபீதா... இத்தனைக்குப் பிறகும் உன்னை, தன் பொண்டாட்டியா ஏத்துக்கறேன்னு சொல்றாரா...''

இதற்குப் பதில் சொல்லவில்லை அபிராமி. என்ன

சொல்வான்... சத்யனின் முடிவு அவளுக்கே தெரியாத ஒன்றாயிற்றே...

''தெரியல்லைடி...''

அவள் துக்கத்துடன், ஜலஜாவின் கரத்தைப் பிடித்து அழுத்த...

அந்த இரு ஜோடி பாதங்களும் இருளைக் கிழித்துக் கொண்டு விரைய...

அபிராமியை வழியனுப்ப வாசல்வரை வந்த சத்யன்-திண்ணையில் சாய்ந்தமர்ந்து, அபிராமியும், ஜலஜாவும் சென்று மறைந்த திசையையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

''அவளிடம் ரொம்பவும் கடுமையாகப் பேசிவிட்டோமோ...?''

சத்யனின் நெஞ்சம், அபிராமிக்காகப் பதறுகிறது. என்னதான் அவளிடம் விட்டேற்றியாகப் பேசிவிட்டாலும் காலம் காலமாய் அவனுள் உறங்கும் காதல் அவளுக்காகக் கட்சி கட்டிக்கொண்டு வாதாடுகிறது...

''திரும்பவும் அவ வந்தா சேர்த்துப்பியா...''

இதயம் எழுப்பிய கேள்வியில் அவன் அதிர்ந்து விட்டான.

''என்ன இது...அது மாதிரி ஒரு ஆசை, எனக்குள்ள இருக்குதா...''

அவன் தவிக்கிறான். இரவெல்லாம் அபிராமியின் கெஞ்சலான வேண்டுகோள் காதில் ஒலிக்க—படுக்கப் பிடிக்காமல் உட்கார்ந்தபடி பொழுதைக் கழிக்கிறான்.

அபிராமியின் மீது அவனுக்குக் கோபம் இல்லை; வருத்தம்தான் இருந்தது. பழி வாங்கும் எண்ணம் இல்லை



பரிதாபம் மேலோங்கியது. தன்னை ஏமாற்றிவிட்டாளே என்கிற கொதிப்பு இல்லை, தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டாளே என்கிற பதைப்புதான் இருந்தது...

மறுபடியும் அவளே திருந்தி வருகையில் விரட்டி அனுப்புவது சரியா என மனசாட்சி சண்டை போட்டது.

இந்த மட்டும் குழந்தை மீது இந்த அளவுக்காவது பாசம் வைத்திருக்காளே என்று நெஞ்சம் சமாதானப் படுத்தியது...

எல்லா ஆண்களுக்குமே தோன்றும் நினைப்பு அவனுள் தோன்றாமலில்லை.

கெட்டுக் குட்டிச் சுவரானவளை மறுபடியும் சேர்த்துகிட்டா ஊர் உலகம் என்ன சொல்லும்...

ஆனால். இந்த நினைப்பை அவள் மீதிருந்த பாசம் விரட்டியடிக்க...

திரும்பத் திரும்ப அவள் வந்து போனதையும், அவளது பரிதாபமான முகத்தையும் நினைத்துப் பார்க்கையில்...

மீண்டும் அவளுடன் வாழ்வதில் தவறே இல்லை என்கிற முடிவுக்கு வருகிறான் சத்யன்.

'அபிராமி-குடும்பக் கோவிலிலே வச்சு, பூஜை செய்ய வேண்டிய விக்ரகம். கடத்தல்காரங்க, அந்தப் புனித விக்ரகத்தைக் களவாடிட்டுப் போய் நாலு பேருக்கு வித்து, அவங்க இந்த சிலையோட அருமை தெரியாம, சாக்கடையில தூக்கி எறிஞ்சிட்டுப் போயிட்டாங்க... இதுல சிலை மேல என்ன தப்பு சொல்ல முடியும்...சாக்கடையில கிடக்கறதாலே கோவில் சிலையோட மகிமை குறைஞ்சு போயிடுமா என்ன...திரும்பக் கிடைக்கறப்ப அழுக்கு போக குளிப்பாட்டி, மஞ்சளும், குங்குமமும்

சாற்றி, பூப்போட்டு கும்பிட்டு கர்ப்பகிருகத்துல கொண்டு வைக்கத்தானே வேணும்...'

மறுநாள் பகல்பொழுதில், ஷூட்டிங் நடக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டு அபிராமியைச் சந்திக்கக் கிளம்புகிறான் சத்யமூர்த்தி.

வறண்டு பாலைவனமாய் வெறிச்சோடிக் கிடந்த இதயத்தில் வசந்தத்தின் இளம் தளிர்கள் துளிர்விட...

நெஞ்சுக்குள் புதுசாய் கிளர்ந்தெழுந்த சந்தோஷத்தின் கால்கள் தடுமாற...

சத்யமூர்த்தியை சந்தித்துவிட்டு வந்த அபிராமி, பங்காரும்மாவின் ஆயிரம் கேள்விகளை சமாளிக்க வேண்டியிருந்தது. கூட வந்த ஜலஜாவின் துணை கொண்டு அத்தனையையும் சமாளித்துவிட்டு படுக்கையில் விழுகிறாள் அவள்.

''இங்கே இருக்கற டவுனுக்குப் போய் மாத்திரை வாங்கிட்டு வரத்துக்கு இத்தினி நேரமா...,'

''பக்கத்துல இருந்த மருந்துக்கடை மூடியிருந்தது... வேற கடை எங்கேயிருக்குதுன்னு தேடிப் பார்த்து வாங்கிட்டு வர்றதுக்குள்ளே பஸ்ஸை விட்டுட்டேன்....'

''அடுத்த தெருவுல இருக்கற மருந்து கடைக்கு பஸ்ஸுல எங்கேடி போனீங்க...''

''அடுத்த தெருவுல இருக்கற கடைதான் சாத்தியிருந்தது பங்காரு அக்கா...அதனால பஸ் பிடிச்சி ரெண்டு பர்லாங் தூரத்துல இருக்கற மருந்து கடைக்குப் போயிட்டு வந்தோம்...''

ஜலஜாதான் சமயத்தில் கை கொடுத்தாள்...

இரவு சினிமாவுக்காக பங்காருவும், இன்னும் சில



எக்ஸ்ட்டிராக்களும் துணைக்கு லைட்பாய் ஒருவனை அழைத்துக் கொண்டு புறப்பட...

அபிராமியும், ஜலஜாவும் தனித்து விடப்பட்டனர்...

இதுநாள்வரையில் அபிராமியாரிடமும் தனதுபழைய வாழ்க்கையைப் பற்றி வாய் விட்டுச் சொன்னதில்லை. இன்று இவளிடம் சொன்னால் தேவலை போல இருக்கிறது, வாய் திறந்து அழுதால் மனப்பாரம் குறையும் போல இருக்கிறது...

அங்குள்ள மற்ற பெண்களைப்போல—அபிராமியைப் பொறாமையுடன் பார்ப்பவளில்லை ஜலஜா.

இங்கு—பங்காரம்மாவிடம் இவள் வந்து சேர்ந்தே ஓரிரு மாதங்கள்தான் ஆகிறது. அதுவும் அவளாக விரும்பி வந்தவளில்லை. தாலி கட்டியவன் சொல்லாமல் கொள்ளாமல் இன்னொருத்தியுடன் ஓடிவிட, பிழைக்கும் வழி தெரியாமல், வீடு வீடாக வேலை கேட்டுப் பரிதவித்து நின்றவளை தன் வீட்டுக்கு அழைத்து வந்தவளே பங்காரம்மாதான்...

அபிராமியைப் போன்ற அழகான முகமும்; கட்டுப்கோப்பான தேகவாகும் ஜலஜாவுக்குக் கிடையாது. இருந்தாலும் குரூப் டான்ஸில் பத்துபேரில் ஒருத்தியாய் வந்து கையை, காலை ஆட்டவும் கிராமத்துக் காட்சியில் வம்பு பேசும் பெண்களில் ஒருத்தியாய் தலையை நீட்டவும், கும்பல் கூடி கதாநாயகியை ஏசும் போது—அகலப் பொட்டும், அள்ளிச் செருகிய கொண்டையுமாய் கும்பலோடு கும்பலாய் நிற்கவும் இவள் மிகவும் உதவினாள்.

இந்த எக்ஸ்டிராத் தொழிலை விடவும், பெரிசாய் தனக்கு எதுவும் கிடைத்துவிடாது என்பதைத் தீர்மானமாய் உணர்ந்திருந்தாள் அவள்.

ஏதோ அரை வயிறு சோறாவது கிடைத்தால் போதும் என்பதுதான் அவளது நிலைமை. ஆனால், சில சமயங்களில், படப்பிடிப்பு இல்லாத நாட்களில் பங்காரம்மாவின் சொல்படி தேக வியாபாரத்தில் ஈடுபடுவதுதான் அவளால் சகிக்கமுடியாத ஒன்றாக இருந்தது. ஒவ்வொரு கணமும் தன் கழுத்தில் தாலியைக் கட்டி, நடுத்தெருவில் தவிக்க விட்டுப்போனக் கணவனைத் திட்டித் தீர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை—கோபத்தின் உச்சத்தில், ஏமாற்றப்பட்ட எரிச்சலில் கொண்டவனை மட்டும், மரியாதையில்லாமல் வசை பாடி விட்டுத் தான் மறுவேலை பார்ப்பாள்.

"பாவி—இவன் நல்லாயிருப்பானா—இத்தினி காலமா இவன் காலடியே கதியின்னு இருந்தவளை ஏமாத்திட்டுப் போனானே—இவனையெல்லாம் வாக்கப்புல தள்ளணும். இழுத்து வச்சுக் கசையடி கொடுக்கணும். துப்பாக்கியால சுட்டுத் தள்ளணும். இன்னொருத்தியோட ஓடினானே—அவ கூட சுகமா எத்தினி நாளு குப்பை கொட்டப்போறான்—என் பாவத்தைக் கொட்டிகிட்டதுக்குத் தெருத் தெருவா அலையப் போறான். சந்தியில நிக்கப்போறான். அப்பத்தான் என் கொதிப்பு அடங்கும்—"

ஒரு நாளைக்கு ஒரு முறையாவது புருஷனை சபித்தால்தான் அவளால் மற்ற காரியங்களைப் பார்க்க முடியும். படப்பிடிப்பு இல்லாத நாட்களில், பகல் பொழுதுகளில் பங்காரம்மாவின் கண்ணில் படாமல் புழக்கடை முற்றத்தில் போய் அமர்ந்து; தலையில் கை வைத்தபடி ஒரு பாட்டம் அழுது விட்டுத்தான் சாப்பிட வருவாள்.

"குருவி சபித்ததென்றால்—அது?
காதத்துக்குக் காதம் போகும்—நான்



பொன்னு சபித்தேனென்றால்
போபடைய ஏது இடம்?
காக்காய் சபித்ததென்றால்—அது
காதத்துக்குக் காதம் போகும்—நான்
மங்கை சபித்திதன்றால்
மாற்ற இடம் ஏதென்று?
மானம் சபித்ததென்றால்—அது
மண் மேலே மழை பொழியும்—நான்
பொன்னு சபித்தேனென்றால்
போபடைய ஏது இடம்?

நீளமாய் ஒரு குரல் அழுது, படலைத் தலைப்பில் மூக்கை 'சர்'ரென உறிஞ்சித் துடைத்து—

"என்னா, இந்தப் பொன்னு தொல்லை. கொல்லைப் புறத்துல போய் உட்கார்ந்துகிட்டு ஒப்பாரி வைக்க ஆரம்பிச்சிட்டாளா—அவளைக் கட்டி வாங்கடி—இவளோட பெரிய ரோதனையாப் போச்சி—அன்னிக்கு ஷூட்டிங்குல ரெண்டு வார்த்தை பேசச் சொல்றாரு டைரக்டரு—முழி முழின்னு முழிக்கறா—புருஷன்காரனைத் திட்டி பக்கம் பக்கமா வசனம் பேசச்சொல்லு—ஒப்பாரியோடப் பேசுவா—இவளோட அழுமூஞ்சித்தனம் தெரிஞ்சு தானே அவன் ஓடிட்டான். கஞ்சு குடிக்கச் சொல்லுடி—"

பங்காரம்மாவின் இரைந்த குரல் கேட்டுத்தான் அவள் அடங்குவாள்.

இப்போப்பட்டவளுக்கு—அபிராமியின் வாழ்க்கை மிக ஆச்சரியமாக இருக்கிறது.

# 16

**பாசம் பிடிக்கும் தண்ணி—குட்டி**
**பல பேர் எடுக்கும் தண்ணி**
**அத்தைமகள் கொடுக்கும் தண்ணி—எனக்கு**
**அத்தனையும் சர்க்கரைதான்!**

இப்படிப்பட்ட அன்பான புருஷனை விட்டு, ஒருத்தி சினிமா ஆசைக்காக ஊரை விட்டு ஓடி வருவாளோ...

எத்தனை அழகான குழந்தை... துறுதுறுவென்று கண்ணையும் நெஞ்சையும் கொள்ளை கொள்கிறாற் போல...

இந்தக் குழந்தையை விட்டு விட்டு தனியே போக இவளுக்கு மனசு எப்படி வந்தது?

ஐயோ... அந்த வீடும், அந்த மனிதரும், அவருடைய சாந்தமான சுபாவமும்... அசட்டுப் பெண்ணுக்கு இதையெல்லாம் கட்டி ஆளக்கொடுத்து வைக்கவில்லையே.

''இப்ப அழுது என்ன பிரயோசனம் அபீதா... வீட்டை விட்டுக் கிளம்பறதுக்கு முந்தியே, இதையெல்லாம் நீ யோசிச்சு வச்சிருக்கணும். இந்த மாதிரி அழகான குடும்பம் அமையறதுக்குக் கொடுப்பனை வேணும். வீட்டுகளாக்காயை உதறிட்டு, ஒட்டு விளாங்காய்க்கு ஆசைப்படறது ரொம்பவும் தப்பு...''

அபிராமி, மௌனமாய் அழுதாள். மறுநாள் படப்பிடிப்புக்குக் கிளம்பியவளின் கண்களும், முகமும் அழுதழுது வீங்கியிருந்தது...

அன்றைக்கு களத்து மேட்டில் சண்டைக் காட்சி படமாக்கப்பட... கதாநாயகனுடன், கதாநாயகியும்



அபிராமியும் முரடர்களுடன் மல்லுக்குநின்று சிலம்பத்தை சுழற்றிக் கொண்டிருக்கையில்...

ஜலஜாவும் மற்ற பெண்களும் ஒதுக்குப்புறமாய் அமர்ந்து படப்பிடிப்பைப் பார்த்துக் கொண்டிருக்கையில்...

தென்னந்தோப்பினூடே. ஒற்றையடிப் பாதையில் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு சத்யமூர்த்தி வருகிறான். சைக்கிளின் முன் பக்கம் சிட்டுக் குருவி போல முகுந்தன்...

ஜலஜாதான் முதலில் பார்க்கிறாள். உடனேயே அவளது கண்கள் பரபரவென பங்காரம்மாவைத்தான் தேடின

''பங்காரக்கா எங்கேடி...''

''நேத்து ராவு 'சி.ஐ.டி. சிங்காரி' சினிமாடெண்டுல போயிட்டு வந்தவ— ரூமுல வெட்டி மல்லாத்தின மரம் மாதிரி தூங்கறா...''

அவ்வளவுதான்... ஜலஜா, கும்பலூடே மெள்ள நகர்ந்து அவன் பக்கமாய் நகர்ந்தாள்...

''தம்பி... ஷூட்டிங் பார்க்க வந்தியா...'' சிறுவனின் தோளைத் தொட்டு நிறுத்தியவள் வினவ, சத்யன் அவளைக் கூர்ந்து பார்க்கிறான்.

''நான் நேத்து ராவு அபீதா கூட உங்க வீட்டுக்கு வந்திருந்தேங்க...''

''ஓ...இப்ப நினைப்பு வந்திடுச்சு...''

அவன்மெல்லச் சிரித்தபடி எம்பிநின்று ஷூட்டிங்கைப் பார்க்க...

அங்கு சாவி கொடுத்த பொம்மை போல, அபிராமி சிலம்பம் விளையாடிக் கொண்டிருக்கிறாள். முக மெங்கும் முத்து முத்தாய் வியர்வை. வேகமாய் சுழல்வதினால் மார்பகம் அவசரமாய் ஏறி இறங்க...

ஜலஜா அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறாள். மனைவியின் சிரமம் கண்டு, கசியும் கண்கள் அவள் பார்த்திராத ஒன்று...

''அபிதா கிட்ட ஏதாவது சொல்லணுங்களா...''

''உம்... ஒண்ணுமில்லே, சும்மாத்தான் பார்க்க வந்தேன்...''

அவன், தான் வந்த விஷயத்தை இவளிடம் கூறத் தயங்கி, அதற்குமேல் அங்கு நிற்கவும் கூச்சப்பட்டு, மெதுவாக நகர...

அவன் போய் விடுவானோ என்கிற பயத்தில் ஜலஜா அவசர அவசரமாய் கூறுகிறாள்.

''நேத்து ராவு முழுக்க அபிதா அழுதுகிட்டே இருந்ததுங்க... நீங்க ஏதாவது நல்ல சேதி கொடுத்தீங்கன்னா பரவாயில்லே... படிச்சவங்களுக்கு நான் புத்தி சொல்றதா நினைக்கக் கூடாது...தெரிஞ்சே தப்பு செய்யற ஆம்பிளைங்கள, தெய்வமா கொண்டாடற பொம்பளைங்க இந்த நாட்டுல இருக்காப்பல... தெரியாமத் தவறிட்ட பொண்ணை தன் வீட்டு வேலைக்காரியாவாவது ஏத்துக்கற புருஷன்காரங்க இல்லீங்க... அதனாலத்தான் எங்களை மாதிரிப் பொண்ணுங்க ரெட் லைட் ஏரியாவையும், கோடம்பாக்கத்துக்காரங்க கடைக்கண் பார்வையையும், பங்காரம்மாவின் தயவையும் நம்பியிருக்க வேண்டியிருக்கு... மன்னிப்பு— மனுஷனை தேவனாக்கும்பாங்க...நீங்க நிஜமாலுமே ஒரு தேவன்தான் அபிதா எல்லாத்தையும் சொல்லிச்சு... அவளுக்கு வாழ்வு கொடுத்திங்கன்னா... உங்க போட்டோவையே சாமி



படமா வச்சுக் கும்பிடுவேங்க நான்...என்னடா அவளுக்கு இவ சப்போர்ட்டான்னு பார்க்கறீங்களா... எங்கள்லே ஒருத்திக்கு மறுபடியும் நல்ல வாழ்க்கை கிடைச்சா... எங்களுக்கும் என்னிக்காவது அதுமாதிரி வாழ்க்கை கிடைக்கும்கற நம்பிக்கைதான்...''

அவள், படபடவெனப் பொரிய...

அவன் முகுந்தனை வருடியபடி, தலை குனிந்து நிற்கிறான்.

'இவளிடம் நம் எண்ணத்தை நிச்சயமாய் சொல்லலாம்...'

அவன் முகத்தில் புன்னகை அரும்ப...

''அவகிட்ட எனக்கு சம்மதம்னு சொல்லுங்க. அவ எப்ப வந்தாலும் என் வீட்டுக்கதவு திறந்திருக்கும்னு சொல்லுங்க .. ஸ்கூலுக்கு நேரமாச்சு நான் வரேன்...''

புதுசாய் திருமணமானவன் போல அவன் வெட்கப்பட்டுக் கொண்டு நகர, ஜலஜா மலர்ந்த சிரிப்புடன் அவனை இமைக்காமல் பார்த்துக் கொண்டு நிற்கிறாள்.

அன்றிரவு முழுக்க சரியான உறக்கமில்லை அபிராமிக்கு. சந்தோஷத்தில் மூச்சுத் திணறுகிறது. ஏன், ஜலஜாவுக்கும் கூடத்தான்.

இது எத்தனை ஆச்சரியத்துக்குரிய விஷயம்...

நிஜமா...நிஜமா...

அவர்களால் நம்ப முடியவில்லை.

சத்யமூர்த்தி வந்ததும், ஜலஜாவிடம் சொன்னதும் கதைபோல இருக்கிறது.

''அவர் என்ன சொன்னார் ஜலஜா...மறுபடியும் ஒரு தடவை முதல்லேருந்து சொல்லேன்...''

அபிராமி திரும்பத் திரும்பக் கேட்கிறாள்.

"இது என்னா வம்பாப் போச்சு? அவர் என் கிட்ட கதையா சொன்னார்? உன் கூட மறுபடியும் புருஷன் பொஞ்சாதியா வாழ இஷ்டம்தான்னு சொன்னார் அவர் தயாராம்... நீ எப்ப வந்தாலும் அவர் வீட்டுக்கதவு திறந்திருக்கும்னு சொன்னார்... போதுமா..."

ஜலஜா, பக்கத்தில் படுத்தபடி பெரிசாய் குறட்டை விடும் பங்காரம்மாவின் காதில் விழாதவாறு சொல்கிறாள்.

அபிராமியின் முகத்தில் மத்தாப்பூவாய் பூத்த மகிழ்ச்சி அவளுக்குத் திருப்தியாக இருக்கிறது.

வாழ்க்கையில், கணவனுடன் சேர்ந்து வாழ்கிற நாட்கள்தான் ஒரு பெண்ணின் பூரணத்வமான நாட்கள் என்பது அவளது தீர்மானமான நினைப்பு.

கண்ணெதிரே ஒருத்திக்கு ஞானஸ்னானம் நடைபெறுவது போல சிலிர்த்துப் போய் படுத்திருக்கிறாள் ஜலஜா.

"இவ புருஷனுக்குத்தான் எத்தனை பெரிய மனசு... எத்தினியோ பேர் சமூக சீர்திருத்தம் அது, இதுன்னு வாய் கிழியப் பேசறாங்களே தவிர— பொண்சாதி மேல கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் அவளைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில கடாசிட்டுப் போறதை என் கண்ணால பார்த்திருக்கேன்— ஆனா, இப்படி ஒரு மனுஷனை குப்பையில கிடந்தவளுக்குப் புது வாழ்வு தர்ற தெய்வத்தை... பார்த்ததே இல்லைடா சாமி... இவரு நல்லா இருக்கணும்."

அவள் நெஞ்சு முழுக்க, அந்த நல்ல மனிதன் நிறைந்திருந்தான்.



இப்பேர்பட்ட மனிதருக்கு மாலையிட்ட பாக்கியசாலியான அபிராமியையே உற்றுப் பார்க்கிறாள்.

"அபிராமி... உன் கிட்ட நான் ஒண்ணு சொல்லலாமா..."

"என்ன ஜலஜா?"

"இப்ப உனக்குக் கிடைச்சிருக்கற அதிர்ஷ்டம் வேற யாருக்கும் கிடைக்காது. பூலோகத்திலே நடக்காத அதிசயம் நடந்திருக்கறதாத்தான் நான் நினைக்கறேன். அதைக் காப்பாத்திக்கற சமத்து உனக்கு வேணும். அவ்வளவுதான் நான் சொல்லுவேன்...',

அபிராமி, மௌனமாய் படுத்திருக்கிறாள். இதழில் நிரந்தரமான புன்னகை படிந்திருக்க, கண்கள் கனவுலகில் லயித்திருக்கிறது...

சீக்கிரம் இந்தச் சிறையிலிருந்து விடுபட வேண்டும்... சீக்கிரம்... சீக்கிரம்...

"என்னிக்கு நாம இந்த ஊருலேருந்து கிளம்பறோம்..."

"ஆயிடுச்சு...நாளை மறுநாள் கிளம்பிடணும்னு தான் டைரக்டர் பேசிக்கிட்டிருந்தாரு. அபிராமி, இந்தப் படத்தோட வேலையெல்லாம் இத்தோட முடிஞ்சுடும். சனியன்விட்டதுன்னு தலைய முழுகிட்டு நாளை மறுநாள் புருஷனோட புறப்படு சொல்றேன்...நாளைக் கடத்தினா ஆம்பிளைங்க மனசு மாறினாலும் மாறிடும்...சொல்றதுக்கில்லே..."

"அவரு மாற மாட்டாரு. நிச்சயமா, அவர் மனசை மாத்தக் கடவுளாலே கூட முடியாது..."

"இருக்கலாம். அதுக்காக அவரை இனிமேலும் காக்க வைக்கக் கூடாதும்மா... நாளைக்கு ஷூட்டிங்

நடக்கற இடத்தக்கு வருவாரு. அவர்கிட்ட—நீ எப்ப அவரோட கிளம்பப் போறேங்கற விஷயத்தைச் சட்டு புட்டுனு சொல்லிடு. இனிமே யோசனைக்கே இட மில்லை...''

தனக்காக, தனது நலனுக்காக அவசரப்படும் ஜலஜாவை இறுக அணைத்துக் கொண்டு, நெஞ்சிலுள்ள சுமையெல்லாம் கரைய அழுது தீர்க்கிறாள் அபிராமி.

## 17

மறுநாள் சத்யமூர்த்தியைச் சந்தித்தபோது, அவனது காலைத் தொட்டு வணங்க வேண்டி, தேகம் பரபரத்துப் போனது. சுற்றிவர இருந்த கூட்டமும், ஒட்டுப்புல் போலக் கூடவே வரும் பங்காரம்மாவும் அவளது நினைப்புக்கு இடைஞ்சலாய்...

கும்பலில் சேராமல், எட்டி நின்ற சத்யனைப் பார்த்து தனக்குள் புன்னகைத்துக் கொள்கிறாள்.

''அத்துவானக் காட்டுக்குள்ளே
ஆயர் குழல் ஊதையிலே
சாடை சொல்லி ஊதினாலும்
சாடையிலே நான் வருவேன்...''

படப்பிடிப்பில் கடைசிப் பாட்டுக்கான நடனக் காட்சி அபிராமியின் அபிநயத்தில் ஆயிரம் அர்த்தங் களைக் கண்டு கொண்டான் சத்யன்.

தென்னை மரமொன்றில் சாய்ந்தபடி, அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

இனிமேல் கவலையில்லை அபிராமி. இன்னும், இரண்டு தினங்களில் திரும்பவும் அவனுடன் வாழ வந்து விடுவாள். வாழ்வில் மறுபடியும் வசந்தம் மலரும் குழந்தை முகுந்தனுக்கு அம்மா வந்து விடுவாள். அவனைக் கொஞ்சி, முத்தமிட்டு, இறுக அணைத்துச் சீராட்டி...



இதயத்துக்குள்—மல்லிகைப் பூக்களைப் பரத்தினாற் போன்ற சுகம்...

'ஓ...என் வீட்டு ராணி நாளை மறுநாள் வந்திடுவா கடந்துபோன நாட்களோட கசப்பான நினைப்புகள் எதுவுமே, அவ நெஞ்சுல அலைமோதாதபடி பார்த்துக்க வேண்டியது என் பொறுப்பு...தப்பித் தவறிக் கூட பழசை ஞாபகப்படுத்தக்கூடாது...'.

'முதல்லே, வீட்டைப் பெருக்கி சுத்தமா வைக்கணும். அவ வந்தவுடனே வசதியா சமைக்கறாப்பல, தாராளமா மளிகை சாமான்களை வாங்கிப் போடணும்...''

''முகுந்தன் கிட்ட எப்படி சொல்றது? உங்க அம்மாவை நாளைக்குக் காமிக்கப் போறேன்னு சொல்ல லாமா...இத்தனை நாள் இல்லாத அம்மா, இப்ப எங்கே ருந்து வந்தான்னு கேட்டா என்ன சொல்றது...'

'ஊர் சனங்க கேட்பாங்களே...அதுக்கு என்னத்தை சொல்லி சமாளிக்கறதாம்...இதோ, இவ இப்ப ஆடற தைப் பார்த்துக்கிட்டிருக்கற, அத்தனை பேரும் நாளைக்கு, 'இவ எப்படி உன் கூட வந்தா'—ன்னு கேட் பாங்களே...'

''கேட்டா கேட்கட்டுமே...எல்லாருக்கும் பதில் சொல்லிட்டிருக்கறதுன்னா முடியற காரியமா என்ன... இவளை நானே ஏத்துகிட்டதுக்கு அப்புறம் ஊரைப் பத்தியும், உலகத்தைப் பத்தியும் என்ன கவலை...'

எண்ணங்களில் திளைத்தபடி எத்தனை நேரம் நின்றிருந்தானோ...

படப்பிடிப்பு முடிந்து, அபிராமியும் மற்றவர்களும் திரும்புகையில்தான் சுய நினைவு வருகிறது...

ஒரு கணம். ஒரே கணம்தான்...

அத்தனைப் பேரும் அவனைக் கடந்து செல்கையில் அவள் ஜலஜாவின் கையை அழுந்தப் பிடித்துக் கொண்டாள். அவனை சமீபிக்கையில், கையிலிழுந்த தோள் பையைத் தவறவிட்டு...

அதை எடுக்கும் சாக்கில் அவனது கால்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ள...

நீள் விழிகளில் நன்றியின் அடையாளமாய் தேங்கி நிற்கும் நீர்த்திவலைகள்...

''நாளன்னிக்கு சாயந்திரம் வாங்க...உங்க கூடப் புறப்பட்டு வந்திடறேன்—''

மெல்லிய ரகசியமான வார்த்தைகள். இதற்கு மேல் அங்கு நிற்க பயந்து, ஜலஜாவையும் இழுத்துக் கொண்டு ஓடுகிறாள்.

சத்யமூர்த்தி என்றுமில்லாத ஆனந்தத்துடன் சைக்கிளில் பறக்கிறான்.

அன்று மாலை முகுந்தனுக்கு இனிப்புடன், இந்தச் செய்தியையும் சேர்த்து வழங்கியபோது...

அசந்துபோய் நின்று விட்டான் சிறுவன்.

''நிசமாவா...நாளன்னிக்கு என் அம்மாவைக் காமிக்கப் போறயா?''

''நிசமாத்தான் கண்ணா. நீ வேணா பார்த்துக்கிட்டேயிரு. நாளன்னிக்கு இத்தனை நேரம், உங்கம்மாதான் உனக்கு காபி பலகாரத்தை வச்சுகிட்டு காத்திட்டிருப்பா...''



''அப்ப நீ...அம்மா கையால நீயும் சாப்பிடுவே இல்லே...''

''ஒ...ஜோரா சாப்பிடுவேனே...அம்மா வந்தப்புறம் நம்ம ரெண்டு பேரையும் உட்கார்த்தி வச்சுப் பரிமாறுவா...''

''அந்த அம்மாவை இப்பவே கூப்பிட்டுட்டு வந்தா என்ன...''

''ஊகும், நாளன்னிக்கு வரைக்கும் பல்லைக் கடிச்சிட்டுப் பொறுத்தக்க.''

''இப்ப அம்மா எங்கே இருக்காங்கப்பா...நான் பார்க்கணுமே...''

''நாளன்னிக்கு வரைக்கும் பொறுத்துக்க...''

சத்யனின் பதிலைக் கேட்ட சிறுவன் செல்லமாகச் சிணுங்க...

ஒரு நிமிடம்—தனது பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்துள்ள அபிராமியின் புகைப்படத்தை எடுத்து மகனிடம் காட்டலாமோ என்றுகூட நினைக்கிறான் அவன்.

குழந்தைக்கு நினைவு தெரியத் தொடங்கியதிலிருந்து அபிராமியின் புகைப்படத்தை, அவன் கண்களிலிருந்து மறைத்து வைத்திருக்கிறான் சத்யன்.

குழந்தையின் நெஞ்சில் ஏக்கம் அரும்பக்கூடாதென்று ஊராரின் வம்பு வாய்க்கு தன் மனைவி அவலாகி விடக்கூடாதே என்று, அவன்—அபிராமியின் நினைவாக எதையுமே வெளிப்படையாக வைத்ததில்லை.

எல்லாமே அவளது சிறு டிரங்க் பெட்டியில்தான், அவள் உபயோகித்த புடவையிலிருந்து—வீட்டை விட்டு

கிளம்புவதற்கு முதல்நாள் காலையில் அவள் தேய்த்துக் குளித்த மஞ்சள் கிழங்கு வரையில், அத்தனையையும் பத்திரமாய் பூட்டி வைத்து...

அவளைப் பற்றிய நினைவு மேலோங்கும் போதெல்லாம், மகனுக்குக் கூடத் தெரியாமல் அவளது பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு பொருளாய் எடுத்து ஸ்பரிசித்து பழைய நினைவுகளை அசை போட்டு...

திருமணமான புதிதில் அவர்களிருவருமாய் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம்...

அதில அபிராமி இன்னமும் இளமையாய், பசுமையாய், கபடின்றி சிரிப்பாள்.

போட்டோ ஸ்டூடியோவிலிருந்து அந்தப் புகைப் படத்தை வாங்கி வந்த சத்யன்—நாலைந்து நாட்கள் கழித்து ஸ்டுடியோ பக்கமாய் செல்கையில், தங்களது ஜோடிப் போட்டோவில், தன்னை மட்டும் கத்தரித்து எடுத்துவிட்டு அபிராமியின் முகத்தை மாத்திரம் பெரிசாய், கண்ணாடிச் சட்டம் போட்டு மாட்டியிருந்த போட்டோகிராபரிடம் சண்டை பிடித்து, அந்தப் படத்தையும் பிடுங்கிக் கொண்டு வந்தது நினைவுக்கு வருகிறது...

'தெருவுல போறவங்க வர்றவங்க பார்க்கறாப்பல ஒரு குடும்பப் பெண்ணோட படத்தை மாட்டறதா...

—இப்படி அவன் கேட்ட நாள்...

''இந்தாங்க, உங்க பொஞ்சாதி படத்தை நீங்க வச்சுக்கங்க,.''

போட்டோகிராபர் எரிச்சலடைந்த நாள்...

அந்தப் புகைப்படம் கூட இன்று !பெட்டியில்தான்.



'குழந்தைக்கு எடுத்து காமிச்சா என்ன. .'

இருக்கட்டும். இப்ப வேணாம். அவ வரட்டும். அவளையும் வச்சுகிட்டு. முகுந்தனை இழுத்து மடியில வச்சுட்டு போட்டோவைக் காமிச்சு 'இதுதாண்டா உங்கம்மான்னு காட்டணும்...

அவனது கற்பனை சிறகு விரித்துப் பறக்கிறது... இரண்டு நாட்களில் தனது சிறகுகள் முறித்து விழப் போகும் பரிதாபத்தை உணராமல்...

# 18

**மச்சு வீட்டுப் பச்சைக்கிளி**
**குச்சுக்குள்ளே குந்திடுமோ**
**இச்சைப்படி நடக்குமோடி—செங்கம்மா**
**என் எண்ணம் பலிக்குமோடி!**

'இன்றைக்கு அபிராமி வரப் போகிறாள்...'

நினைக்கும் பொழுதே நெஞ்சம் இனிக்கிறது சத்ய மூர்த்திக்கு. தன்னால் இயன்ற வரையில் அவளை வரவேற்க வீட்டையும், முகுந்தனையும், தன்னையும் தயார் செய்து கொள்கிறான்...

வாய் விட்டு வெளியே சொல்லாவிட்டாலும், இதயத்தின் துள்ளல் இருவிழிகளின் வழியே பெருக்கெடுக்க...

இருள் பிரியும் முன்னரே எழுந்தவன் பால்கார அம்மா அம்மாவிடம் பாத்திரத்தை நீட்டும் பொழுதே முகமெல்லாம் புன்னகை...

''ஆயா...இன்னும் ஒரு உழக்குப் பால் ஊத்திட்டுப் போங்க.''

''என்னா தம்பி விசேசம்? விருந்தாளி வரப் போகுதா...?''

அவன் சிரிப்புடன் தலையை ஆட்ட,

''எத்தனை நாளைக்கு அதிகமா வேணும் தம்பி...''

இதற்குச் சட்டெனப் பதில் சொல்ல முடியாமல் திணறுகிறான் அவன்.

என்னவென்று சொல்லுவான்?

நிரந்தரமான விருந்தாளி வரப்போவதை அவளிடம் எப்படிச் சொல்லுவான்?

நாளாக நாளாக-மற்றவர்களாகவே புரிந்து கொள்ள வேண்டியதுதானே...

''எத்தனை நாள் இருக்கப்போறாங்கன்னு தெரியலை ஆயா...இருக்கற மட்டும் ஊத்துங்க...''

வீட்டைப் பெருக்கி, துடைத்து பக்கத்து வீட்டுக்காரி வாசலில், வழக்கம்போல சாணமிட்டுக் கோலம் போட்ட போது அவசரமாய் ஓடி வந்தவன்.

''கோலத்துக்குக் கொஞ்சம் காவிப்பட்டை போட்டு விடுங்க...''

குனிந்து கோலம் போட்டுக் கொண்டிருந்தவள் சட்டென நிமிருகிறாள்.

''என்னங்க இன்னிக்கு? முகுந்தன் தம்பிக்குப் பொறந்த நாளு கூட அடுத்தமாசம்தானே வருது.''

''விசேசம் ஒண்ணுமில்லீங்க. விருந்தாளி ஒருத்தர் சாயந்திரமா வராங்க...''

''அதாருங்க, காவிக்கோலம் போட்டு வரவேற்கிறாப்பல...''

அவள் கண்களை இடுக்கியபடி சிரிக்க—

அவன் அதற்கு மேலும் அவளிடம் வாய் கொடுக்கப் பயந்து, மெள்ள சிரித்தபடி நகருகிறான்.



முகுந்தனுக்குக் குளிப்பாட்டி, உடை அணிவித்தவனுக்கு அதற்கு மேல் ரகசியத்தைக் காப்பாற்றும் திறமை இல்லை.

''கண்ணா, உன்னோட அம்மா இன்னிக்கு வரப் போறாங்க...''

''நிசமாவா...''

''உம்...சாயந்திரம் வந்திடுவாங்க...''

சிறுவனின் முகத்தில் மத்தாப்பு ஜொலிக்க—

''இதை நான், என்னோட சினேகிதப் பசங்களுக்கெல்லாம் சொல்லட்டுமா அப்பா...''

'எதுக்குடா?'

''பின்னே... அவங்களுக்கு மட்டும்தான் அம்மா இருக்காப்பல பெரிசா அலட்டிக்கறாங்களே...என்னோட அம்மாவும் இன்னிக்குவந்திடப் போறாங்கற விஷயத்தை எல்லார்கிட்டயும் சொல்லிட வேணாமா...

அவன் குதித்துக் கொண்டு வாசலுக்கு ஓடுகிறான்...

சத்யன் சுறுசுறுப்பாய் தனது வேலைகளை முடித்து விட்டு, சுத்தமாய் ஒரு வெள்ளைச் சட்டையை எடுத்து மாட்டிக் கொள்ள...

அவன் என்றுமே கதராடைதான் அணிவான்.

அபிராமிக்கு இதில் சிறிது வருத்தம்தான்.

''சினிமாவுல எப்படியெல்லாம் சட்டை தச்சுப் போட்டுகிட்டு வராங்க...நீங்க மட்டும் எப்பப்பார்த்தாலும் இந்த முரட்டுத் துணியையே போட்டுக்குங்க... உக்கும்...

அவனது மார்பில் செல்லமாய் சிணுங்குவாள்.

இப்பொழுது அதெல்லாம் நினைவுக்கு வர...என்றோ 'பண்ணையார் வீட்டுப் பிள்ளைக்கு, கணக்கு சொல்லிக் கொடுத்து, வகுப்பில் கடைசி மாணவனாக இருந்தவனை—முதல் மாணவனாக ஆக்கிய சத்தியமூர்த்தியைப் பாராட்டி—பண்ணையார் எடுத்துத்தந்த பட்டுச் சட்டை. இது வரையில் அணியப் படாமலேயே பெட்டியில் கிடப்பது நினைவுக்கு வர...

வாழ்க்கையிலேயே முதல் முறையாக—கதர் சட்டையைக் கழற்றிவிட்டு, பட்டுச் சட்டையை மாட்டிக் கொள்கிறான்.

முரட்டு தேகத்துக்கு மென்மையான அந்தப் பட்டுத் துணி, கொஞ்சமும் பொருத்தமில்லாதது போல...

'இருக்கட்டுமே...எத்தனையோ வருஷ இடைவெளிக்குப் பிறகு அவ என்னோட வாழ வரப் போறா... அவளோட சந்தோஷம்தான் முக்கியம்...

அன்று மாலை அவன், அபிராமியைச் சந்திக்கப் போன போது— முற்றிலும் புதியவனாக...

இந்த சிலநாட்களில் கிராம மக்களுக்கு, படப்பிடிப்பு அலுத்து

''ஏலேய்...இதைக் கவனிச்சுக்கிட்டிருந்தா—வயவரப்பு வேலையெல்லாத்தையும் யாரு கவனிக்கறது...

''இந்தாடி...நாத்து நடப்பெல்லாம் இன்னும் முடியவே இல்லை...இவளுங்களைப் பார்த்து கிட்டிருந்தா நம்ம வேலைய யாரு செய்வாங்க...''

உழைப்பை நம்பியிருப்பவர்கள், இப்படிக் கலைந்து போக—எஞ்சியிருப்பவர்கள், வேலை வெட்டியில்லாத ஒரு சிலரும், அசாத்திய சினிமா மோகம் கொண்ட சில இளைஞர்களும்தான்.



தூரத்திலேயே சத்யமூர்த்தியையும், முகுந்தனையும் கண்ட அபிராமி, பரபரப்புடன் ஜலஜாவின் கரத்தைப் பிடித்துக் கிள்ள...

''இன்னும் பங்காரம்மா கிட்ட சொல்லிக்கவே இல்லையே அபீதா...சொல்லிக்க...''

ஜலஜா, அவளது காதில் ரகசியமாய் கிசுகிசுக்கிறாள்.

''இருக்கட்டும். இன்னும் அவகிட்ட சொல்லிக்கற நேரம் வரலை. இப்பவே சொன்னா—எதுனாச்சும் முட்டுக்கட்டை போடுவா, மகராசி...ஆச்சு, இன்னும் கொஞ்ச நேரத்துல நாம கிளம்பப் போறோம். அப்ப சொல்லிக்கலாம்...அது வரைக்கும், இவரு பங்காரம்மா கண்ணுல படாம இருக்கறதே நல்லது...''

அபிராமி, சினேகிதியை அடக்கினாலும், பயத்தில் நெஞ்சு முரசமாய் அதிருகிறதே...

இன்னும் கொஞ்ச நேரத்தில் கிடைக்கப் போகும் விடுதலை...திரும்பவும் கிடைக்கப் போகும் அமைதியான இல்வாழ்க்கை...

'சமையலெல்லாம் மறந்தே போச்சு, அடுப்பங்கரையை எட்டிப் பார்த்து எத்தனை வருஷமாச்சு... பாவம், அவரும் நாக்கு செத்துக்கிடப்பாரு... பழசையெல்லாம் ஞாபகப்படுத்திகிட்டு, வாய்க்கு ருசியா ஆக்கிப் போடணும்...

நெஞ்சம் கிடந்து அடித்துக் கொள்கிறது.

'போதும், இந்த சினிமா வாழ்க்கை. நாளையோட இந்த பவுடர், லிப்ஸ்டிக், மேக்கப் சாமான் எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சிடணும். வயசுக்கும். உடம்புக்கும் சம்பந்தமில்லாம போட்ட வேஷமெல்லாம் போதும். ஆடிப் பாடி, ராப்பகல் பாராம குரூப் டான்ஸ் ஆடி,

கண்டவனோடக் கட்டிப் புரண்டதெல்லாம் போதும்... இனிமே இவரோட பொண்டாட்டி, என் குழந்தைக்குத் தாயா, வாழ ஆரம்பிக்கணும். பங்காரம்மா என்ன தடுத்தாலும் சரி...'

அடுத்த நிமிடம் புகையப் போகும் எரிமலையாய் உட்கார்ந்திருக்கிறாள்

''பேக் அப்.''

டைரக்டர் குரல் கொடுக்க, அதுவரையில் சுறுசுறுப்பாய், கும்பலாய் இயங்கிக் கொண்டிருந்த குழு, மெள்ளக் கலைகிறது...அவரவர் தங்களது கருவிகளை எடுத்து வைத்துக் கொண்டு கிளம்பத் தயாராகிறார்கள்.

இதுவரையில், வேலை முடிய வேண்டுமே என்கிற பதட்டத்தில் 'காச்மூச்'செனக் கத்திக்கொண்டிருந்த டைரக்டர் காது வரையில் பரவிய புன்னகையுடன் தனது நாற்காலியில் அமர...

ரசிகர் சிலர், கையெழுத்து வேட்டையிலும், இன்னும் நடிப்பதற்கு சந்தர்ப்பம் கேட்டும் அவரை நெருக்கியடிக்க...

''என்னம்மா... டைரக்டரைப் பார்க்கணுமா... சினிமாவுல நடிக்க ஆசையா இருக்கா...ரொம்பச் சின்னப் பொண்ணாயிருக்கியே உனக்கு என்னத்தை டயலாக் பேச வரப் போகுது...''

—இப்படி, பங்காரம்மா ஒருபக்கம் அங்கு நின்றிருந்த பெண்ணை விசாரித்துக் கொண்டிருக்க...

இதுதான் சமயமென்று அபிராமி, டைரக்டரின் எதிரில் போய் நிற்கிறாள். ஜலஜா சற்றுத் தொலைவில் நின்றிருந்த சத்யனை அருகில் வரும்படி கை ஜாடை காட்டுகிறாள்...



''யாரைக் கூப்பிடறே...

திரும்பிப் பார்த்த பங்காரு, முதலில் அவனை அடையாளம் தெரியாமல் புருவத்தை உயர்த்தி,புரிந்ததும் திகைத்துப் போய் நிற்க...

'இவன் எதுக்கு இங்கே வந்தான்...'

அடிவயிற்றில் பயம் கவ்வுகிறது.

''அபிராமியோட புருஷன்...''

ஜலஜாவின் பதில் எரிச்சலை உண்டு பண்ண,

''எல்லாம் எனக்குத் தெரியும் ''

அவள் வெடுக்கென முகத்தை திருப்பிக் கொண்டு, அபிராமியை நோக்கி லொங்குலொங்கென்று ஓடுகிறாள்.

''இருங்க...எங்கே ஓடறீங்க...''

அவளது கையைப்பிடித்து இழுத்து நிறுத்திய ஜலஜா, சாவகாசமாய் மிக அமைதியாய் சொல்கிறாள்!

''இதோ, டைரக்டர் சார்கிட்ட சொல்லிகிட்டு, அபிராமி உங்ககிட்டயும் சொல்லிகக வருவா... கம்முனு அவளை, அவ புருஷன் கூட வழியனுப்பிச்சு வைங்க... நல்லாயிருந்த குடும்பத்தைப் பிரிச்சு வச்ச பாவம் ஏழேழு ஜன்மத்துக்கும் உங்களைத்தான் பாடாய்ப் படுத்தும்...''

''எனக்கு சாபம் கொடுக்கறயாடி...''

''சேச்சே... சாபம் கொடுக்க நான் என்ன பத்தினித் தெய்வமா... நானும் உங்களை மாதிரி சீரழிஞ்ச பொம்பளைதான். புருஷனோட வாழப் போறவளைத் தடுத்து நிறுத்தாதீங்கன்னுதான் சொல்றேன்...''

''சரிதான் போடி...''

அவன் அபிராமியை நோக்கிச் செல்ல, ஜலஜாவும் பின் தொடருகிறாள்.

''டைரக்டர் சார், இந்தப் படத்துல என் வேலையெல்லாம் முடிஞ்சுட்டதில்லே...''

''ஓ எஸ்... முடிஞ்சுடுத்து அபீதா... ரொம்ப நல்லா செஞ்சிருக்கே. இந்தப் படத்துல உனக்கு பிரமாதமான 'ஹோப்' இருக்குது...''

''அது இல்லீங்க...இனிமே நான்...''

அபிராமி, தான் சொல்ல வந்ததை எப்படி சொல்வதென்று திணற...அவளைப் பேச விடாமல், தானே பேசிக் கொண்டு போகிறார். என்றுமே, அவருக்கு மற்றவர்களைப் பேசவிடப் பிடிக்காது. அவர் சொல்லித் தரும் வசனங்களைப் பேசிவிட்டு 'கம்'மென்று இருக்கிறவர்களைத்தான் பிடிக்கும். ஆனால், அவர் மாத்திரம் பேசிக் கொண்டேயிருப்பார்...

''அபீதா, உன்கிட்ட முக்கியமான விஷயம் ஒண்ணு சொல்லணும்னு... நாலு நாளா வேலை மும்முரத்துல மறந்திட்டேன். எங்கே பங்காரு...''

''என்ன அண்ணே...நா, இங்கேதான் நிக்கறேன்...''

பங்காரு, முண்டியடித்துக் கொண்டு முன்னால் வந்து நிற்கிறான்.

''இதப்பாரு பங்காரு... அபீதாவுக்கு பெரிய அதிர்ஷ்டம் வந்திருக்கு. நம்ம சிவராஜா எடுக்கற புதுப்படத்துல அபீதாதான் ஹீரோயின். முழுக்க முழுக்க ஹீரோயின் சப்ஜெக்ட். படம் முடிஞ்சு ரிலீஸான உடனே, அபீதாவைக் கையிலே பிடிக்க முடியாது... 'டாப்புக்குப் போயிடுவா. அப்புறம் நானெல்லாம் ஒரு கால்ஷீட்டுக்கு



இவ பங்களா வாசல்லே தவம் கிடக்க வேண்டியநிலைமை வரப் போகுது...''

''ஆங்... நிஜமாவா... சிவராஜா படத்துல ஹீரோயினா...''

பங்காரு திறந்த வாயை மூட மறந்து நிற்கிறான்.

''சிவராஜா படத்துக் கதாநாயகி...''—சுற்றியிருந்த கும்பலில் திடீரென ஏற்பட்ட சலசலப்பு...

அபிராமி சிலையாய் நின்றுவிட்டாள்.

சிவராஜாவின் படத்தில் சின்ன ரோல் கிடைப்பதே கஷ்டம். அவர் அறிமுகப்படுத்திய நட்சத்திரம் எவருமே இதுவரை சோடை போனதில்லை... அத்தனை கைராசி. அப்பேர்ப்பட்டவர் படத்தில் கதாநாயகியாய் சந்தர்ப்பமா...

அவரது படம் அத்தனையும் வெள்ளி விழா கொண்டாடியிருக்கிறதே...

''என்ன, மலைச்சு போய் நின்னுட்டே பங்காரு... அபீதாவை நம்பி, அத்தனை பெரிய மனுஷர் லட்ச லட்சமா பணத்தைக் கொட்டத் தயாரா இருக்காரு. அனேகமா, நாம மெட்ராஸ் போன உடனேயே உன்னைப் பார்த்துப் பேசி, அபீதாவுக்காக இதுவரைக்கும் நீ செலவழிச்ச பணத்தைக் கொடுத்து, அவளை தன்னோட மேற்பார்வையில வச்சு படம் எடுக்கப் போறாரு. ஒரு வருஷத்துக்கு காண்டிராக்ட். அட்வான்ஸ் அம்பதாயிரம்...''

அபிராமி, கண்களில் நீர் ததும்ப நிற்கிறாள்.

31452
4818025

## 19

**மஞ்சள் மடியில் வைத்து—உனக்கு**
**மன்னவனைத் தேடி வைத்தேன்**
**மஞ்சள் உதறி விட்டாய்**
**மன்னவனைக் கையும் விட்டாய்!**

'இத்தனை நாள் சிரமப்பட்டதற்கு—இப்படி ஒரு அதிருஷ்டம் காத்திருக்கிறதா—ஐயோ, இப்ப நான் இவருக்கு என்ன பதிலைச் சொல்லுவேன்...'

'அதெல்லாம் எதுவுமே வேணாம். நான் புருஷனோட குடித்தனம் நடத்தப் போறேன்னு சொல்லிடலாமா...'

'ச்சே. எத்தனை கஷ்டப்பட்டிருப்பேன். இதுவரைக்கும் எத்தனை பேர் காலைத் தொட்டுக் கும்பிட்டிருக்கேன்... எத்தனை பேர் என்னை அசிங்கமா, கேவலமா நடத்தியிருக்காங்க. எல்லாத்தையும் சகிச்சுகிட்டது எதுக்காக...இது மாதிரி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கத் தானே... கிடைச்சப்ப கை நழுவ விடறது முட்டாள் தனம் இல்லையா...''

அவளது மௌனம் கலைந்து, என்ன பதில் வரப் போகிறதோ என நடுக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் சத்யனும், ஜலஜாவும், பங்காருவும்...

'இவள் என்ன சொல்லப் போகிறாள்'...

அபிராமி, குழந்தை முகுந்தனைப் பார்த்தபடி கண்கள் கலங்க கைகளை நீட்டுகிறாள்...

''இங்கே வாடா ராஜா''

அபிராமி முகுந்தனை நோக்கிக் கை நீட்டியதும் பங்காருவிற்கு எரிச்சல் மண்டிக் கொண்டு வருகிறது.



''அத்தனை பெரிய மனுஷர் உன்னை மதிச்சு சொல்லறாரு...மொதல்லே அவருக்கு பதில் சொல்லு... அப்பாலே குழந்தையக் கொஞ்சலாம்...''

''என்ன அபீதா.. பதிலையே காணோம். சிவராஜாவோட படத்துல நடிக்க உனக்குப் பிடித்தமில்லையா... அப்படியின்னா சொல்லு. வேற ஆளைப் பார்க்கச் சொல்றேன். அவரு படத்துல நடிக்க காலேஜ் பொண்ணுங்க எல்லாம் 'நான் நீ'யின்னு போட்டி போட்டுக் கிட்டிருக்காங்க... அவருக்கு என்னமோ உன்னைப் புடிச்சுப் போச்சு. உன்னாலதான் அந்தக் காரெக்டரை செய்ய முடியும்னு ரொம்ப நம்பிகிட்டிருக்காரு. உனக்கும் தெரிஞ்சிருக்குமே...இன்னி வரைக்கும் அவரா எந்த நடிகையையும் என் படத்துல நடிக்கறயான்னு கெஞ்சின தில்லே... அப்படிப்பட்டவர் கேட்கறாருன்னா...உன் கிட்ட நிஜமாகவே சரக்கு இருக்குதுன்னுதான் அர்த்தம்''

ஜலஜா, கன்னத்தில் வழியும் கண்ணீரைத்துடைக்க மறந்து, அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

'வாயத் திறந்து சொல்லேண்டி...நான் இனிமே சினிமாவுல நடிக்கப் போறதில்லைன்னு. அந்த மனுஷன் எத்தனை நேரமா, கால் கடுக்க நின்னுக்கிட்டிருக்காரு'

சத்யமூர்த்தி முகத்தில் பூத்த வியர்வைப் பூக்களை மேல் துண்டால் மெள்ள ஒற்றியபடி அபிராமியையே கூர்ந்து பார்க்க...

''என்ன அபீதா...இன்னமுமா யோசனை...''

அபிராமி, தான் அழைத்தவுடன் தன்னருகில் ஓடி வந்த முகுந்தனை இழுத்து அணைத்தபடி தலை குனிகிறாள். விழிகளில் தளும்பிய கண்ணீர் குழந்தையின் மீது விழ...

''இதுல சொல்றதுக்கு என்ன இருக்குதுங்க...டைரக்

டர் சிவராஜாவோட படத்தல நடிக்க நிசமாவே நான் கொடுத்து வச்சிருக்கணும். சம்மதம்னு சொல்லிடுங்க...''

வார்த்தைகளா இவை?

சத்யமூர்த்தியின் தேகமெங்கும் சல்லடைக் கண்களாய் துளைத்தெடுத்த விஷம் தோய்ந்த அம்புகள்...

இதைச் சொன்னவள், சத்யனையும் ஜலஜாவையும் நிமிர்ந்து பார்க்க தைரியமில்லாமல் தலை குனிகிறாள்.

'ஏன் இப்படிச் சொன்னோம்...இந்த வாழ்க்கையிலிருந்து மீள வேண்டுமென தவியாய்த் தவித்து விட்டு, கடைசியில் ஏன் இப்படி... ஐயோ, அவர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்...''

உள்ளே ஒரு மனம் அழுது புலம்புகிறதுதான். இருந்தாலும் இத்தனை நாள் நாயாய் அலைந்து, பேயாய் திரிந்து சிரமப்பட்டதற்குப் பலன் கை மேல் கிடைக்கும் பொழுது நழுவவிடப் பாழும் மனம் சம்மதிக்கவில்லையே...

இந்த மனசுக்குத்தான் எத்தனை சபலம்? நேற்று வரையில் நினைத்து உருகியது ஒன்றுக்காக. இன்றோ, அதைவிடக் கவர்ச்சிகரமான வாழ்க்கை கிடைத்ததும் ஒன்றை விட்டு மற்றொன்றிற்குத் தாவுகிறதே...

என்ன விவஸ்தை கெட்ட இதயம்...

இதைத்தான் மனம் ஒரு குரங்கு என்கிறார்களோ...

அவன், குழந்தையின் கன்னத்தை வருடி... முத்தமிடக்குனிய...

''முகுந்தா, இங்கே வா...''

சத்யமூர்த்தி சற்று இரைந்து கூப்பிடுகிறான். குழந்தை, அபிராமியின் அணைப்பை உதறி விட்டு தந்தையின் அருகில் ஓடி வர...

''ஏம்பா...''

''நேரமாச்சு, வா, வீட்டுக்குப் போவோம்...''

''அம்மாவைக் காட்டறேன்னு சொன்னியே...''

''மன்னிச்சுக்கடா... அம்மாவைக் காட்டத்தான் கூட்டி வந்தேன், ஆனால். இங்கே வந்தப்புறம்தான்



தெரிஞ்சது... அம்மா இறந்துட்டாங்கங்கறது...வாடா கண்ணா, போகலாம்...''

''அப்ப, இனிமே அம்மா கிடையவே கிடையாதா எனக்கு...''

குழந்தையின் குரல், அழுகையில் வெடித்துச்சிதற, அத்தனை பேருக்கும் நடுவில் தன் குழந்தை ஒரு காட்சிப் பொருளாய் இருப்பது பிடிக்காமல் சிறுவனை அள்ளி நெஞ்சோடு அணைத்தபடி விருட்டென நகருகிறான்.

நெஞ்சம் முழுக்க அவமானமும், துக்கமும் தீச்சுவாலையாய் எரிய...

'நான் பாட்டுக்கு இருந்தேனே...இவளை மறுபடியும் ஏன் பார்க்கணும். பார்த்த பின்பும் மனசைத் தளர விடாம இருந்தேனே...இவ எதுக்கு வீட்டுக்கு வந்து அப்படியெல்லாம் பேசி, என் மனசைக் கலைக்கணும்... இந்த ஏமாற்றத்தை என்னால தாங்கிக்கவே முடியலையே...'

குழந்தையை சைக்கிளில் வைத்துத் தள்ளிக்கொண்டு செல்பவனை, அழைத்து ஒரு வார்த்தையாவது ஆறுதல் சொல்ல வேண்டுமென நினைத்த ஜலஜா, தற்சமயம் என்ன சொன்னாலும் அவன் காதில் விழாது என்பதால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள்...

அபிராமியை ஏறிட்டுப் பார்க்கவே பிடிக்கவில்லை ஜலஜாவிற்கு.

'சீ, என்ன பெண் இவள்...நிரந்தரமான புத்தியில்லாதவ. இவளுக்காக, அந்த நல்ல மனுஷன் கிட்ட எப்படியெல்லாம் வாதாடினேன் அன்னிக்கு...மூஞ்சிலே கரியை அள்ளிப் பூசிட்டாளே...'

இத்தனை நேரம் வரையில், அபிதாவின் அடுத்த படத்தைப் பற்றியே மற்றவர்களிடம் அளந்து கொண்டிருந்த டைரக்டர், இப்பொழுதுதான் இந்தப் பக்கம் திரும்புகிறார்.

''அங்கே என்ன கசமுசா...பங்காரு...அந்த ஆள் என்ன சொல்லிட்டுப் போறாரு...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க...என்னமோ, குழந்தைய நடிக்க வைக்கணும்னு அந்த ஆளுக்கு ஆசை. அதெல்லாம் வேணாம். பிள்ளைய நல்லா படிக்க வச்சு முன்னுக்குக் கொண்டு வரப்பார்ன்னு சொன்னேன். நம்ம அபீதாவுக்கு குழந்தையின்னா உசிரு...அதான் தூக்கி வச்சுகிட்டு கொஞ்சிட்டிருந்தா...''

பங்காரு, சரியானபடி சரடு விட,

''ஓகோகோ... அப்படியா சேதி...இதப் பாரு அபீதா, இந்தக் குழந்தை ஆசையெல்லாத்தையும் மூட்டை கட்டி வச்சிடு. ஃபீல்டுல இப்பத்தான் அதிருஷ்டக் காத்து, உன் பக்கம் அடிக்க ஆரம்பிச்சிருக்கு... சிவராஜாவோட படம் உன் மார்க்கெட்டை ஒரு உசத்து உசத்தப் போகுது பாரு. எல்லாரும் பழைய அபீதாவா இதும்பாங்க...''

அவர், அவளது தோளில் தட்டியபடி நடக்க, அவரது பின்னாலேயே ஆட்டு மந்தையாய் தொடரும் கூட்டம்...

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேன்களில் அத்தனை பேரும் ஏற...நெஞ்சில் ஏற்றிய சுமையை இறக்கி வைக்காமலேயே ஏறுகிறாள் அபிராமி.

'பாவம், அவரோட ஆசையைக் கிளப்பி விட்டிருக்க வேணாம். பாவி நான்...'

வேன் புறப்பட்டு வெகு நேரமாகியும் அவள் பேசவே இல்லை...

திடீரென, பங்காருதான் அலறினாள்.

''ஐயய்யோ, வண்டிய நிறுத்துங்க இந்த ஜலஜாப் பொண்ணைக் காணலை...''

''அந்த வண்டியில போயிருப்பாளாயிருக்கும்... கம்முனு வாங்க...''

''அவ அப்படியெல்லாம் போகமாட்டாடி. அவ



ஃபீல்டுக்குப் புதுசு. டிரைவர், அந்த வண்டிய நிப்பாட்டு, சொல்றேன்...''

அவன், வண்டியை நிறுத்தி, தனது ஸ்தூல சரீரத்தை சுமக்க மாட்டாமல் சுமந்து கொண்டு இறங்கி ஓட...

''என்னாடி—இந்த வண்டியில ஜலஜா இருக்குதா...''

''இல்லைக்கா, அவ உங்க கிட்ட இந்த லெட்டரைக் கொடுத்திடச் சொன்னா... எங்கேடி போறேன்னு கேட்டதுக்கு பதில் சொல்லாமலேயே போயிட்டா...''

எவளோ ஒருத்தி, கீச்சுக் குரலில் சொல்லியபடி, கடிதத்தைக் கொடுக்க...

''இதை முன்னாடியே சொல்லித் தொலைக்கறதுக்கென்ன முண்டம்! வாய் எங்கே போயிருச்சு. வேளை தப்பாம படிப்படியா கொட்டிக்க மட்டும் தெரியும்...''

அந்த அவசரத்திலும் அவளை அர்ச்சித்தபடியே கடிதத்தைப் பிரிக்கிறாள்.

'இந்த வாழ்க்கை வெறுத்துப் போச்சு. என்னைத் தேட வேணாம். இப்படி வெட்கம்கெட்டு வாழறதுக்குச் சாகலாம். என்னை யாரும் தேடாதீங்க. தேடினாலும் பிணம்தான் கிடைக்கும்...'

''அடிப்பாவி மகளே...''

பெரிசாய் கத்த ஆரம்பித்தவள் சுற்றி நின்ற கூட்டத்தைப் பார்த்ததும் 'பொக்'கென அடங்கிப் போகிறாள்.

''எதுக்கு வம்பு... விஷயம் வெளில வந்தா—போலீசுன்னும், கேசுன்னும் நம்மைக் கட்டி இழுப்பாங்க. தரித்திரம். பீடை ஒழிஞ்சுதுன்னு விடாம...இவ செத்தா, நடிகர் சங்கத்துல பொணத்தை வச்சு, மாலை போட்டு துக்கம் கொண்டாடறதா பாழாப் போகுது...என்னமோ ரெண்டு படத்துல மூஞ்சியக் காமிச்சிருக்கா. இத்தோட இவ ஆயுசு முடிஞ்சுது...இவ இருந்தா மட்டும் இவ முகரைக்கு ஹீரோயின் சான்ஸா கிடைக்கப் போகுது...,

அவளின் மௌனம், சற்று வினோதமாய் பட, கும்பலில் ஒருத்தி வாய் விட்டே கேட்கிறாள்.

''என்னா யக்கா, பொண்ணு தண்டவாளத்தைத் தேடி ஓடிடுச்சா...''

''இல்லேடி...எவன் கூடயோ ஓடிடுச்சு. இதுங்களுக் கெல்லாம் சோறு போட்டு, தங்க இடம் கொடுக்கறேன் பாரு...என் புத்திய செருப்பால அடிக்கணும். நன்றி கெட்ட நாயி...சரி, சரி...டிரைவரு நீ வண்டிய எடு...''

அவள், தனது வேனில் ஏறிக்கொள்ள, புழுதிப்படலத் தைக் கிளப்பியபடி வேன்கள் சென்று மறைய...

முகுந்தனுடன் வீட்டுக்கு வந்த சத்யமூர்த்தி, வீடு திறந்திருப்பதையும், சமையலறையிலிருந்து சத்தம் வருவதையும் கண்டு திகைத்துப் போகிறான்.

எப்பொழுதும் போல சாவியை அடுத்த வீட்டுக்காரி யிடம் தானே கொடுத்து விட்டுப் போனோம்...

அடுக்களையில் எட்டிப் பார்த்ததும் அதிர்ந்து போகிறான்.

'ஜலஜா...'

கூடவே, அவளுக்கு உதவியாய் அடுத்த வீட்டுக்காரி.

இவனைக் கண்டதும் தலை குனிந்து நிற்கிறாள் ஜலஜா. அடுத்த வீட்டுக்காரிதான் ஆர்ப்பாட்டமாய் சிரிக்கிறாள்.

''என்ன வாத்தியாரய்யா... இந்த ஜலஜாதான் உங்க சம்சாரமாம்! முகுந்தனோட அம்மாவாம். இதை ஏங்க எங்ககிட்ட முன்னாலேயே சொல்லலை... தப்பு செஞ்ச வளை இந்த மட்டும் மன்னிச்சு ஏத்துக்கிட்டிருக்கீங்களே. தெய்வம்தாங்க நீங்க. எங்க வாத்தியாருக்கு எத்தனை நல்ல மனசுன்னு நினைக்க நினைக்க எவ்வளவு சந்தோ ஷமா இருக்கு தெரியுமா... நீங்க சொல்லிட்டுப் போயி ருந்தா ஆரத்தி கரைச்சு தயாரா வச்சிருப்பேன். பாவம், இதுவா வந்து சாவி கேட்டுது. யாரு என்னான்னு கேட்ட துக்கு அப்புறம்தான்...''

''இதெல்லாம் என்ன...' என்பது போல சத்யன் அவளைப் பார்க்க,



'தயவு செஞ்சு குட்டை உடைச்சிடாதீங்க' என்பது போல அவள் பார்வையில் கெஞ்சியபடி முகுந்தனைத் தூக்கி முத்த மழை பொழிகிறாள்...

''என் கண்ணு... என் ராஜா... என்னடா அப்படிப் பார்க்கறே... நாந்தாண்டா உங்க அம்மா...''

குழந்தை, நம்பாமல் அவளையே உறுத்துப் பார்க்கிறான்.

''நிசமாவா, அப்பாதான் அம்மா செத்துட்டதா சொன்னாரே...''

''அவருக்கு என் மேல கோவம். அதான். அப்பா கிட்ட, அம்மா பாவம் கோவிச்சுக்க வேணாம்னு சொல்லுடா கண்ணா...'

அடுத்த வீட்டுக்காரி நிலைமையைப் புரிந்து கொண்டு நாசூக்காய் நகர...

அவசரமாய் கதவைத் தாளிட்டு விட்டு வந்த சத்யன் கோபத்துடன் உறுத்துப் பார்க்க...

குழந்தையை இறக்கி விட்டவள், சத்யனின் கால்களில் விழுந்து வணங்குகிறாள்.

''என்னது இதெல்லாம்...''

''தயவு செஞ்சு, என்னை மன்னிச்சிடுங்க. உங்க வீட்டுல உரிமை கொண்டாடிட்டு நான் வரலை. அபீதா ஏத்துக்க மறுத்த இடத்தை எனக்குக் கொடுக்கக் கூடா தான்னு பிச்சை கேட்க வந்திருக்கேன். உங்களாலே அவளை மறக்க முடியாது. புதுசா இன்னொருத்திய ஏத்துக்கவும் முடியாது. அப்படி முடிஞ்சிருந்தா இத்தனை வருஷம் தனிமரமா, இந்தப்பிள்ளைய வச்சுக்கிட்டுத தவிச்சிருக்க மாட்டீங்க... நீங்க என்னைப் பொண்சாதியா நடத்த வேணாம். ஆனா ஊர் பார்வைக் காக மாத்திரம், எனக்கு அந்த அந்தஸ்தைத் தாங்க. உங்க பிள்ளைக்கு அம்மாவா, உங்களுக்கு ஒரு வேலைக்காரியா, காலம் முழுக்க இருந்திட்டுப் போறேன்...''

''இதப்பாருங்க. உங்க அனுமதி இல்லாமலேயே உங்க மனைவிங்கற உரிமைய நான் எடுத்துக் கிட்டேனேன்னு தப்பா நினைக்காதீங்க. எனக்கு ஒரு

பாதுகாப்பு தேவை, எனக்கு பிடிக்காம, வயிறு வளர்க்க வேறு வழி தெரியாம பங்காரம்மா பின்னாடி வந்தவ நான். அந்த வாழ்க்கைக்கு இது சொர்க்கம். இது அபீதாவுக்குப் புரியலை...எனக்கு மட்டும் வீடு, வாசல், பிள்ளை புருஷன் எல்லாம் இருந்தா...இந்த மாதிரி ஒரு தொழிலுக்கு வந்தே இருக்கமாட்டேன்...

எத்தனையோ பேருக்கு படுக்கை அறையில் மட்டும் பெண்டாட்டியா வாழ்ந்துட்டேன். அதுக்குப் பரிகாரமா இங்கே, வெளிப்பார்வைக்கு மட்டும் உங்க பெண்டாட்டியா இருக்கேன். உங்க படுக்கை அறைக்குள்ள தப்பித் தவறி கூட நுழைஞ்சு அதோட புனிதத்தைக் களங்கப் படுத்த மாட்டேன்...என்னை நம்புங்க...

எனக்கு நல்லா சமைக்கத் தெரியும். வீட்டு வேலை எல்லா கவனிப்பேன். குழந்தைய என் பொறுப்புல விடுங்க. அவனை ஒழுங்கா வளர்க்க வேண்டியது என் கடமை...இத்தனைக்கும் பதிலா, கூலியா, உங்க கிட்ட நான் கேட்கறது ரெண்டு வேளை சோறு இருக்க இடம், உங்க மனைவிங்கற பாதுகாப்பு...பேசாம நின்னா எப்படிங்க... மாட்டேன்னு சொல்லிடாதீங்க...''

அவள் கைகளைப் பிசைந்தபடி கெஞ்ச...

அவன் திகைத்துப் போய் நிற்க...

'ஏம்பா, அம்மா மேல இன்னும் கோவம் தீரலையா... பாவம்பா அம்மா. இனிமே நம்மை விட்டுட்டுப் போக மாட்டாங்க இல்லையாம்மா...''

குழந்தை முகுந்தன், ஜலஜாவின் கண்களைத் துடைத்து, கன்னத்தில் அழுத்தமாய் தன் இதழ்களைப் பதிக்கிறான்...

கள்ளமில்லாத அந்த இதயம்-ஜலஜாவை தன் தாயாக சுவீகரித்துக் கொண்டபின்...

சத்யமூர்த்தி எதிர்த்துச் சொல்ல என்ன இருக்கிறது...

அவளது வரவை மெல்லிய புன்னகையால் அங்கீகரிக்கிறான் அவன்.

(நிறைகிறது)

சென்னை மாவட்ட மைய நூலகம்
31452
4818025